# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 362 | வள்ளுவர் ஆண்டு 2047 | கார்த்திகை 07, செவ்வாய்க்கிழமை 22.11.2016




அண்ணை நல்லா நம்பி ஏமாந்து போனார் போல...

## ஆட்சியாளர்களை அதிகம் நம்பாதீர்

### மக்களுக்கு மனோ கணேசன் எச்சரிக்கை

கொழும்பு, நவம்பர் 22

நாட்டு நடப்புக்கள் நல்லதாக இல்லை. ஆட்சியாளர்கள் அள்ளி வீசும் வாக்குறுதிகள், உத்தரவாதங்களை அளவுக் கதிகமாக நம்பி ஏமாந்து விடவேண்டாம். தேசிய இனப்பிரச்சினை தீராத வரை நாட்டின் எந்தப் பிரச்சினையும் தீராது.

இவ்வாறு பகிரங்கமாகத் தெரிவித்தார் தேசிய சக வாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சர் மனோ கணேசன்.



சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பு விடுதியில் நேற்று இடம்பெற்ற உண்மை மற்றும் நல்லிணக்கத்துக்கான மக்கள் ஒன்றியத்தை ஆரம்பித்துவைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இதில் உரையாற்றும் போதே » 23

## மாவீரர் வாரம் நேற்று ஆரம்பம்

### பகிரங்க நிகழ்வுகளுக்கு அரசு தடை



கோப்புப் படம்

யாழ்ப்பாணம், நவ. 22

தமிழீழ இலட்சியத்துக்காகப் போராடி - களமாடி வீரச்சாவடைந்த மாவீரர்களை - வீரமறவர்களை நினைவு கூரும் மாவீரர் வாரம் நேற்று ஆரம்பமாகியது. இந்த நிலையில் » 06

## 3 நாள்களில் 268 மி.மீ. மழை வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ். குடாநாட்டில் கடந்த மூன்று நாள்களில் மாத்திரம் 268 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பெறப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை இரவு மாத்திரம் 138 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக, » 06

## அண்ணன் – தம்பி சபையில் சண்டை

யாழ்ப்பாணம், நவ. 22

சிறிலங்கா சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகேயும், அவரது சகோதரரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆனந்த அளுத்கமகேயும் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் நேற்றுச் சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. » 06

## சாரதிகளுக்கு ரூ.25, 000 தண்டம் விதிக்கலாம்

யாழ்ப்பாணம், நவ. 22

வாகனச் சாரதிகளுக்கு எதிரான 6 வகையான குற்றச்சாட்டுக்களுக்கு தண்டம் அறிவிடுவதை 25 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது என்று தனியார் » 21

### கூட்டமைப்பினர் மீது தாக்குதல்

## தப்பிய ஈபிடிபியினருக்கு பன்னாட்டுப் பிடியாணை

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாணம் - தீவகத்தில் தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் மீது ஈ.பி.டி.பியினர் மேற்கொண்ட தாக்குதல் தொடர்பான வழக்கில் தலைமறைவாகியுள்ள இரண்டு சந்தேக நபர்களைப் பன்னாட்டுப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யுமாறு அனைத்துலகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அத்துடன், சந்தேகநபர்கள் நாட்டை விட்டுவெளியேறியமை தொடர்பான அனைத்துத் தகவல்களையும் முன் வைக்குமாறு குடிவரவு–குடியகல்வுத் திணைக்களப் » 21

## போராளிகளுக்கு மகிந்த கொடுத்த கடனால் சிக்கல்

யாழ்ப்பாணம், நவ. 22

கடந்த ஆட்சிக் காலத்தில் முன்னாள் போராளிகளின் உரிய விவரங்கள் இன்றி வழங்கப்பட்ட கடன்களை மீளப் பெற்றுக் கொள்வதில் இடர்ப்பாடு காணப்படுகின்றது. அதனைப் பெற் » 21

## அமைச்சின் செயலர் திடீரென இடமாற்றம்

### பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு இணங்க மறுத்தமை காரணமா?

யாழ்ப்பாணம், நவ. 22

மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி அந்தப் பொறுப்பிலிருந்து திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள் » 21

## சம்பந்தனின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### அரசிடம் தெரிவித்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவ. 22

கூலிக்குக் கொலை செய்யும் சூழ்நிலை மீண்டும் உருவாகும் நிலை இருப்பதால், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அரசிடம் நேற்றுக் கோரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிநேசன். » 21

## அதிகாலை கதவு உடைத்து 36 பவுண் நகை கொள்ளை

### முழங்காவிலில் நேற்றுச் சம்பவம்

யாழ்ப்பாணம், நவ. 22

கிளிநொச்சி மாவட்டம் முழங்காவில் பகுதியில் நேற்று அதிகாலையில் வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்த கொள்ளையர்கள் 36 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டதோடு வீட்டாரின் மோட்டார் சைக்கிளையும் பறித்துக் கொண்டு தப்பிச் சென்றனர்.

முழங்காவிலில் வசிக்கும் பூநகரிப் பிரதேச பாடசாலையின் ஊழியர் ஒருவரின் வீட்டில் இந்தக் கொள்ளை இடம்பெற்றதாகப் பொலிஸார் » 25

### கடமையிலிருந்த பொலிஸார் மீது

## மிளகாய் தூள் தூவிவிட்டு துப்பாக்கி பறிக்க முயற்சி

பருத்தித்துறை, நவ. 22

வடமராட்சி முள்ளி முதன்மை வீதியில் பாதுகாப்பு மற்றும் வீதித் தடை கண்காணிப்பு நடவடிக்கையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது மிளகாய்த் தூளைத் தூவிவிட்டுத் துப்பாக்கியைப் பறிக்க முயன்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

வடமராட்சி–கொடிகாமம் முதன்மை வீதியில் நேற்றைய தினம் அதிகாலை 4.30 மணிக்கு வீதித் » 21

## சித்திரவதைக்குள்ளான கனடா வாழ் தமிழருக்கு இழப்பீடு வழங்கப் பரிந்துரை

யாழ்ப்பாணம், நவ. 22

கனடாவில் இருந்து இலங்கைக்குச் சென்ற போது, கைது செய்து தடுத்து வைக்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்ட தமிழருக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழு பரிந்துரைத்துள்ளது.

சித்திரவதைகளுக்கு எதிரான » 21

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் சகல இனங்களுக்கும் பாதுகாப்பாம்

கொழும்பு, நவ.22

இன, மத, குல பேதமின்றி நாட்டிலுள்ள அனைத்து மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாகபயங்கரவாதத்துக்கு எதிரான சட்டவரைவு அமையும் என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க நேற்றுச் சபையில் தெரிவித்தார்.

பன்னாட்டு பயங்கரவாத அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கும் வகையிலும், தேசிய பாதுகாப்பைக் கருத்துக்கொண்டும் இந்தச் சட்டவரைவு தயாரிக்கப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற 2017 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் சட்டம், ஒழுங்கு அமைச்சுக்க » 21

## கூட்டமைப்பு எதிர்ப்பதால் எனக்குக் கவலை இல்லை

### பொருத்து வீட்டுத் திட்டம் குறித்து அமைச்சர் சுவாமிநாதன்

யாழ்ப்பாணம், நவ. 22

பொருத்து வீட்டுத் திட்டத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக்கொள்ள மறுப்பது - எதிர்ப்பது தொடர்பில் எனக்கு எந்தவித கவலையும் இல்லை.

இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

வடக்கில் மேற்கொள்ளப்படவுள்ள பொருத்து வீட்டுத் » 24

## அமெ. போன்று இங்கு நடக்காது

### கோத்தாவுக்கு கூறினார் டிலான்

யாழ்ப்பாணம், நவ. 22

அரசியல்வாதி என்ற பின்புலம் இல்லாமல் அமெரிக்காவில் டொனால்ட் டிரம்ப் ஜனாதிபதியானது » 24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிங்கள - முஸ்லிம் கலவரத்துக்கு தூபம்

## கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர் தவம் குற்றச்சாட்டு



அம்பாறை, நவ.22
அண்மைக் காலமாக நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்களையும், திட்டமிட்ட நடவடிக்கைகளையும் பார்க்கும்போது ஒரு சிங்கள - முஸ்லிம் கலவரத்துக்குத் தூபமிடப்படுவதைப் போலவே அமைந்துள்ளது எனக் கிழக்கு மாகாண சபை மு.கா. உறுப்பினர் தவம் தெரிவித்தார்.

இது தொடர்பில் நேற்றுக் கருத்து தெரிவித்த அவர், ஆட்சி மாற்றத்தின் பின்னரும் முஸ்லிம்கள் மீதான இலக்கு தொடர்கின்றது. குறிப்பாக, இரண்டு வாரங்களாக நாட்டில் இடம்பெற்று வரும் சம்பவங்களும், திட்டமிட்ட நடவடிக்கைகளும் அதிகரித்துள்ளன.

இன்று நாட்டிலுள்ள சூழ்நிலையைப் புரிந்து கொண்டு முஸ்லிம்கள் விழிப்பாகவும், நிதானமாகவும் இருக்கவேண்டும்.

குறிப்பாக, சமூக வலைத்தளங்களில் வீணான செய்திகளையோ அல்லது மிகப்படுத்தல்களையே பதிவேற்றாதீர்கள்.

ஆத்திரமூட்டும் வார்த்தைகள் மற்றும் பிற இனங்களை இம்சிக்கும் வகையிலான வசனங்களையும் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

அதேபோன்று, வீணாக முஸ்லிம் தலைமைகளை விமர்சிக்காமல், அவர்களை ஆக்கபூர்வ நடவடிக்கைகளுக்கு தூண்டவேண்டும்.

தமிழர்களின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னர், அடுத்த இலக்காக முஸ்லிம்கள் குறிவைக்கப்பட்டதை கடந்த ஆட்சிக் காலத்தில் கண்டோம் - என்றார். (த-ய -48)



# இரணைமடுச் சீரமைப்பை பார்வையிட்டார் சம்பந்தன்

யாழ்ப்பாணம், நவ. 22
கிளிநொச்சி மாவட்டத்துக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கிளிநொச்சி மகா வித்தியாலயம் மற்றும் இரணைமடுக் குளப் புனரமைப்பு தொடர்பான பணிகளை நேரில் சென்று பார்வையிட்டார்

கிளிநொச்சி மகா வித்தியாலயத்துக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர், பாடசாலையின் வளங்கள் தொடர்பாகவும் பாடசாலைக்குச் சொந்தமான காணி, இராணுவத்திடம் உள்ளமை தொடர்பாகவும் ஆராய்ந்தார். இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பாடசாலைக் காணியை மீட்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அவர் இதன் போது உறுதியளித்தார்.

இதன் பின்னர் இரணைமடுக் குளப் புனரமைப்பு பணிகள் தொடர்பில் ஆராய்ந்தார். மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவருக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. இதன் பின்னர் புனரமைப்பு வேலைகளை நேரில் சென்று எதிர்க்கட்சித் தலைவர் பார்வையிட்டார். (த-5-6-34)

# செப்ரெம்பர் வரை 28 ,538 பெரிய குற்றங்கள்

## அவற்றில் 17, 933 க்கே தீர்வு

யாழ்ப்பாணம், நவ. 22
நடப்பு ஆண்டில் செப்ரெம்பர் மாதம்வரை 28 ஆயிரத்து 538 பெரிய குற்றங்கள் பொலிஸில் பதிவாகியுள்ளபோதும், 17 ஆயிரத்து 933 குற்றங்களுக்கே தீர்வு காணப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றகரமான நிலைப்பாடு என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க சபையில் நேற்றுத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

2015 ஆம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து செப்ரெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரையில் 30ஆயிரத்து 767 பெரிய குற்றங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 6 ஆயிரத்து 168 பிரச்சினைகளுக்கே தீர்வு வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையில் 28 ஆயிரத்து 538 பெரிய குற்றங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 17 ஆயிரத்து 933 குற்றங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

இதனைவிட, சிறு முறைப்பாடுகள், நபர்களுக்கு எதிரான சிறு குற்றங்கள், சொத்துக்களுக்கு எதிரான சிறு குற்றங்கள், சிறு நியதிக் குற்றங்கள் உள்ளடங் கலாகக் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் வரையில் 8 லட்சத்து 73 ஆயிரத்து 247 குற்றங்கள் பதிவாகியுள்ளன. அவற் றில் 8 லட்சத்து 23 ஆயிரத்து 173 குற்றங்களுக்கே தீர்வு வழங்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை 8 லட்சத்து 97 ஆயிரத்து 63 சம்பவங்கள் பதிவாகியுள்ள நிலையில், அவற் றில் 8 லட்சத்து 57 ஆயிரத்து 552 சம்பவங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது - என்றார். (த-5)



# கிழக்கில் கடும் மழை

மட்டக்களப்புமாவட்டத்தில்தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக மண்முனை தென் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பண்டாரியாவெளி, படையாண்டவெளி ஆகிய கிராமங்களில்உள்ளவீடுகளுக்குள் நீர் புகுந்துள்ளதால் சில குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

மகிழடித்தீவு, அம்பிளாந்துறை, முதலைக்குடா, கடுக்காமுனை, கொக்கட்டிச்சோலை, பட்டிப்பளை, முனைக்காடு, அரசடித்தீவு ஆகிய கிராமங்களில் உள்ள வயல்களும் நீரில் மூழ்கியுள்ளதுடன் ஆற்றை அண்டிய பகுதியில் உள்ள வீடுகள் சிலவற்றிலும் நீர் புகுந்துள்ளது. வீதிகள் சிலவும் நீரில் மூழ்கியுள்ளன.

மழை தொடருமாகவிருந்தால் பிரதேசத்தில் இருக்கின்ற பல வீதிகள் நீரால் மூழ்கக்கூடிய அபாயம் உள்ளது. (த-ய)

# புத்தளத்தில் இயங்கிவரும் மன்னார் பாடசாலைகள் கொழும்பு அரசின் கீழ்

மன்னார், நவ. 22
மன்னார் கல்வித் திணைக்களத்தின் கீழ் புத்தளத்தில் இயங்கிவரும் இணைந்த பாடசாலைகளின் கல்வி வசதிகளையும் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளையும் குறிப்பிட்ட காலத்துக்கு நடுவண் அரசு பொறுப்பேற்றுள்ளது.

வடக்கு மாகாண சபையின் நிதிச் சுமையைக் குறைப்பதற்காகவே தாம், அமைச்சரவைக்குச் சமர்ப்பித்த பத்திரம் அங்கீகரிக்கப்பட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

மன்னார் மாவட்டச் செயலர் எஸ்.தேசப்பிரியவின் ஏற்பாட்டில் இணைத் தலைவர்களான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் ரிசாத் பதியுதீன் நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன், கே.கே.மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் உரையாற்றிய அமைச்சர் ரிசாத் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் புத்தளத்தில் அமைக்கப்பட்ட பாடசாலைகளில் ஆயிரத்து 300 மாண வர்கள் கல்வி கற்கின்றனர். இந்தப் பாடசாலைகளில் கணிசமான ஆசிரியர்களும் கல்வி கற்பிக்கின்றனர்.

வடமாகாணத்தில் சமாதானச் சூழல் ஏற்பட்டபோதும் இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் தமது தாயகத்தில் மீளக் குடியேறுவதிலுள்ள தடைகள் எல்லோருக்கும் தெரியும். எடுத்த எடுப்பில் இந்தப் பாடசாலைகளை மூடிவிட்டு மாணவர்களை அந்தரத்தில் விட முடியாது. புத்தளத்தில் இயங்கும் இந்தப் பாடசாலைகளை வடக்கு மாகாண சபை நிர்வகிப்பதால், தமக்கு பெரும் சிக்கல்கள் உள்ளன என்று சுட்டிக் காட்டப்பட்டது.

இதனால் [illegible] குறைப்பதற்காக குறிப்பிட்ட காலத்துக்கு இந்தத் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டது - என்றார். (த-4-56)

# கொலையுண்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு புதிய வீடுகள்

## பெற்றோருடனான சந்திப்பில் அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ 22
படுகொலை செய்யப்பட்ட இரு மாணவர்களின் குடும்பங்களுக்கும் எனது அமைச்சின் ஊடாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். இரு வீடுகளையும் கட்டுவதற்கு இராணுவத்தினருடன் பேசியுள்ளேன். அதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர். எனது அமைச்சின் ஊடாக வீடுகளைக் கட்டும் பணிகளை இராணுவத்தினர் மேற்கொள்வார்கள் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் பெற்றோர்களை அமைச்சர் நேற்று பல்கலைக் கழகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அமைச்சர் அங்கு மேலும் கூறுகையில்,

படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் குடும்பங்களுக்கு உடனடியாகச் செய்யக் கூடிய உதவிகளை வழங்குவதாக தெரிவித்திருந்தேன். முதலில் எனது அமைச்சின் ஊடாக இரு குடும்பங்களுக்கும் இராணுவத்தின் கட்டுமான உதவிகளுடன் வீடுகளை அமைத்துக் கொடுக்கத் தீர்மானித் துள்ளேன். கிளிநொச்சியில் வசித்த பல்கலைக் கழக மாணவனின் குடும்பத்தினருக்குச் சொந்தமாகக் காணியுள்ளது. எனவே அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. அதேபோல சுன்னாகத்தில் வசித்த பல்கலைக்கழக மாணவனின் குடும்பத்தினருக்கு அங்கு சொந்தமாகக் காணியில்லை. ஆகவே அவர்களுக்குரிய உதவிகளை மேற்கொண்டு வீடு அமைக்கும் பணி நடைபெறும் - என்றார்.

இதன்போது படுகொலை செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்களில் ஒருவர், தமது பிள்ளைகளின் படுகொலைக்கு நீதி கிடைப்பது தொடர்பில் தமது கஸ்டங்களைத் தெரிவித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர், படுகொலை செய்யப்பட்ட மாணவர்களுக்கு உரிய நீதி கிடைக்கும். நாம் கட்டித்தரவுள்ள வீடுகளை நீங்கள் ஏற்கவில்லை என்றால் சொல்லுங்கள். அதனை நான் தவிர்க்கின்றேன். ஏனெனில் வீடு வேண்டாம் என்பவர்களுக்கு நாம் வீடு கட்டிக்கொடுக்க இயலாது - என்றார்.

அதன்போது படுகொலை செய்யப்பட மாணவர்களின் பெற்றோர்களில் ஒருவர், உங்களுக்கு வீடு வேண்டும் என்றால் வீடு கட்டித் தருகின்றேன். வேண்டாம் என்றால் கட்டித்தரவில்லை எனக் கதைப்பது சரியல்ல. நாம் எமது பிள்ளைகளைப் பறிகொடுத்துவிட்டு தவித்துக்கொண்டிருக்கின்றோம். எனது மூத்த மகன் இராணு வத்தினரால் கடத்திச் செல்லப்பட்டுக் காணா மற்போயுள்ளான். நாங்கள் வன்னியில் எவ்வளவோ குண்டுவீச்சுக்களிலிருந்து எமது பிள்ளைகளைக் காப்பற்றினோம். ஆனால் இப்போது இரண்டாவது மகனும் இப்படிப் பொலிஸாரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளான் - என்றார்.

இதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர், உங்கள்பிள்ளைகளுக்குக் கிடைக்க வேண்டிய நீதியை நீதிமன்றமும் இந்த அரசும் வழங்கும். இராணுவம்வீடு கட்டித்தருவதை நீங்கள் விரும்பவில்லை என்றால் நான் கட்டுமானத்துக்கு மாற்று ஆள்களை ஏற்பாடு செய்யலாம். அல்லது வேறு தொழிலாளர்கள் மூலம் ஏற்பாடு செய்கின்றேன் - என்றார்.

இந்தச் சந்திப்பில் யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர், பேராசிரியர்கள், உயிரிழந்த மாணவர்களின் குடும்பத்தினர், மாணவ ஒன்றியங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (த-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை அர்த்த வசனங்களால் நாடாளுமன்றில் சிரிப்பொலி

கொழும்பு, நவ.22
மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் வாசு தேவ நாணயக்காரவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் சபையில் நேற்று சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ கிழட்டு வௌவால் என்று பிரதமர் ரணில் விமர்சித்ததால் சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடியது. ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் குழுநிலைவிவாதம் ஆரம்பானது. சட்டம் – ஒழுங்கு, நீதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை வகுப்பு ஆகிய அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டை அங்கீகரிப்பதற்கான விவாதத்தை ஜே.வி.பியின் உறுப்பினர் விஜித்த ஹேரத் ஆரம்பித்து வைத்து உரையாற்றினார்.

இந்த விவாதத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ, தேசிய அரசின் வரவு–செலவுத் திட்டம் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்தார். அத்துடன், சர்ச்சைக்குரிய பிணை முறி விவகாரம் பற்றியும் அவர் கருத்து வெளியிட்டார்.

பிணைமுறி விவகாரம் குறித்த விசாரணைகள், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அந்தப்பதவியில் இருக்கும்வரை நடக்கப்போவதில்லை. முக்கிய நிறுவனங்கள் அவரின் கீழேயே இயங்குகின்றன. ஆகவே, பிரதமர் பதவி விலக வேண்டும் என்று வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார். இதற்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கடும் ஆட்சேபனை வெளியிட்டனர். இதற்கு வாசுவும் பதிலடி கொடுத்ததால் சபையில் சர்ச்சை ஏற்பட்டது.

இதையடுத்து உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் விக்டர் ஹப்பு ஆசி, கடந்தகாலங்களில் ராஜபக்சாக்களுக்கே 70 சதவீத நிதி ஒதுக்கப்பட்டது எனக் கூறி, பெயர்களையும் வெளியிட்டார். இதற்கு முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச கடும் ஆட்சேபனை வெளியிட்டார். வாசுதேவ நாணயக்கார உட்பட எதிரணி உறுப்பினர்கள் கூச்சலிட ஆரம்பித்தனர்.

இதன்போது எழுந்த பிரதமர் எனது உரையின்போது விரிவான விளக்கத்தை வழங்கவுள்ளேன். கிழட்டு வௌவாலுக்கு வயாகரா கிடைத்ததுபோல் இவர் செயற்படுகிறார் என்று வாசுதேவ நாணயக்காரவை நோக்கி குறிப்பிட்டார். இதனால், சபையில் பெரும் சிரிப்பொலி ஏற்பட்டது. வாசுதேவும் சிரித்தப்படியே பதிலடி கொடுத்தார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல்ல உரையாற்றும்போதும், அவருக்கும் ஆளுங்கட்சி உறுப்பினர்களுக்குமிடையில் கடும் சொற்போர் மூண்டது. இரட்டை அர்த்த வார்த்தைப் பிரயோகங்களும் தாராளமாகவே இருந்தன.

சிறைக்கைதிகளின் உரிமைப் பற்றி பேசப்பட்டது. கைதியொருவர் சிகிச்சைக்குச் செல்லும்போது அவரை திருப்பி அனுப்புவது நியாயமா? என்று கெஹலிய கேள்வி எழுப்பும்போது, குறுக்கீடு செய்த அமைச்சர் சரத்பொன்சேகா தனக்கு இப்படி அநீதி நடக்கும்போது நீங்கள் எங்கியிருந்தீர்கள் என்று கேட்டார்.

இதற்கு பதிலளித்த கெஹலிய, உங்களுக்கு நோய் இருக்கவில்லை. இருந்த வியாதிக்கும் மகிந்த மருத்துவம் செய்துவிட்டார். தற்போது இருப்பது வேறு வகையான நோய். அதற்கு மருந்து இல்லை. என்று ஹெகலிய தெரிவித்தார். இதையடுத்து பொன்சேகா மீண்டும் குறுக்கீடு செய்ததால் சர்ச்சை சூடு பிடித்தது. ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, இவர் (கெஹ லிய) வேலி பாயப்போய் ஏற்பட்ட சிக்கலுக்கு சிகிச்சையளிப்பதற்கு மக்களின் பணம் பயன்படுத்தப்பட்டது–என்றார்.

அதன்பின்னர் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, கெஹலிய எங்கு பாய்ந்தாலும் எமக்கு பரவாயில்லை. ஆனால், சிகிச்சைக்காக மக்களின் பணம் 109 லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. இதைத்தான் தவறு எனக் கூறுகிறோம் என்றார்.

இதற்கு சிரித்தப்படியே பதிலளித்த கெஹலிய, ஆண் விபச்சாரியாக இருப்பதைவிட நான் செய்தது மேலான விடயம். வயது போன ஓரிருவரைத் தேடித்தருகிறேன். அப்போது உங்களுக்கு ஏற்பட்டுள்ள அந்த நோய் தீர்ந்துவிடும் என்றார்.

சரி உறுப்பினரே, நீங்களும் கண்டி மாவட்டம். நானும் அதே மாவட்டம். என்னிடமும் ஒரு கேள்வி இருக்கிறது. அதாவது, கதவு இருக்கும்போது, எதற்காக ஜன்னலினால் பாய்ந்தீர்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் ஆனந்த அளுத்கமகே எழுப்பிய கேள்வியால் சபையில் மேலும் சிரிப்பொலி ஏற்பட்டது.

இதற்கு பதிலளித்த ஹெகலிய, உங்களுக்கு இல்லாத அவசரம் எனக்கு இருக்கிறது. நீங்கள் அந்த வேலைக்கு தயாராவதற்கு 3 மணிநேரம் எடுக்கும். எனக்கு அப்படியில்லை என்று கூறிவிட்டு தனதுரையை நிறுத்திக்கொண்டார். (வ–5)

## நாய்க் கடிக்கு இலக்கான வயோதிபர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், நவ. 22
தெரு நாய் கடித்ததற்கு சீரான முறையில் சிகிச்சை பெற்றுக் கொள்ளாமையால் வயோதிபர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் – அரியாலைப் பகுதியில் வாழ்ந்து வரும் நான்கு பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரை அன்பழகன் (வயது–64) என்ற வயோதிபரே உயிரிழந்தார்.

ஐந்து வருடங்களுக்கு முன் தெரு நாய் கடித்துள்ளது. அதனை அவர் யாரிடமும் சொல்லவில்லை. உரிய சிகிச்சையையும் அவர் பெறவில்லை. நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் நித்திரையில் இருந்து எழுந்த அவர் மூச்சு விடுவதற்கு சிரமப்பட்டார். இதனால் யாழ். போதான வைத்திய சாலையில் அவர் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனளிக்காது அன்றைய தினமே வயோதிபர் உயிரிழந்தார் என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணையை மேற்கொண்டார். (வ–7)

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 37
சீட்டிழுப்பு திகதி 2016.11.21
வெற்றி இலக்கங்கள்
08 14 27
34
7,276,700/-
66
9638906

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1316
சீட்டிழுப்பு திகதி 2016.11.21
வெற்றி இலக்கங்கள்
10 20 33 50 Z
ரூ. 12,530,060/-
6900715 4740006 5847729 3572475

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 579
சீட்டிழுப்பு திகதி 2016.11.21
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
45 46 47 71 R
சுப்பர் ஜக்பொட்
ரூ.40,000,000/=

# இனவாதியில்லை என்றால் மைத்திரிபால அரசியல் கைதிகளை விடுவிக்கவேண்டும்

## அருட்தந்தை சக்திவேல் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 22
ஜனாதிபதி இனவாதி இல்லை என்றால், நாட்டில் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்றால், உடனடியாக அரசியல் கைதிகள் அனைவரையும் எந்தவிதமான நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய இயக்கத்தின் செயற்பாட்டாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள, தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி நாடு முழுவதும் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் கையெழுத்துக்கள் பெறப்பட்டன. இவ்வாறு பெறப்பட்ட கையெழுத்துக்களை நாளை புதன்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் கையளிக்கவுள்ளோம். நல்லாட்சியில் ஜனாதிபதிகூட இனவாதமாகச் செயற்படுகின்றாரா என்பது எங்களுடைய கேள்வியாக உள்ளது. வடக்கு கிழக்கு மக்கள் நல்லாட்சியை நம்பி வாக்களித்தனர். இந்த நாட்டில் இனப்பிரச்சினைக்கு தீர்வு வேண்டும் – என்றார். (வ–5)

## வெலிக்கடைச் சிறை படுகொலை

# விசாரணை அறிக்கையை வெளியிட முடியாதாம்

யாழ்ப்பாணம், நவ. 22
வெலிக்கடைச் சிறைச்சாலை கொலைகள் தொடர்பில் மகிந்த காலத்தில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிட்டால் எதிர்கால விசாரணைக்கு தடை ஏற்படும். சாட்சிகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படும். அதனை வெளியிட முடியாது.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் இடம்பெற்ற படுகொலை தொடர்பில் விசாரணை செய்து அறிக்கை முன்வைப்பதற்கு ஆணைக்குழு நியமிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துவிட்டன. அந்த ஆணைக்குழுவின் அறிக்கை எங்கே? ஏன் அவை இன்னமும் பகிரங்கப்படுத்த வில்லை என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த நீதி அமைச்சர், அந்த அறிக்கையை நாம் பார்த்தோம். அதில் உருப்படியான எதுவும் இல்லை. அறிக்கையில் நியாய தன்மையும் இல்லை. இது தொடர்பில் நீதியான அறிக்கையை முன்வைக்க தற்போது மூவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதன் அறிக்கை பகிரங்கப்படுத்தலாம் – என்றார். (வ–5)

## குடாநாட்டில் சில இடங்களுக்கு இன்று மின்வெட்டு

யாழ்ப்பாணம், நவ.22
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் யாழ்.பிரதேசத் தில் – பாரதிவீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்தார். (வ–10)

பாராட்டி வாழ்த்துகின்றோம்


திரு. இ.ஸ்ரீரஞ்சன் B.com
கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று (22.11.2016) நடைபெறும் SLAIT இன் பட்டமளிப்பு விழாவில் Dip in Acc பட்டத்தினைப் பெறும் இரத்தினசபாபதி ஸ்ரீரஞ்சன் அவர்கள் மேலும் பல பட்டங்கள் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: உமாகாந்தன் ராதிகா
ஜெகநாத் ஜீவகௌரி
(J 6284) (16,17,19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி சிவக்கொழுந்து சின்னத்தம்பி



நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவக்கொழுந்து சின்னத்தம்பி கடந்த (19.11.2016) சனிக்கிழமை அகால மரண மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாயகர்-சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிர்காமு-முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் சிவகுமாரின் அன்புத் தாயாரும் விஜயாவின் அன்பு மாமியும் லக்சனாவின் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, நடேசு மற்றும் வேலாயுதம், பகவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை, முருகேசு, நாகமுத்து, வேலுப்பிள்ளை, தவமணி, வடிவேலு, மனோன்மணி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் வசந்தா(பிரான்ஸ்), சாந்தா, சிவராசா (சுவிஸ்), றகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் குமாரசாமி (பிரான்ஸ்), சபாரத்தினம், சாந்தினி (சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பெறாமக்களும் தனுசா-மயூரன் , உசன், சுவிச்சன், தர்சிகா-சுசன், தர்சிகன், அபினாஸ், அபிஜன் ஆகியோரின் பேர்த்தியும் அஸ்லி, கஸ்சிகா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2016) புதன்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
302, கோயில் வீதி,
நல்லூர்.
021 2054029

# கொட்டித் தீர்த்த மழையால் வெள்ளத்தில் தாழ்நிலங்கள்

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ்.குடாநாட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொட்டித் தீர்த்த மழையால் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது.

யாழ்.நகரை அண்டிய பொம்மை வெளி, சூரியவெளி, வசந்தபுரம், நித்தியவெளி, கொட்டடி, மீனாட்சி புரம், நாவாந்துறை, எழிலூர், மகேந்திரபுரம், துண்டி ஆகியவற்றின் தாழ்ந்த பகுதிகள் வெள்ளக் காடாகக் காட்சியளித்தன.

மக்களின் குடிமனைகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்ததால் அநேகமான மக்கள் குடியிருப்புக்களை விட்டுவெளியேறியுள்ளனர்.

வலி.கிழக்கில் கோப்பாய், நீர்வேலி, சிறுப்பிட்டி, புத்தூர் ஆகிய பிரதேசங்களின் தாழ்ந்த இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. குடியிருப்புக் கிணறுகள் சிலவும் மழை வெள்ளம் உட்சென்று நிரம்பின.

இந்தப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் நெல் வயல்கள் என்பனவும் வெள்ளத் தால் சூழ்ந்து காணப்பட்டன.

அதேவேளை கனத்த மழையால் தாழ்ந்த வயல்களில் வெள்ளம் நிரம்பியுள்ளன.

அநேகமானவயல்களில்நெற்பயிர்களை வெள்ளம் மூடி யுள்ளது.

காலபோக நெற்செய்கைக்குப் போதிய மழை பெய்யாததால் பயிர்கள் வாடிய நிலையில் இருந்தன. விவசாயிகள் மழை வேண்டி ஆலயங்களில் பிரார்த்தனை பூசை வழிபாடுகளில் ஈடுபட்டனர். கொடும்பாவியும் கட்டி இழுத்தனர்.

கடந்த சனிக்கிழமை முதல் வடக்கில் பல இடங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருகின்றது. அதைடுத்து வலிகாமம் கிழக்கு தென்மராட்சி மற்றும் வலிகாமம் பகுதிகளில் உள்ள அநேகமான தாழ்ந்த வயல்களை வெள்ளம் மூடியுள்ளது.

தற்போதுவரம்புகளைவெட்டிவெள்ளத்தை அகற்றுவதில் விவசாயிகள் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியாக மழை பெய்தால் நெற்பயிர்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்று விவசாயத்திணைக்களம் தெரிவித்துள்ளது. குடாநாட்டில் மரக்கறிப் பயிர்களும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

# மாநகராட்சி மன்றத்தால் தேக்குக் கன்று நடுகை

யாழ்ப்பாணம்,நவ.22

யாழ். மாநகராட்சி மன்றத்தால் கோண்டாவிலில் உள்ள குடி தண்ணீர் விநியோக நிலைய வளாகத்தில் சுமார் 200 தேக்குக் கன்றுகள் நடப்படவுள்ளன.

இந்த தேக்கம் கன்றுகளை வனத்திணைக்களத் திடம் இருந்து பெற்று நடுவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் தெரிவித்தார். இந்த மர நடுகைக்கு முன்பாக இந்தச் சுற்றாடல் பகுதிக்கு கால்நடைகள் உட் செல்ல முடியாதவாறு பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்படவும் உள்ளன.

பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்ட பின்னர் இந்தப் பயன் தரும் தேக்கம் கன்றுகள் நடப்படும். தேவைப்படும் பட்சத்தில் மேலதிகமாகவும் தேக்கம் கன்றுகளை பெற்று நட்டு வைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## சத்தியசாயி பாபா அவதார தின விழா

பகவான் சிறி சத்தியசாயி பாபாவின் 91ஆவது அவதார தினவிழா நாளை புதன்கிழமைகாலை 8.30 மணியளவில் நடைபெறவுள்ளது. சாயி பாபாவின் அவதார நிகழ்வில் சொற்பொழிவு ஆற்றுவதற்காக கண் சத்திர சிகிச்சை நிபுணர் மு.மலரவன், தேசிய புற்று நோய் கட்டுப்பாடு நிகழ்ச்சித்திட்டத்தின் மருத்துவ அதிகாரி சி.அனுஸ்யந் தன் ஆகியோர் கலந்து கொள்வர். (ற-8)


## நல்லூர் பிரதேசசபை- வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2017

சபையானது 2017ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்கு தம்மைப் பதிவு செய்துகொள்ளவிரும்பும் வழங்குநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்கப்படவுள்ளன.

பொருள்கள் :-

1. காகிதாதிகள் எழுதுபொருள்கள்
2. அலுவலகஉபகரணங்கள் (தளபாடங்கள்)
3. சித்தமருத்துவமருந்துகள்
4. நூலகங்களிற்கான நூல்கள் 5. துணி வகைகள்
6. கட்டடபொருள்கள் (சீமெந்து,ஓடுகள்,கம்பி வகைகள்)
7. கற்கள்,மணல்
8. தீந்தைகள் வகைகள் (Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
9. நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் ஏனைய பொருள்கள்
10. வாகனஉதிரிப்பாகங்கள்,துணைப் பொருள்கள்
11. மின்வழங்குபொருட்கள்,மின்பாவனைப் பொருள்கள்
12. எரிபொருள்கள்,உராய்வுநீக்கிகள் 13. இரும்புப் பொருள்கள்
14. தீராந்திகள்,பலகைகள்,சட்டங்கள்
15. பனைமரங்கள்,சலாகைகள்
16. வாகனங்களுக்கான ரயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்
17. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
18. சுத்திகரிப்புபொருள்கள்,கிருமிநாசினிகள்
19. பாதணிகள்,தோற்பொருள்கள்
20. அலங்காரப் பொருள்கள்
21. இலத்திரனியல் பொருள்கள்

சேவைகள் :-

1. அச்சிடுதல்
2. தட்டச்சு இயந்திரம் திருத்தல்
3. மோட்டார் வாகனங்கள்,உழவு இயந்திரம் திருத்தல்
4. வாகனங்களிற்குரியூப் ஒட்டுதல்
5. ஒட்டுவேலைகள்,உலோகவேலைகள்
6. கனரகவாகனங்களின் சேவை,வாடகைக்குவிடல்
7. மின்சாதனங்கள் திருத்தம்,மீளமின்வலுவூட்டல்
8. இலத்திரனியல் சாதனங்கள் திருத்தம்
9. வாகனங்கள் சுத்திகரிப்பு
10. கோலவுடைதைத்தல்
11. கணினி,பிரதியாக்கல் இயந்திரம் திருத்தம்,சுத்திகரிப்பு
12. இறப்பர் முத்திரைதயாரித்தல்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிர்க்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் பதிவுக்கட்டணமாக ரூ.1000.00 (ஒரின் திங்களை) செலுத்தப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மூலையில் 'வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் 2017' எனக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம், 'செயலாளர்,தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை, இல.14/5, கருவப்புலம் வீதி, கோப்பாய்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப படிவங்கள் 16.12.2016ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களுக்கு 021 222 2700 அல்லது 021 300 2509 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(6/26573)(21.17.21) செயலாளர்,நல்லூர் பிரதேச சபை.

## காணி விற்பனை

யாழ்ப்பாணம் B.A தம்பிலேன் இல் 1 ¼ பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தேவை உடையவர்கள் தொடர்புகொள்ளவும்.

076 358 6029

## வீடு வாடகைக்கு தேவை

இரண்டு பெண் வைத்தியர்களுக்கு வீடு அல்லது விடுதி யாழ் மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்கு தேவை

077 790 7799, 077 729 9164

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொய்லர் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்யப்படும்.

1Kg 400/= மட்டும்

U.S.A பாம்,
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

077 868 9500

## விற்பனைக்கு

அச்சு இயந்திரம் (KORD) உடன் விற்பனைக்குண்டு.

077 652 0315

## வேலையாள்கள் தேவை

அலுவலகங்கள், வங்கிகள், பொது ஸ்தாபனங்கள், திருமண மண்டபங்கள் போன்றவற்றுக்கு சுத்திகரிப்பு சேவைக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை. யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்டோர் விரும்பத்தக்கது.

வயதெல்லை 23 - 45 வரை.

077 497 5962, 076 801 1662

## வீடு தேவை

நான்கு பேர் கொண்ட குடும்பத்துக்கு 4 அல்லது 5 அறைகள் கொண்ட வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு தேவை

077 790 7799, 077 729 9164

## வீடு, காணி விற்பனை

துன்னாலை தெற்கு, கிளான் சங்க ஒழுங்கையில் 11 பரப்புக் காணியுடனான வீடும் வளவும் உடன் விற்பனைக்குண்டு. (கிணறு, மலசலகூட வசதிகள் உண்டு.)

077 887 0351, 077 697 9799

## கோழிக்குஞ்சும் வான்கோழிக்குஞ்சும் விற்பனை

பைராஹ BAIRAHA No- I குஞ்சு.ஊர்க்குஞ்சு ரூபா 70/= மற்றும் ஒருநாள் வான் கோழிக்குஞ்சு ரூபா 150/=இற்கு பெற்றுக் கொள்ளலாம். தேவையானவர்கள் முற்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

SAHANS FARM +
Main street, Nelliady

077 995 9385

## VICTORY IN MATHS

K.K.S.வீதி (நீலாம்பரி உணவகம் அருகில்)

### ஆங்கில மொழிமூல கணித வகுப்புக்கள்

### தரம் 6 - 11

- தரம் 6 புதிய பிரிவு (2017) வகுப்புக்கள் 23.11.2016 புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கு ஆரம்பமாகின்றது.
- வகுப்புக்கள் ஆங்கில மொழிமூல நியமனம் பெற்ற ஆசிரியர்களின் வழிகாட்டலில் இடம்பெறும்.
- ஏனைய தரங்களுக்கான வகுப்புக்கள் 04.12.2016 ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும்.

077 900 0982, 077 672 7941


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தொழில்நுட்பவியல் பட்டமளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், நவ.22

இலங்கை உயர் தொழில்நுட்ப வியல் நிறுவனத்தின் 13ஆவது பட்டமளிப்பு வைபவம் இன்று கொழும்பு பண்டாரநாயக்கா பன்னாட்டு மாநாட்டு மண்டபத் தில் நடைபெறுகிறது.

யாழ்ப்பாணம்உயர்தொழில்நுட்ப வியல் மாணவர்களில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா 110 பேரும், உயர் தேசிய முகா மைத்துவடிப்ளோமா 42பேரும், உயர் தேசிய தகவல் தொழில் நுட்பவியல் டிப்ளோமா 44 பேரும், உயர் தேசிய ஆங்கில டிப்ளோமா 49 பேரும், உயர் தேசிய வணிக கற்கை டிப் ளோமா ஒருவரும், உயர் தேசிய பொறியியல் (சிவில்) டிப்ளோமா 30 பேரும், உயர் தேசிய பொறியியல் (மின்னியல்) டிப் ளோமா 11 பேரும், உயர் தேசிய சுற்றுலாத்துறை மற்றும் முகா மைத்துவ டிப்ளோமா ஒரு வரும் பெறுகின்றனர் என்று அறிவிக்கப்பட்டது. (வ-எ)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.
## கேள்வி அறிவித்தல் - 2016

2016 ஆம் ஆண்டிற்கான சபைநிதியில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ள கீழ்க் காணப்படும் வேலை களுக்கு பின்வரும் இக்ராட் பதிவுபெற்ற ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றது.

| தொ. இல | வேலையின் விவரம் | வேண்டப் படும் தரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்.ரூபா) | மீளளிக்கப் படும் கேள்வி வைப்பு | மீளளிக்கப்படாத கேள்விப் படிவ கட்டணம் (NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 01 | மூளாய், பித்தனைச் சுடலை வீதி புனரமைத்தல் (Ijanar Road) | C9 அல்லது அதற்கு மேல் (Road) | 1.00 | 10000.00 | 1,000.00 |
| 02 | தொல்புரம் மேற்கு, அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை வீதி புனரமைத்தல் | C9 அல்லது அதற்கு மேல் (Road) | 1.20 | 12,000.00 | 1,000.00 |
| 03 | சுழிபுரம்,நெல்லியான் வைரவர் கோவில் வீதி புனரமைத்தல் | C9 அல்லது அதற்கு மேல் (Road) | 0.65 | 6500.00 | 1000.00 |

கேள்விப்படிவம் வழங்கல்:- 22.11.2016 தொடக்கம் 06.12.2016 பி.ப 01.00 மணி வரை
கேள்விப்படிவம் ஏற்றல் :- 06.12.2016 பி.ப 01.30 மணி வரை
கேள்வி திறத்தல் :- 06.12.2016 பி.ப 02.00 மணி

1. செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர் களிடமிருந்து மேற்குறிப்பிட்ட வேலைகளிற்காக கேள்விகளை கோருகின்றார்.
2. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமை உண்டு.
3. கேள்விப் பத்திரப் பணத்துடன் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி (NBT) 2% மும் செலுத் தப்படல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன்னர் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. கேள்வி திறக்கப்படும் சமயத்தில் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி சமுகமளிக்க வேண்டும்.
6. கேள்விப் பத்திரத்தின் ஒரு பிரதியை "செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழி புரம்" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கலாம் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போட வேண்டும். மறுபிரதியை "பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"என்ற முகவரிக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைய கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களையும், நிபந்தனைகளையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தலைமை அலுவலகம்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.
22.11.2016

திருமதி.குணவதி சண்முகலிங்கம்.
செயலாளர்,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்.

(C/26579)(10.17)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



22-11-2016 இன்று கொழும்பு BMICH இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறும் எமது நண்பன் **சிவலிங்கம் புவிராஜ்** (HNDA) அவர்களை வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று வாழ்வில் உயர சீரணி நாகபூசணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்

**அ.க.இராசரத்தினம் குடும்பம்**
**ஆர்.எஸ் தொலைத்தொடர்பகம்**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இன்று (22.11.2016) செவ்வாய்க்கிழமை கொழும்பு BMICH இல் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா பட்டம் பெறும் எமது நண்பன்

**கணேசபிள்ளை உமாசுதன்**
**(இலங்கை போக்குவரத்து சபை(வடக்கு) யாழ்சாலை உதவி முகாமையாளர் (நிதி)**

அவர்களை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடன் பல பட்டங்கள் பெற்று பதவி உயர்வு பெற்று வாழ வேண்டும் என எல்லாம் வல்ல யாழ்சாலை ஞானவைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை போக்குவரத்துசபை (வடக்கு)**
**யாழ்சாலை நண்பர்கள் சார்பாக**
**க.இந்திரகுமார் (உதவிமுகாமையாளர் (செய))**
**வை.சிவகுமார் (நீதிப்பகுதி லிகிதர்)**

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
08.01.1944

இறப்பு
23.10.2016

## சோதிலிங்கம்
## தங்கவேலாயுதம் (தங்கண்ணா)

**( முன்னாள் வல்வை நகர சபை ஊழியர்)**

என் அன்பின் உருவே!
எனதழகின் உச்சமே!
நாற்பத்தி நான்கு ஆண்டு
நாம் கூடிவாழ்ந்த
பாசப் பிணைப்பை
பாவி இவள் பரிதவிக்க
பாதியில் அறுத்ததேனோ?..
கண்ணை இமை காப்பதுபோல
எனைக் காத்த என்
அன்புத்தெய்வமே!
பொறுக்கவில்லை போலும்
காலனவனுக்கு
எடுத்துவிட்டான் என் கண்ணின் மணியை...

உறவென்று நீ வாழ்ந்தாய் எம்
இல்லம் இனித்தது இன்பத்தேனாய் ...
உலகை விட்டு இன்று சென்றுவிட்டாய்
எனதன்பே! ஆறவில்லை என் மனம்
இறப்பது நியதியென்று தெரிந்தும்
மறுமுறை உனைக்காண
துடிக்குது என் மனம்...
தேற்றுகின்றேன் என் மனதை
நாமிருவரும் சேர்ந்து கோர்த்த
முத்துக்களின் முகம் பார்த்து...
[illegible]
உங்களோடு நான் கூடிவாழ்ந்த நாட்களை நினைந்து...

**மனைவி.**

சிப்பிக்குள் முத்தைப்போல்
சிந்தையில் உறைந்த எம் ஐயாவே!
மன வலிமையின் உறைவிடம்
எங்கள் ஐயா...
பாசத்தின் உறைவிடம்
எங்கள் ஐயா
சிரிப்பில் குழந்தையின் உறைவிடம்
எங்கள் ஐயா...
எல்லோருக்கும் உதவும் மன உறைவிடம்
எங்கள் ஐயா...
அன்பின் உறைவிடம்
எங்கள் ஐயா...
அழகின் உறைவிடம்
எங்கள் ஐயா...
பண்பின் உறைவிடம்
எங்கள் ஐயா...
வாக்கின் உறைவிடம்
எங்கள் ஐயா...
எம் நினைவுக்குள் நித்தியமாய்
உறைந்துவிட்ட எங்கள் ஐயாவே!
இனிவரும் காலங்களில்...
எம் நினைவலையில்
நீங்காது நிறைந்துநிற்கும்
ஐயா... ஐயா... ஐயா!!!

**பிள்ளைகள்.**

ஜெயம் - 0044 754 570 4929, ராசி - 0044 782 477 1072
சுதா - 0044 773 800 7995,
செல்வம் - 00 44 772 765 6772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலையை மூடுமாறு வவுனியாவில் சுவரொட்டிகள்

வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள மதுபான சாலையை மூடுமாறு கோரியும், கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் மதுபான சாலைகளை மூடுமாறு கோரியும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள் ளன. சமூக விழிப் புணர்வுக்கான மக்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் அவை ஒட்டப்பட்டுள்ளன.

கடந்த தீபாவளி தினத்தில் சிலர் மது போதையில் பூந் தோட்டம் பகுதியில் கை கலப்பில் ஈடுபட்டதுடன் இரண்டு சமூகங்களுக்கு இடையிலான பிரச்சி னையாக அது உருவெடுத்தது.

இந்த நிலையில் பூந்தோட்ட மக்களின் ஆதரவுடன் மேற் கொள்ளப்படும் இந்த நடவடிக்கை தொடர்பில் சமூக விழிப்புணர் வுக்கான மக்கள் அமைப்பின் உறுப்பி னர்கள் தெரிவித்ததாவது-

வவுனியா பூந்தோட்டம் பகுதியில் அமைந்துள்ள மதுபான சாலைக்கு வருபவர்கள் மது அருந்திவிட்டு கிராமங்களில் பிரச் சினைகளைத் தோற்று விக்கின்றனர். இது மக்களின் வாழ்க்கைக்கு இடையூறாக இருக்கிறது. வவு னியா பூந்தோட் டத்தில் மாத்திரமல்ல வவுனியாவில் பல கிராமப் புறங்களில் மதுபானசாலைகள் அதிகரித் துள்ளன. கிராமப்புறங்களில் அமைந்திருக்கும் மதுபான சாலைகள் மூடவேண்டும். மதுபான சாலைகள் சில நேரங்களில் இன ஐக்கியத்துக்கும் இடை யூறாக செயற்படுவதால் அவற்றை மூடவேண்டும். மது பானசாலையை அகற்றுவதற்காக கிராம மக்களிடம் கையெழுத்துகள் சேகரிக்கப்படும். அது ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும். அதற்கும் நடவடிக்கை மேற் கொள் ளப்படாத நிலையில் மக்களை அணி திரட்டிப் போராட்டம் நடத்தப்படும்- என்றனர். (ற-4)



## மரண அறிவித்தல்கள்

### திருமதி சிவமணி தேவராஜா



உடுவில் றோட், மானிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி சிவமணி தேவராஜா நேற்று (21.11.2016) திங்கட்கிழமை காலை 6.30 மணியளவில் காலமானார்.

அன்னார் தேவராஜாவின் அன்பு மனைவியும் பிரேமிலாவின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (21.11.2016) திங்கட்கிழமை பி.ப 4.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிரேமிலா (மகள்)

(ஜே.6283) (16.17.19)

### கந்தையா சற்குணராசா (சந்திரன்)



சுழிபுரத்தினைப் பிறப்பிடமாகவும், நவாலி வடக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சற்குணராசா (சந்திரன்) நேற்று (21.11.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - லட்சுமி தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் தவமணிதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும் பவளராணி (பவளம்) யின் அன்புக்கணவரும் துஸ்யந்தன், சயந்தன், வேநிலா, கிருசாந்தினி (இத்தாலி), பிரசாத் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுதா, மகாலட்சுமி, மதீஸ்வரன், சியாம்றாஜ் (இத்தாலி) ஆகியோரின் அன்புமாமனும் கபிசன், யசிகா, விஜிதா, றொஸ்ரி, திசானி, தேனுஜா, நிசானி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நவாலி வடக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (22.11.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் நவாலி வடக்கு ஆரியம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வரகுசாட்டி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 824 8813, 077 833 1140

(ஜே.6282) (17.19.20)

ஓம் விராட் விஸ்வபிரமனே நம

### வேணுகோபால் பரமானந்தன் (ஆச்சாரி)



இல. 306, K.K.S வீதி, வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேணுகோபால் பரமானந்தன் (ஆச்சாரி) நேற்று (21.11.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேணுகோபால் மற்றும் ருக்மணி தம்பதியரின் அன்புமகனும் தைரியகிருஸ்ணலக்ஸ்மியின் அன்புக் கணவரும் ஜனனி, வேணுஜன், விதுரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கௌளி, முருகானந்தன், லெட்சுமணன் (சிவா), இராமன்ஆச்சாரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் காலஞ் சென்றவர்களான பக்கிரிசாமி, கெங்காதரன் ஆச்சாரி, மற்றும் ஜெகநாதன் ஆகியோரின் பெறாமகனும் லாலாசிங்கம், நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும் வாசுகி, பழனிவேல், அருள்மாதவன், சரவணன், சிறிதரன், வித்தியா, மஞ்சுளா, பவானி, சங்கர், அச்சுதன், சீனிவாசன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.11.2016) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(ஜே/6281)(17.19.20)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மாவீரர்...

நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு இலங்கை அரசு தடை விதித்துள்ளது. மாவீரர் நாள் நிகழ்வுகளை யாராவது நினைவு கூர்ந்தால் அவர் களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அச்சுறுத்தியுள்ளது.

'போரின் போது கொல்லப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை நினைவு கூருவதற்கு எவராவது முற் பட்டால் அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கொழும்பு அரசின் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜயவர்த்தன தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து, தாயக விடுதலைக்காக மடிந்த மாவீரர்களை, நவம்பர் மாதம் 21ஆம் திகதியிலிருந்து 27ஆம் திகதி வரையில் நினைவு கூருவது வழக்கமாகும். இதற்கான ஏற் பாடுகள் கடந்த காலங்களைப் போல் அல்லாது இந்த ஆண்டு பெரும் எடுப்பில் செய்வதற்குத் தமிழர் தாயகத்தில் ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வாறானதொரு நிலையிலேயே, போரில் வீரச் சாவை அரவணைத்துக் கொண்ட மாவீரர் களுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு தடை விதித்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

கடந்த ஆண்டும் இவ்வாறான தடை அறிவிப்பு கொழும்பு அரசினால் வெளியிடப் பட்டபோதும், தமிழர் தாயகப் பிரதேசத்தில் மாவீரர் சுடர் ஏற்றப் பட்டமை நினைவில் கொள்ளத்தக்கது. (த-5)

### 3 நாள்களில்...

வளி மண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டின் மழை வீழ்ச்சி கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக இருந்தது. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் தொடர்ச்சியாக நேற்று வரை பரவலாக மழை பெய்தது.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 தொடக்கம் நேற்றுத் திங்கட்கிழமை காலை 8.30 மணி வரையிலான 12 மணி நேரத்தில் அதிகூடிய மழை வீழ்ச்சியாக 138.3 மில்லி மீற்றர் பதிவாகியுள்ளது. நேற்றுக் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை 26.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது. (த-5-எ)

### அண்ணன்...

மகிந்தானந்த அளுத்கமகே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருந்த நிலையில், அவருக்கு பிறந்த நாள் வாழ்த்துக் கூறிச் சிரித்தவாறு கிண்டல் செய்தார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந் தானந்த அளுத்கமகே,

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி மோசடிக் குப் பிரதமர் பொறுப்புக்கூற வேண்டும் என்ற நிலைப் பாட்டில் பொது எதிர்க்கட்சி இருக்கின்றது.

இலங்கைக்குக் கரம் போர்ட் கொண்டு வந்ததாக என் மீது இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வழக்குத் தாக்கல் செய்தது போல பிரதமருக்கு எதிராகவும் வ்ழக்குத் தாக்கல் செய்யவேண்டும் -என்றார்.

இந்தக் கருத்துக்குச் சபையிலிருந்த ஆளும் தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டனர். இதன்போது ஒழுங்குப் பிரச்சினை யொன்றை எழுப்பிய மகிந்தானந்த அளுத்கமகேயின் சகோதரரான ஆனந்த அளுத் கமகே, மகிந் தானந்த மீது குற்றச் சாட்டுக்களை முன்வைத்தார். மகிந்த ஆதரவு தரப்பினரும், பெரும் கூச்சல் எழுப் பினர். இருப்பினும், மகிந்தானந்த உரையாற்ற இடம ளிக்கமால் ஆளும் தரப்பினர் தொடர்ச்சியாக ஒழுங் குப் பிரச்சினைகளை எழுப்பிக் கொண்டிருந்தனர்.

பொருத்தமற்ற ஒழுங்குப் பிரச்சினைகளை எழுப்பி உரைக்கு இடையூறு ஏற்படுத்த இடமளிக்கவேண்டாம் என்று அப்போது சபாபீடத்துக்குத் தலைமை தாங்கிய எட்வேர்ட் குணசேகர, மகிந்த அணியினரிடம் கோரிக்கை விடுத்தார். பெரும் கூச்சல் குழப்பத்துக்கு மத்தியில் மகிந்தானந்த உரையாற்றி முடித்தார்.

மகிந்தானந்த தன் மீது குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய போது அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பின்னர் கருத்து வெளியிட்ட போது, இன்று மகிந்தானந்தவின் 52ஆவது பிறந்த நாள். எனவே அவருக்கு நான் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் என்று கூறியதுடன், சிறையில் அடைத்த வேதனையில் தான் பேசுகின்றதாக மகிந் தானந்த குறிப்பிட்ட விடயத்தைச் சுட்டிக்காட்டிச் சிரித்தவாறு அமர்ந்தார்.

ஆனந்த அளுத்கமகே தொடர்ந்து உரையாற்றினார். இவரின் உரைக்கு மகிந்த அணியினர் கூச்சல் குழப்பம் விளைவித்து எதிர்ப்புத் தெரிவித்தனர். இரு தரப்பினரும், கூட்டணியாக இணைந்து மாறி மாறி ஒழுங் குப் பிரச்சினைகளை எழுப்பி குழப்பத்தில் ஈடுபட்டனர். ஆனந்த அளுத்கமகே உரையாற்றி முடிந்தவுடன் கூச்சல் குழப்ப நிலமை தணிந்தது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூபதி மார்க்கண்டு

தோற்றம்
09.
11.
1952



மறைவு
21.
11.
2016

நுணாவில் மேற்கு, சாவகச்சேரியினை பிறப்பிடமாகவும் பெரியமாவடி சாவகச்சேரியினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்ன பூபதி மார்க்கண்டு நேற்று (21.11.2016) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வைத்திலிங்கம் மார்க்கண்டு (ஓய்வூதியர் பிரதேச செயலம், தென்மராட்சி) இன் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகேசு - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகளும் மோனகாந் (ஜேர்மனி), சூரியகாந் (பொது முகாமைத்துவ உதவியாளர் மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), உதயமர்லினி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத்தாயும் சர்மிளா (ஜேர்மனி), தர்சி, துஸ்யேந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் பாக்கியம் காலஞ்சென்ற கிருபானந்தம் மற்றும் சாந்ததேவி, பரமானந்தம் (பவா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் மகேஸ்வரி (கனடா), கமலேஸ்வரி , விக்னேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மகதி (ஜேர்மனி), சஞ்சனா, சஞ்சித், சனோத் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2016) செவ்வாய்க் கிழமை பி.ப. 2.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 711 6331

தகவல்:
கணவன்,
மகன் (சூரிய காந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்
"மரங்களை நடுகை செய்வது மனிதர்களில் அழகையும் உயர்ந்த நற்பண்புகளையும் குடிகொள்ளச் செய்யும் ஒன்றாகும்."
-ஜே.ஸ்டேர்லிங் மோர்ட்டன் (அமெரிக்க அரசியல்வாளர்)
கார்த்திகை
01-30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்"

# யானைகளால் உறக்கமில்லை

## அதிகாரிகளும் ஏமாற்றுகிறார்கள் என நெடுங்கேணி பிரதேச மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், நவ.22

நெடுங்கேணிப் பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசம் அதிரித்துள்ளது. தினமும் குடியிருப்புகளுக்குள் நுழையும் யானைகளால் பெரும் இழப்புகள் ஏற்படுகின்றன. யானைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அதிகாரிகள் போலி வாக்குறுதிகளையே வழங்குகின்றனர்.

இவ்வாறு பிரதேச விவசாயிகள் விசனம் தெரிவித்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

ஒலுமடுவில் நேற்று அதிகாலை மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்த யானைகள் வாழ்வாதாரப் பயிர்களை அழித்துச் சென்றுள்ளன. யானைகளைக் கட்டுப்படுத்த என முன்னர் வெடிகள் வழங்கப்பட்டன. தற்போது அவையும் வழங்கப்படுவதில்லை.

தினமும் இரவில் அச்சத்துடன் நித்திரையின்றியே வாழ்கின்றோம். யானைகளைக் கட்டுப்படுத்துமாறு அதிகாரிகளிடம் கோரினால் அவர்கள் போலி வாக்குறுதிகளை வழங்குகின்றனர்.

நேற்றுமுன்தினம் பொலிஸார் கலந்துரையாடல் ஒன்றை ஏற்பாடு செய்தனர். இந்தப் பகுதிக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகரும் அதில் கலந்து கொண்டார். இது தொடர்பில் அவரிடம் கூறினோம். நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார். ஆனால் நேற்றும் யானைகள் கிராமத்துக்குள் புகுந்து அழிவை ஏற்படுத்தின.

நடத்தப்பட்ட கலந்துரையாடலில் நாம் பொலிஸாருக்குத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தோம். முன்னர் இந்தப் பகுதியில் யானைகள் இருந்ததில்லை. தென்னிலங்கையில் இருந்து கொண்டுவரப்பட்ட யானைகள் இந்தப் பகுதியில் விடப்பட்டதை அடுத்தே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டினோம் - என்றனர். (ற-10)

# பொதுநோக்கு மண்டபத்தை விடுவிக்குமாறு கோரிக்கை



யாழ்ப்பாணம், நவ.22

மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பொதுநோக்கு மண்டபத்தை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அதை மக்கள் பாவனைக்கு கையளிக்க வேண்டும்.

இவ்வாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

குறித்த பொதுநோக்கு மண்டபம் நியாப் திட்டத்தின் மூலம் 2004ஆம் ஆண்டு கட்டப்பட்டு பொதுமக்களின் பாவனைக்கு விடப்பட்டது. 2009ஆம் ஆண்டு இடப்பெயர்வின் பின்னர் குறித்த பொதுநோக்கு மண்டபத்தை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளனர். அதை மக்கள் பாவனைக்கு விடுவிக்குமாறு பல தடவைகள் கோரிக்கை விடுத்தபோதும் பயனேதுமில்லை. பொதுநோக்கு மண்டபத்தை படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு முன்பாக உள்ள பொதுநோக்கு மண்டபத்தை இராணுவத்தினர் பயன்படுத்துகின்றனர். அதை விடுவித்துத் தருமாறு இதுவரை கிராம அமைப்புகள் என்னிடம் கோரிக்கை விடுக்கவில்லை. கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் பொதுநோக்கு மண்டபத்தை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.- என்று ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-4,7)

# விபத்தில் மூவர் காயம்

சாவகச்சேரி, நவ.22

வீதியில் போடப்பட்டிருந்த குழைகளில் ஏறிய மோட்டார் சைக்கிள் சறுக்கி எதிரே வந்த மோட்டார் சைக்கிளுடன் மோதி வெள்ள வாய்க்காலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது. அதில் 70 வயது முதியவர் ஒருவரும், இரு இளைஞர்களும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி வீதியில் நடந்தது. தொலைத் தொடர்பு வயர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வீதியோரக் கிளைகள் வெட்டப்பட்டு வீதியில் போடப்பட்டிருந்தன. வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் அவற்றின் மீது ஏறியபோது சில்லு சறுக்கியதால் மறுகரையில் வந்த மோட்டார் சைக்கிளை மோதிவிட்டு அருகில் இருந்த வெள்ள வாய்க்காலுக்குள் பாய்ந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ற-9)

# இரணைமடு நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் உயர்கின்றது

யாழ்ப்பாணம், நவ.22

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பெரும் குளமான இரணைமடு நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு சீரமைப் பின் பின்னர் முதன்முறையாக நேற்றுமுன்தினம் இரவு நீர் மட்டம் 10 அடியாக உயர்ந்தது. மாவட்டத்தின் ஏனைய குளங்களின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது. வடக்கின் பல பகுதிளிலும் மழை பொழிய ஆரம்பித்துள்ளதை அடுத்து குளங்களுக்கான நீர் வரத்து அதிகரித்துள்ளது. குளங்களின் நீர்மட்டங்களில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இரணைமடு நீர்த் தேக்கத்தில் நீர்மட்டம் 10 அடியாக உயர்ந்துள்ள நிலையில் கனகாம்பிகைக் குளம் வான்பாயும் நிலையை எட்டியுள்ளது.

இரணைமடுக் குளம் இந்த ஆண்டு சீரமைக்கப்பட்டது. குளத்தின் நீர் முற்றாக வெளியேற்றப்பட்டே குள அணைக்கட்டு சீரமைக்கப்பட்டது. (ற-4,10)

# கிளிநொச்சி மாவட்டத்தில் பெய்கின்றது அடை மழை

## தாழ்நிலங்களில் வெள்ளத்தில் மூழ்கின







யாழ்ப்பாணம், நவ.22

நேற்றுமுன்தினம் முதல் பெய்துவரும் கடும் மழையால் கிளிநொச்சி மாவட்டத்தின் தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளம் தேங்கியுள்ளது. இயல்புநிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. பொன்னகர், முறிகண்டி, அக்கராயன் போன்ற இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. வீடுகளுக்குள்ளும் மழை நீர் புகுந்துள்ளது.

இதுவரை இடர் தொடர்பான எதுவித பாதிப்புகளும் ஏற்படவில்லை என்று கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவின் உதவிப்பணிப்பாளர் நா.சூரியராஜா தெரிவித்தார். இடர் ஏற்படுமாயின் அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் வகையில் தமது பிரிவு தயாரான நிலையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (ற-4,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை உப்பளம் ஒருபோதும் தனியார் மயப்படுத்தப்படாது

## உறுதியளித்தார் அமைச்சர் ரிசாத்

மன்னார், நவ.22

மாந்தை உப்பு உற்பத்தி கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுக்கப்படாது. அந்த உப்பளத்தை அபிவிருத்திசெய்து மேலும் அதன் விளைச்சலை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உறுதியளித்தார் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நேற்றுக் காலை மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இதன்போது வடக்கின் முக்கிய வளங்களில் ஒன்றாக இருக்கும் மாந்தை சோல்ட் லிமிற்றெட்டின் கீழ் இருக்கின்ற மன்னார், ஆனையிறவு, குறிஞ்சாத்தீவு உப்பு உற்பத்திக் கூட்டுத்தாபனங்களை தனியாருக்கு விற்பனை செய்ய கொழும்பு அரசு எடுத்துள்ள நடவடிக்கையை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கோரி மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்றுக் காலை ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர்களிடம் மாவட்டச் செயலக நுழைவாயிலில் வைத்து மனுக் கையளித்தது.

இந்த மனு தொடர்பில் இணைத் தலைவர்களில் ஒருவரான வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் கூட்டத்தில் முன் வைத்தார்.

அவசரப்பட்டு மாந்தை உப்பு உற்பத்தி கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கை தொடர்பில் நாம் சற்று கலந்தாலோசிக்க வேண்டும். வடக்கு மாகாணத்துக்கு ஏற்படுகின்ற பிரச்சினைகள் குறித்து நாங்கள்தான் பதிலளிக்க முடியும்.அதற்கு எமக்கு இடமளிக்க வேண்டும்.

இந்த விடயத்தில் தீர்மானம் எடுத்தால் எவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுகின்றது என்பதனை கொழும்பு அரசு அறிந்து கொள்ள வேண்டும். அமைச்சர் ரிசாத் பதியுதீனை பொறுத்த வரையில் அவர் மாகாணத்துக்கும், கொழும்பு அரசுக்கும் உரியவர். அவர் இரண்டும் தெரிந்தவர்.

எனவே மாந்தை உப்பு உற்பத்தி கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தினால் மக்கள், பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அறிந்து நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எனவே மாந்தை உப்பு உற்பத்தி கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையை உடன் நிறுத்த வேண்டும் – என்று முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

மாந்தை உப்பு உற்பத்தி கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கை இடம் பெறாது. அந்த உப்பளத்தை அபிவிருத்தி செய்து அதன் விளைச்சலை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். மன்னார் உப்பளம் அதிக இலாபத்துடன் இயங்குகின்றது. எனவே அதனைத் தனியார் மயப்படுத்த இடமளிக்க மாட்டோம்.

எங்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளாமல் குறித்த நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன – என்று அமைச்சர் ரிசாத் பதியுதீன் பதிலளித்தார். (வ-56)

## பரீட்சைக்கான விண்ணப்பம்

யாழ்ப்பாணம், நவ. 22

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் 2016 ஆம் ஆண்டுக்கான 2ஆம் பருவகால மீள் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக அதன் உதவிப் பதிவாளர் யோ.ரிசாந்தன் தெரிவித்தார்.

பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் நிறுவனத்தில் விண்ணப்பங்களைப் பெற்று முழுமை செய்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் நிர்வாகப் பகுதியில் வழங்குமாறு அவர் கேட்டுள்ளார். (வ-10)

## ஏ.எல். மாணவர் பரீட்சைத் திகதி மாற்றப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 22

தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தின் பரீட்சை நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அதன் இயக்குநர் அறிவித்தார்.

2018ஆம் ஆண்டு பிரிவு தரம் 12க்கு நாளை புதன்கிழமை நடைபெறவிருந்த பரீட்சைகள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். (வ-10)

## ஆ.சி. நடராஜாவின் நினைவஞ்சலி நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், நவ. 22

குரும்பசிட்டி ஆ.சி.நடராஜாவின் 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு குரும்பசிட்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும் என்று கிராம அபிவிருத்தி சங்கம் அறிவித்தது.

கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பொ.தங்கராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக மாவட்ட செயலர் எஸ்.முரளிதரன் கலந்து கொள்ளவார் என்று சங்கம் தெரிவித்தது. (வ-10)

## பயிற்சிப் பட்டறை

யாழ்ப்பாணம், நவ. 22

பனை அபிவிருத்திச் சபையின் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை இன்று செவ்வாய்க்கிழமை பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் சிவசங்கர் தலைமையில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தேசிய வீடமைப்பு அதிகார சபைக் கட்டடத்தில் நடைபெறவுள்ள இந்தப் பயிற்சிப் பட்டறையில் மாவட்ட இணைப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

தலைமைத்துவம், கணக்கு வைப்புமுறை தொடர்பாக இந்தப் பயிற்சி பட்டறையில் கலந்துரையாடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## கொக்குவில் இந்து மாணவர்களின் ஓ.எல்.பரீட்சை அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், நவ. 22

கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாகத் தோற்றுபவர்களுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகக் கல்லூரி அதிபர் மோகனதாஸ் அறிவித்தார்.

இரண்டாம் தடவையாக பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் இந்த அனுமதி அட்டைகளை உடனடியாகப் பிரதி அதிபரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அவர் தெரிவித்தார். (வ-10)

## தமிழகத்திலிருந்து நாடு திரும்பியோருக்கு சிறப்புக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 22

இந்தியாவில் இருந்து அண்மையில் மீளத்திரும்பியவர்களுக்கு நாளை புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு இந்தியத்துணைத்தூதுவருடன் கலந்துரையாடல் ஒன்று நடைபெறும் என்று இலங்கை ஏதிலியர் மறுவாழ்வு கழகத்தினர் அறிவித்தனர். யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தலைமை தாங்குவார் என்றும் அவர்கள் தெரிவித்தனர். (வ-10)

## தம்பசிட்டியில் கடையுடைத்து பணம், பொருள்கள் திருட்டு

யாழ்ப்பாணம், நவ. 22

பருத்தித்துறை – தம்பசிட்டி பகுதியில் வர்த்தக நிலையத்தின் யன்னல் கம்பியினை வளைத்து உள்ளே சென்ற திருடர்கள் பணம் மற்றும் பொருள்களைத் திருடிச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 1 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகப் பருத்தித்துறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 15 ஆயிரம் ரூபா பணம், 25 ஆயிரம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருள்கள் என்பன திருடப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் குற்றத் தடுப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-5-26)

### நிலத்தடி நீர் முகாமை தொடர்பான

## ஆஸ்திரேலியப் பயிற்சிப் பட்டறையில் குடாநாட்டிலிருந்து 8 பேர் பங்கேற்பு

யாழ்ப்பாணம், நவ. 22

வடக்கில் நிலத்தடி நீர் தொடர்பாக அதிக பிரச்சினைகள் நிலவுகின்ற மாவட்டமாக யாழ்ப்பாணம் உள்ள நிலையில் ஆஸ்திரேலியாவில், நிலத்தடி நீர் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நெறியில் யாழ். மாவட்டத்தில் இருந்து 8 பேர் உட்பட 15 பேர் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த நீர் முகாமைத்துவத்தின் ஊடாக நிலைத்து நிற்கும் நிலத்தடி நீர் முகாமைத்துவம் என்ற கருப்பொருளில் ஒரு மாத காலப் பயிற்சிநெறி ஆஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்தில் நடைபெறுகின்றது. இலங்கையைச் சேர்ந்த நீர் முகாமைத்துவத்துடன் தொடர்பாணவர்களுக்கென சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்ட இந்தப் பயிற்சி நெறியில் இலங் கையில் இருந்து 15 பேர் கலந்து கொண்டுள்ளனர். அதில் யாழ் மாவட்டத்தில் இருந்து 8 பேரும் தென்னிலங்கையில் இருந்து 7 பேரும் கலந்து கொண்டனர்.

வடக்கில் நிலத்தடி நீர் தொடர்பாக அதிக பிரச்சினைகள் நிலவுகின்ற மாவட்டமாக யாழ்ப்பாணம் உள்ளது. இதைக் கருத்திற் கொண்டு பயிற்சியில் யாழ்.மாவட்டத்துக்குக் கூடுதல் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் ஆஸ்திரேலிய இயற்கை வளங்கள் மற்றும் கனிமத் திணைக்களத்தின் பிரதிநிதிகளிடம் வேண்டுகோள் ஒன்றை முன்வைத்தன்படி இந்தப் பயிற்சி நெறி ஒழுங்கு செய்யப்பட்டது.

பன்னாட்டு நீர் ஆராய்ச்சி மையம் யாழ். மாவட்டத்துக்கான ஒருங்கிணைப்பை விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசனிடமும் தென்னிலங்கைக்கான ஒருங்கிணைப்பை கொழும்பில் இயங்கும் பன்னாட்டு நீர் முகாமைத்துவ நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி எச்.மந்திரி திலகே என்பவரிடமும் ஒப்படைத்தது.

விவசாய அமைச்சின் சார்பில் முன்னாள் மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளரும் தற்போதைய பிரதிப் பிரதம செயலாளருமான எந்திரி சோ.சண்முகானந்தன், நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் ச.சர்வராஜா, கை.பிரகாஷ், பிரதி விவசாயப் பணிப்பாளர் அ. செல்வராஜா ஆகியோருடன் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் வடமாகாண சபை உறுப்பினர்கள் பா.கஜதீபன், கலாநிதி க.சர்வேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர். நீர் தொடர்பான ஆய்வில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இருந்து இரசாயனவியல் துறையைச் சேர்ந்த பேராசிரியர் மீனா செந்தில் நந்தனன், புவியியல் துறையைச் சேர்ந்த கலாநிதி லோறீன் இராஜசூரியர் ஆகியோரும் பங்கேற்றுள்ளார்கள்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவரும் இந்தப் பயிற்சி நெறி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி நிறைவடையவுள்ளது. (ற-10)



## அவசர நோயாளருக்கான சிகிச்சை குறித்து பயிற்சி

சாவகச்சேரி, நவ. 22

அவசர நோயாளர்களுக்கு வழங்க வேண்டிய சிகிச்சை முறைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை நேற்று சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது.

அதில் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகள், தாதிய அலுவலர்கள், பரிசாரகர்கள், அம்புலன்ஸ் சாரதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பயிற்சிப் பட்டறையை வெளிநாடுகளில் உள்ள வைத்தியசாலைகளில் கடமையாற்றும் மருத்துவ நிபுணர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் நடத்தினர்.

அவசர சிகிச்சை வழங்க வேண்டிய குழந்தைகளுக்கு தனி யாகவும் பெரியவர்களுக்கு தனியாகவும் செய்முறைப் பயிற்சிகளுடன் வழங்கப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கல்வி பயின்று வெளிநாடுகளில் கடமையாற்று வோரும் அவர்களுடன் பணிபுரியும் வெளிநாட்டு மருத்துவ நிபுணர்களும் பயிற்சிப் பட்டறையை நடத்தினர்.

சாவகச்சேரி வைத்தியசாலை மருத்துவ அதிகாரி இ.றிஷானின் ஏற்பாட்டில் வெளி நாட்டு மருத்துவக் குழுவினர் வைத்தியசாலைக்குச் சென்று பயிற்சிகளை வழங்கினர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தேசியப் பிரச்சினைகளுக்கு எதிராக தொழிலாளர்கள் போராடுவோம்

### இலங்கை சோசலிச சமத்துவக் கட்சி அழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 22
சிங்கள மற்றும் தமிழ்த் தொழிலாளர்கள் அனைவரும் உலக சோசலிச சமத்துவக் கட்சியுடன் இணைந்து தேசியப் பிரச்சினைகளுக்கு எதிராகப் போராடுவோம்.

இவ்வாறு இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியின் தலைவர் பாலி விஜய சிறிவர்த்தன அழைப்பு விடுத்தார்.

யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியும், சமூக சமத்துவத்துக்கான சர்வதேச இளைஞர் மற்றும் மாணவர் அமைப்பும் இணைந்து ஏகாதிபத்திய போர் உந்துதல், தமிழ் தேசியவாத கட்சிகளின் துரோக பாத்திரம் மற்றும் போர் அபாயத்தை எதிர்த்துப் போராட அவசியமான சோசலிச வேலைத் திட்டம் பற்றிய கலந்துரையாடலை நடத்தின.

அதன்போதே பாலி விஜய சிறிவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
பூகோள மேலாதிக்கத்துக்காக தீவிரமாக முன்செல்லும் அமெரிக்கா, ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் எதிரான போருக்குத் தயாராகி வருகிறது. சீனாவுக்கு எதிராக தெற்காசிய நாடுகளை அரவணைத்துக் கொள்வதற்காக அதன் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, அமெரிக்கா இலங்கையில் கடந்த வருடம் ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதித் தேர்தல் வழியாக ஒரு ஆட்சி மாற்றத்துக்கு அனுசரணையளித்தது. பெய்ஜிங்குடன் நெருக்கமான உறவுகளை உருவாக்கிக் கொண்ட மகிந்த ராஜபக்ச, அமெரிக்க சார்பு மைத்திரிபால சிறிசேனவால் பதிலீடு செய்யப்பட்டார். அதிலிருந்து, கொழும்பு அரசு அதிகளவில் அமெரிக்காவின் ஆசியாவிலான நகர்வுகளுக்கு ஒத்துழைத்து வருகிறது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தோழமைக் கட்சிகளுடன் சேர்ந்து, நாங்கள் ஆசியாவிலும் மற்றும் உலகம் பூராவும் பன்னாட்டு சோசலிசத்தின் அடிப்படையில் தொழிலாள வர்க்கத்தின் ஒரு போர் எதிர்ப்பு இயக்கத்தைக் கட்டியெழுப்பப் போராடி வருகின்றோம். இந்தப் போராட்டத்தின் இன்றியமையாத பாகமாக, சோசலிச சமத்துவக் கட்சி, ஆசியாவில் அமெரிக்க போர்உந்துதலுடன்நாட்டை கட்டிப்போடும் கொழும்பு அரசின்நடவடிக்கைகளை எதிர்த்து இலங்கையில் சிங்களம், தமிழ் மற்றும் முஸ்லீம் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்த போராடி வருகின்றது-என்றார். (ம-4,7)


# உவர்நீரைத் தடுப்பதற்கு கறுக்காய்த் தீவில் அணை

### கிளி. கமநல சேவைகள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம் நவ 22
கிளிநொச்சி, பூநகரி பிதேச செயலாளர் பிரிவில் உள்ள கறுக்காய்தீவில் மேலதிக நீர் வெளியேறும் வாய்கால் மூலமாக உவர் நீர் மீண்டும் உள்வரும் அபாயநிலை ஏற்பட்டதை அடுத்து அங்கு சுமார் 40 அடி நீளத்துக்கு அணை கட்டப்பட்டது.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட கமநலசேவைகள்திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஈ.தயாரூபன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
கறுக்காய்த்தீவில் அதிகமானவர்கள் விவசாயத்தையே நம்பியுள்ளனர். அந்தப் பிரதேசத்தில் மழை காலத்தில் மேலதிக நீர் கடலைச் சென்றடைவதற்காக வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் நீர் மட்டத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக வெளியேறிய மழைநீர் உவர் நீருடன் கலந்து மேலதிக நீர் வெளியேறும் வாய்கால் மூலமாக மீண்டும் வயல் நிலங்களை நோக்கி வரும் நிலை ஏற்பட்டது. மீளவும்உவர்நீர்வருமானால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், நிலம் உவர்த்தன்மை அடையும் நிலையும் ஏற்படும்.



குறித்த பகுதிக்குச் சென்று நிலைமை அவதானிக்கப்பட்டது. அங்குள்ள கமக்கார அமைப்புக்கள் அனைத்துடனும் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. அதற்கான உடனடித் தீர்வாக எமது திணைக்கள ஊழியர்களும் கமக்கார அமைப்புக்களும்இணைந்து நேற்றுமுன் தினம் பிற்பகல் அணை அமைத்தனர். தற்போது உவர்நீர் வயல் நிலங் களுக்கு திரும்புவது தடுக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் உவர் நீர் வடிந்துள்ளதால் தாக்கம் ஏதும் ஏற்படுமா என ஆராயப்படுகிறது- என்றார். (ம-4,6)

## சிறப்பு அம்புலன்ஸ் சேவை பெறுவதில் மக்கள் ஆர்வமில்லை!

யாழ்ப்பாணம்,நவ.22
வடக்கு மாகாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சிறப்பு நோயாளர் காவு வண்டிச் (அம்புலன்ஸ்) சேவையைப் பெற்றுக் கொள்வதில் மக்கள் ஆர்வம் காட்ட வில்லை என்று தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம்.

இலங்கையில் முதன்முறையாக வடக்கு மாகாணத்தில் கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி சிறப்பு நோயாளர் காவு வண்டிச் சேவை ஆரம்பிக்கப்பட்டது. 100 நோயாளர் காவு வண்டிகள் இந்தச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. சேவையை ஒருங்கிணைக்கும் அலுவலகம் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள 021 222 4444, 021 222 5555 என்னும் இலக்கங்கள் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்கள் பொதுமக்களைச் சென்றடையவில்லை. கடந்த மாதம் வரை 50 வீதமான அழைப்புக்கள் யாழ்.மாவட்டத்தில் இருந்து மாத்திரமே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அடுத்தபடியாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்கள் உள்ளன- என்று வடக்கு சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (ம-21)

## போர் முடிந்த பின்னரும் அவலங்கள் மாறவில்லை

### கின்ட்போஸ் எய்ட் அமைப்பின் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 22
போர் முடிவடைந்து 5 வருடங்களுக்கு மேல் ஆகியும் மக்களின் அவலங்கள் மாறவில்லை. மக்கள் எதையோ இழந்து விட்டு வாடிய முகங்களோடு இருப்பவர்கள் போல் தான் இன்று வரை தோற்றமளிக்கின்றார்கள்.

இவ்வாறு கின்ட்போஸ் எய்ட் (HINDFOS AID) அமைப்பின் தலைவர் நா. அருண்காந்த் தெரிவித்தார்.

> “இந்தக் கிராமத்தையும் மக்களையும் பார்க்கும் போது பொருளாதார ரீதியான புள்ளி விவரங்கள் கோரத் தேவையில்லை.”

கனகராயன்குளம் குறிசுட்டகுளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் அண்மையில்வறியமாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இந்தக் கிராமத்தையும் மக்களையும் பார்க்கும் போது பொருளாதார ரீதியான புள்ளிவிவரங்கள் கோரத் தேவையில்லை. மக்களையும், மாணவர்களையும் பார்க்கும் போதே அவர்கள் எந்த அளவு வறுமையில் வாடி வருகின்றனர் என்பது தெரிகிறது. 'நமக்காக நாம்' என்ற இந்த வேலைத் திட்டத்துக்கு நாம் எந்த வெளிநாடுகளிலும் நிதி உதவியைப் பெறப் போவதில்லை. காரணம் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு நிபந்தனைகளைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாடும் இலங்கை மீது இராஜதந்திர நிகழ்ச்சி நிரல்களைக் கொண்டுள்ளது.

நாம் எமது வசதி படைத்த தனவந்தர்களையும், நலன்விரும்பிகளையும், சமுதாயப் பற்றாளர்களையும் கொண்டே எமது மக்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுத்துச்செயற்பட்டு வருகின்றோம். இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காகத் தொடர்ந்தும் பாடுபடுவோம். நீங்கள் எங்களோடு சரியான முறையில் ஆவணங்களைச் சமர்ப்பிப்பீர்களாயின் இந்த மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தலாம்-என்றார்.

நிகழ்வில் கின்ட்போஸ் எய்ட் அமைப்பின் தேசிய அமைப்பாளர் பொன். சந்திரபோஸ், தேசிய ஆலோசகர் இராசையா செல்லையா, வன்னி மன்னார் மாவட்ட பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன், வவுனியா நகர இணைப்பாளர் இமையவன், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலர்கலந்துகொண்டனர். (ம-7)

## தனது சமூகம் மட்டுமே வாழ வேண்டும் என்ற வெறியே அலைவதே இனவாதம்

### அக்கரைப்பற்று மாநகர சபை முன்னாள் உறுப்பினர் சீற்றம்

கொழும்பு, நவ. 22
தனது சமூகம் மட்டுமே வாழவேண்டும் என வெறிகொண்டு அலைவது தான் இனவாதம். இதற்கு முன்னர் இனவாதம் பேசியவர்களின் தடயம் இல்லாமல் அழிந்து போன வரலாறுகள் உண்டு. அதனை நாம் கண்டும் கேள்வியுற்றும் இருக்கின்றோம். அதனை எவரும் மறக்கக்கூடாது.

இவ்வாறு அக்கரைப்பற்று மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.எம்.சபீஸ் தெரிவித்தார்.

அக்கரைப்பற்றில் அமைந்துள்ள தேசிய காங்கிரஸ் காரியாலயத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:
இன்று நாட்டில வேறுவடிவில் இனவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. பர்மாவின் நிலையை இலங்கையிலும் தோற்றுவிக்க சிலர் அலைகின்றனர். அதற்கு எண்ணெய் ஊற்றுவது போன்று நீதி அமைச்சர் 32 முஸ்லிம் இளைஞர்கள் ஐ.எஸ். ஐ.எஸ் இயக்கத்தில் சேர்ந்துள்ளார்கள் என்று அறிக்கை விட்டுள்ளார். அதே போன்று தயா கமகே அமைச்சர் “சிலை எங்கும் வைக்கலாம் அகற்ற முடியாது. காரணம் இது பௌத்த நாடு” என்று இனவாதத்துக்கு தூபமிட்டிருகின்றார்.

நம்மவர்களும் பள்ளியா? பங்காளியா? என்று இனவாதம்பேசி மக்கள் வாக்குகளைப் பெற்று இனவாதிகளின் காலடியில் எமது உரிமைகளை அடகு வைத்துள்ளனர். மக்களும் சரி அரசியல்வாதிகளும் சரி பொறுமையாக இருப்பது நமது கடமையாகவே பார்க்க வேண்டும். நாம் சரி என நினைத்துச் செய்யும் சிறு தவறுகள் இனவாதத் தீப்பிழம் பாகப் பரவக்கூடிய மனநிலையை இன்று இனவாதிகள் சிங்கள மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளனர்.

நாட்டில் மேற்கொள்ளப்படும் இனவாதக் கட்டவிழ்புக்களை கரிசனையோடு அவதானித்து, ஆர்ப்பரிக்காமல் எமது இயல்பு வாழ்கையை நடத்துவது கோழைத்தனமாகாது என்பதை எமது மக்கள் நன்கு புரிந்தவர்கள். சிங்கள கடும்போக்காளர்கள் உள்ள பகுதிகளுக்குத் தேவையின்றிப் பயணம் செய்வதையும், சுற்றுலாப் பயணங்களை மேற்கொள்வதையும் இந்தத் தருணத்தில் நாம் குறித்துக் கொள்வது சிறப்பானதாகும்- என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் வீட்டுத்திட்டத்துக்கு 325 பேர் தெரிவு

தென்மராட்சி நவ. 22
மீள்குடியமர்வு மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் 2016 2017 ஆண்டுக்கான வீடமைப்புத் திட்டத்துக்கு தென்மராட்சி பிரதேச செயலக பிரிவுகளில் கிராம அலுவலர் பிரிவு ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட 325 பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.
குறித்த பட்டியல் பிரதேச செயலகம் பிரிவு கிராம அலுவலர் அலுவலகம், வாழ்வின் எழுச்சி அலுவலர் அலுவலகம், பொருளாதார அபிவிருத்தி அலுவலர் அலுவலகம் போன்றவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.
வன்னியிலிருந்து தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்துள்ள பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள், புனர்வாழ்வு பெற்றோரைக் கொண்ட குடும்பங்கள், அங்கவீனர்களைக் கொண்ட குடும்பங்கள், இந்தியாவிலிருந்து வருகை தந்து சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்ததுள்ள குடும்பங்கள் ஆகியவற்றிலிருந்து 325 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.
இந்தத் தெரிவுகளில் ஆட்சேபனைகள் இருப்பின் எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக பிரதேச செயலகத்திலோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 19 ஆயிரம் குடும்பங்களில் பெரும்பாலானோர் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக காணப்படுகின்றனர்.
அவர்களில் இன்னமும் 4 ஆயிரத்து 852 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்க வேண்டியுள்ளது என்று பிரதேச செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.
2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரை பல்வேறு நிறுவனங்களால் வழங்கப்பட்ட வீட்மைப்புத் திட்டங்களில் பல குடும்பங்கள் நன்மை பெற்றுள்ளன.
தற்போதைய தெரிவில் 2010ஆம் ஆண்டுக்குப் பின்னர் திருமணம் செய்த குடும்பங்கள், ஏற்கனவே வழங்கப்பட்ட வீட்டை சீதனமாகக் கொடுத்து விட்டு புதிய வீட்டுக்கு விண்ணப்பித்தவர்கள் ஆகியோர் இணைக்கப்படவில்லை.
அதனால் பிரதேசத்தில் வீட்டுத் தேவையுள்ள வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-9)

# பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் நினைவு நிகழ்வுகள் பிரான்ஸில்



பாரிஸ், நவ. 22
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளரான பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட 7 மாவீரர்களின் 9 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வும், பிரான்ஸ் தலை நகர் பாரிசில் நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கேணல் பரிதியின் 4ஆம்ஆண்டு நினைவு வணக்க நிகழ்வும் பிரான்ஸ் நந்தியார் பகுதியில் கடந்த சனிக் கிழமை நடத்தப்பட்டுள் ளது.
பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு தமிழ்ப் பெண்கள் அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் பொதுச் சுடரை நந்தியார் தமிழ்ச் சங்கத் தலைவர் ஏற்றினார். ஈகச் சுடரை கேணல் பரிதியின் பெற்றோர் ஏற்றி உருவப்படங்களுக்கு மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தினர். அக வணக்கத்தைத் தொடர்ந்து அனைவரும் சுடர் வணக்கத்துடன் மலர் வணக்கம் செலுத்தினர். தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன.
தமிழ்ச்சோலை மாணவர்களின் எழுச்சி நடனங்கள், எழுச்சிக் கானங்கள், கவியரங்கம், கவிதைகள், சிறப்புரைகள் போன்றவை இடம்பெற்றன. நிகழ்வில் பிரான்ஸில் பட்டம் பெற்ற தமிழ் மாணவர்கள் 13 பேர் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு தமிழ் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் மதிப் பளிக் கப்பட்டனர். நிகழ்வில்பிரான்ஸ் தமி ழர் ஒருங் கிணைப் புக் குழு செயற் பாட்டாளர் திரு. சத்தியதாசன் சிறப்புரை ஆற்றினார். (ந-4)

# சட்டவிரோத மணல் ஏற்றிய இருவருக்கு தண்டம்

அனுமதிப் பத்திரமில்லாமல் மணல் ஏற்றிச்சென்ற இரண்டு இளைஞர்களுக்கு யாழ்ப்பாணம் நீதிவான் மன்று ஒரு லட் சத்து 15 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது. மணலையும் பறிமுதல்செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணப் பொலிஸாரால் மேற் கொள்ளப்பட்ட நட வடிக்கையின்போதே மணல் அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இரண்டு உழவு இயந்திரங்களும் அவற்றின் சாரதிகளான அரியாலையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர் கள் நீதிமன்றில் கடந்த வாரம் முற் படுத்தப் பட்டனர். அவர்களில் ஒரு வருக்கு முற் குற்றம் உள்ளது தெரிய வந்தது. அவருக்கு 65 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. அடுத்த இளைஞருக்கு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டது. அவர்களிடமிருந்து கைப்பற்றப் பட்ட மணலை அரசுடைமையாக்குமாறும் உழவு இயந்திரத்தை தடுத்து வைக்குமாறும் பதில் நீதிவான் கே.கேச வன் உத்தரவிட்டார். (ந-103)

# வன்னியின் ஆறு இடங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

வன்னி மாவட்டத்தில் நீரால் ஏற்படும் நோய்த்தாக்கம் அதிகமாகக் காணப்படும் மேலும் 6 இடங்களில் நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்று மத்திய சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.
வன்னி மாவட்டத்துக்குரிய நீரிழிவு நோய் தடுப்புச் செயலகம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வன்னி மாவட்டத்தில் நீர் தொடர்பான நோய்த் தாக்கம் அதிகம் என்று சுட்டிக் காட்டப்பட்டது. அதிக தாக்கம் உள்ள பிரதேசங்களாக மேலும் 6 பிரதேசங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அந்தப் பிரதேசங்களில் அடுத்த ஆண்டு நீர் வடிகட்டும்நிலையங்கள் அமைக்கப்படும். திறந்து வைக்கப்பட்டுள்ள அலுவலகம் வவுனியா , முல்லைத்தீவு , மன்னார் ஆகியமாவட்டங்களைஉள்ளடக்கியவன்னி மாவட்டத்துக்கான செயலகமாகவே இயங்கும்.- என்றார். குறித்த நிகழ்வில் மாவட்டச் செயலர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ந-101)

# சித்த மருத்துவ வெற்றிடங்களுக்கு யுனானி வைத்தியரை நியமிக்காதீர்

## இலங்கை அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம். நவ. 22
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சித்தமருத்துவ ஆளணி வெற்றிடங்களுக்கு, சித்த மருத்துவ ஆளணியையே நியமியுங்கள். யுனானி வைத்தியர்களைச் சித்த மருத்துவ வெற்றிடங்களுக்கு நியமிக்காதீர்கள். யுனா னிக்கு என்று ஆளணி வெற்றிடங்களைப் புதி தாக உருவாக்கி அதற்குள் யுனானி வைத்தியர்களை நியமனம் செய்யுங்கள். வேலையில்லாத சித்தமருத்துவப் பட்டதாரிகளை நாடு முழு வதும் அவர்களுக்குரிய சித்தமருத்துவ ஆளணி வெற்றிடங்களுக்கு நியமிப்பதற்கும் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறு இலங்கை அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரியுள்ளது.
ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர்கள் சேவை ஆரம்பத்தர நியமனம் தொடர்பாகக் குறித்த சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக் கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
அதில் உள்ளதாவது:
ஆயுள்வேத சட்டத்தின் பிரகாரம் ஆயுள்வேதம் என்பதன் கீழ் ஆயுள்வேத, சித்த, யுனானி ஆகிய மூன்று மருத்துவ முறைகளும் உள்ள டக்கப்பட்டதால் நியமனம் வழங்கப்படும் பொழுது ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத் தர்கள் என்ற பதவிப்பெயரிலேயே வழங்கப் படுகிறது.
இருப்பினும் மூன்று மருத்துவ முறைகளிலும் தத்துவங்களும், மருத்துவ முறைகளும் வேறுபட்டவையாகும். எமது நாட்டில் கடந்த 25 வருடங்களுக்கு மேலாக வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நடை பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக தமி ழர் பாரம்பரிய மருத்துவமான சித்தமருத்துவம் பெரும் பின்னடைவைச் சந்தித்திருந்தது.
உள்நாட்டு போர் நிறைவுற்றதன் பின்னர் தமிழர் மருத்துவமான சித்த மருத்துவம் ஓரளவு வளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பல கிராமிய, மாவட்ட, மத்திய சித்த வைத்தியசாலைகள் புதிதாகத் திறக்கப்பட்டதுடன் அரச சேவையில் கணிசமான அளவு ஆளணிகளும் உருவாக் கப்பட்டன. இரு சித்த மருத்துவ உற்பத்தி நிலையங்களும் இயங்குகின்றன.
அரச சேவையில் வெற்றிடங்கள் நிரப்பப்படும் போது 1996ஆம் ஆண்டு முதல் ஆயுள்வேத : சித்த : யுனானி 7 : 2 : 1 என்ற விகிதத்திலேயே நியமனம் வழங்கப்பட்டது. சித்தமருத்துவப் பட்டதாரிகளுக்கு நாட்டில் எல்லாப்பாகங்களிலு முள்ள பொருத்தமான ஆளணி வெற்றிடங் களிலும் நியமனங்கள் வழங்கப்பட்டன.
2015ஆம் ஆண்டு நியமனம் வழங் கப்படும்போது போதுமான சித்தமருத்துவப் பட்டதாரிகள் இல்லாத காரணத்தால் மேற் குறிப்பிட்ட விகிதாசாரம் ஆயுள்வேத யுனானி சித்த (7:2:1) என்று மாற்றப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது. இதன் காரணத்தால் வடமாகா ணத்தில் 15 சித்த ஆளணி வெற்றிடங்களுக்கும் கிழக்கு மாகாணத்தில் 11சித்த ஆளணி வெற்றி டங்களுக்கும் யுனானி மருத்துவர்கள் நியமிக் கப்பட்டுள்ளனர்.
இதுவரை காலமும் சித்தமருத்துவ பட்டதாரி களை யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவே உருவாக்கி வந்தது. தற்போது கிழக்கு மாகாணத்தில் உள்ள கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவப்பிரிவும் சித்த மருத்துவப் பட்டதாரிகளை உருவாக்குகின்றது. இதன் காரணமாக தற்பொழுது 100 வரையான வேலையற்ற சித்தமருத்துவப் பட்டதாரிகள் உள்ளனர்.
இந்த விகிதாசாரம் சார்பாகவும் சித்தமருத்துவ நியமனம் சார்பாகவும் அண்மையில் சுகாதார அமைச்சருடனான கலந்துரையாடலின்போது நாடளாவிய சேவையில் உள்ள ஆளணிக ளுக்கு விகிதாசாரம் பார்ப்பதில்லையென்றும் விகிதாசாரப்படி வழங்கப்படாது ஆளணி வெற்றி டங்களுக்கேற்பவே நியமனம் வழங்கப்படும் என்றும் எமக்கு உறுதிமொழி அளிக்கப்பட்டது.
கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்ட மேற்படி நியமனத்தின்போது மீண்டும் ஆயுள்வேத, யுனானி, சித்த (7:2:1) என்ற விகிதாசாரத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. யுனானி வைத்தியர்களுக்கு, சித்தமருத்துவர்களுக்குரிய ஆளணி வெற்றிடங்களிலேயே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் எதிர்காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வேலையில்லா சித்தமருத்துவப் பட்டதாரி நியமனத்தின்போது சித்தமருத்துவ ஆளணிப் பற்றாக்குறை ஏற்படும்.
வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச சித்தவைத்தியசாலைகளில் புதிதாக யுனானி ஆயுள் வேத ஆளணி வெற்றிடங்களை உருவாக்கி யுனானி ஆயுள்வேத வைத்தியர்களை நியமனம் செய்வதை நாம் தடுக்கவில்லை. .- என்றுள்ளது. (ந-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் தென்னிலங்கை மீனவரை குடியேற்ற முயற்சி

## சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ.22
முல்லைத்தீவு கொக்குத்தொடுவாயைத் தொடர்ந்து மன்னார், காயாக்குழியில் தென்னிலங்கை மீனவர்கள் 87 பேருக்கு வாடி அமைத்து நிரந்தர தொழில் செய்ய அனுமதிக்குமாறு கொழும்பு நீரியல் வளத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார்.

அவர் தெரிவித்ததாவது:

காயாக்குழியில் எந்தக் காலத்திலும் தென்னிலங்கை மீனவர்கள் தொழில் புரியவில்லை. ஆனால் அங்கிருந்து 7 கிலோ மீற்றர் தொலைவில் போருக்கு முன்னர் 40 தென்னிலங்கை மீனவர்கள் பருவ காலத்துக்கு மட்டும் வந்து தொழில் செய்தனர் என்று கூறப்படுகின்றது.

தற்போது தென்னிலங்கை மீனவர்கள் 87 பேருக்கு காயாக்குழியில் வாடி அமைத்து நிரந்தரமாக தொழில் புரிய அனுமதி வழங்க வேண்டும் என்று நீரியல்வளத்திணைக்கள பணிப்பாளர் உத்தரவிட்டுள்ளார். அவர்களுக்கெனத் தனிச் சங்கம் அமைக்கவும் முயற்சிக்கப்படுகின்றது. மன்னார் மாவட்டத்தில் நீண்டகாலமாக பரம்பரை பரம்பரையாக தமிழ் மக்கள் மீன்பிடியில் ஈடுபட்ட முள்ளிக்குளம் உள்ளிட்ட பல பிரதேசங்கள் இன்றுவரை கடற்படையினரின் பிடியில் உள்ளன.

அந்தப் பகுதிகளில் நிரந்தரமாகத் தொழில் புரிந்த மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் மீனவர்கள் இன்றுவரை தொழில் புரியமுடியாது வாழ்வாதாரத்துக்காக ஏங்கித் தவிக்கும் நிலையில் தென்னிலங்கை மீனவர்களை குடியமர்த்த முயற்சிக்கப்படுகின்றது.

மாவட்டத்தை பூர்வீகமாகக் கொண்ட தமிழ் மக்கள் தொழில் புரிய தடைவிதிக்கப்படும் நிலையில் வேண்டுமென்றே திட்டமிட்ட வகையில் தென்பகுதி மீனவர்களுக்கு அனுமதி வழங்க முயற்சிக்கப்படுகின்றது. இதுவரை காலமும் தென்னிலங்கை மீனவர்கள் இல்லாத பிரதேசத்தில் நீர்கொழும்பைச் சேர்ந்த சிங்கள மீனவர்களை குடியமர்த்த முனைவதால் முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாயில் தென்னிலங்கை மீனவர்களை குடியமர்த்த முனைவதால் எழும் பிரச்சினைகள் போன்று எதிர்காலத்தில் மன்னாரிலும் ஏற்படக் கூடும். முற்கூட்டியே அவற்றைத் தவிர்க்க முன்வர வேண்டும்.- என்றார். (ற-101)

## பாடசாலையில் நீர்ப்பம்பிகள் திருட்டு

கொழும்புத்துறை,நவ22
யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் மத்தியூஸ் வீதியில் அமைந்துள்ள ஆரம் பப் பிரிவு பாடசாலையில் பொருத்தப்பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரம் கொட்டும் மழையின் மத்தியில் நேற்றுமுன்தினம் திருடப்பட்டுள்ளது.

விடுமுறை நாளையும் மழையையும் பயன்படுத்தி திருடர்கள் ஓடு பிரித்து உட்சென்று தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர் என்று பாடசாலை அதிபர் தெரிவித்தார்.

நீர்ப் பம்பி திருடப் பட்டதால் குடிநீர் மற்றும் மலசலகூட நீர் வசதியின்றி ஆரம்பபிரிவு மாணவர்களும் ஆசிரியர்களும் பல அசௌகரியங்களை



எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப் பட்டது.

குடிசனம் செறிந்த பகுதியிலுள்ள இந்தப் பாடசாலையில் முன்னரும் 3 தடவைகள் நீர்ப்பம்பிகள் திருடப்பட்டுள்ளன. (ற-135)



பொலிஸாருக்குச் சொந்தமான வாகனம் ஒன்று நீண்ட நாள்களாக யாழ். நகரின் பிரபல பாடசாலை ஒன்றின் வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. குறித்த வாகனத்தில் மானிப்பாய் பொலிஸ் என எழுதப்பட்டுள்ளது. குறித்த வாகனம் இயங்கு நிலையில் இல்லை. குறித்த வாகனத்தில் இலக்கத்தகடுகளும் அகற்றப்பட்டு பாடசாலை வளாகத்துக்குள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (ற-101)

## அதிபர் சேவைக்குத் தெரிவானோர் சொந்த மாகாணத்துக்கு விடுவிப்பு

அச்சுவேலி,நவ.22
இலங்கை அதிபர் சேவை தரம் 111க்கு புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்கள் நடுவண் கல்வி அமைச்சால் அவர்களின் சொந்த மாகாணங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக நடுவண் கல்வி அமைச்சு மாகாணங்களின் கல்வி அமைச்சர்கள் மற்றும் கல்வி வலயங்கள் என்பனவற்றுக்கு கடிதம் மூலம் அறிவித்திருப்பதோடு அதிபர் சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கும் தனித்தனியாக கடிதங்களை அனுப்பியுள்ளது.

இலங்கை அதிபர் சேவை நாடளாவிய சேவை வகுதியைச் சேர்ந்த சேவையாகும். இந்தவகையிலேயே நடுவண் கல்வி அமைச்சு இலங்கை அதிபர்சேவை 111 க்கு புதிதாக தெரிவுசெய்யப்பட்டவர்களை அவர்களது சொந்த மாகாணங்களுக்கு விடுவிக்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை தரம் 111 பதவிக்கு புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களுக்கு நடுவண்கல்வி அமைச்சு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர்கள் சொந்த மாகாணங்களுக்கு விடுவிக்கப்பட்டிருப்பது தொடர்பாக குறிப்பிடப்பட்டதோடு சம்பந்தப்பட்ட அதிபர்கள் தமது கடமைப்பொறுப்புக்களை புதிய பாடசாலைகளில் ஏற்றுக்கொண்டது தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய கடமையேற்பு விவரத்தை நடுவண் கல்வி அமைச்சின் அதிபர் நிர்வாக பிரிவுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளது. (ற-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# புதிய அரசமைப்பை நிறைவேற்ற அரசின் அர்ப்பணிப்பு அவசியம்

புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான முதற் படியில் இலங்கை காலடி எடுத்து வைத்துவிட்டது. அரசமைப்பு உருவாக்க வழிநடத்தல் குழுவிற்கு ஆலோசனை வழங்கவென நியமிக்கப்பட்ட 6 உப குழுக்களின் அறிக்கைகளும் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுவிட்டன. அவற்றில் சொல்லப்பட்டுள்ள - பரிந்துரைக்கப்பட்டுள்ள - பல விடயங்கள் முன்னேற்றகரமானவை; வரவேற்கத்தக்கவை.

உப குழுக்களின் பரிந்துரைகளே இறுதி வரைவாகப் போவதில்லை என்பது உறுதி. அவற்றில் சொல்லப்பட்டுள்ள வரவேற்கத்தக்க விடயங்களில் பல அல்லது சில மார்கழி மாதம் 10ஆம் திகதி வெளிவரவுள்ள வழிகாட்டல் குழுவின் அறிக்கையில் நிச்சயம் இடம் பெற்றிருக்கும் என்று கூறமுடியாது. அவற்றில் பல நீர்த்துப் போகச் செய்யப்பட்டிருக்கும் அல்லது முற்றாகவே நீக்கப்பட்டிருக்கும்.

அரசமைப்பு வழிகாட்டல் குழு முன்வைக்கும் வரைவே கிட்டத்தட்ட புதிய அரசமைப்பின் வடிவம் தொடர்பான விம்பத்தைக் கொடுக்கவல்லது. அரசின் வடிவம் (ஒற்றையாட்சியா? கூட்டாட்சியா?), அடிப்படை உரிமைகள், மத்தி மற்றும் மாகாணங்களின் அதிகார வரம்புகள், மதங்களுக்கு வழங்கப்படவுள்ள இடம் போன்ற முக்கிய கேள்விகள் பலவற்றுக்கு மார்கழி 10இல் வெளிவரும் அறிக்கையே தெளிவான பதிலை வழங்கும்.

எனினும், உபகுழுக்கள் பரிந்துரைத்தவைகளில் இருந்து அல்லது விவாதிக்கப்பட்டு முன்மொழியப்பட்ட முற்போக்கான அதிகாரப் பகிர்வு விடயங்களில் இருந்து வழிகாட்டல் குழுவின் அறிக்கை எந்தளவுக்கு விலகிச் செல்கிறது என்பதை ஒப்பிட்டுணர்வதற்கு உப குழுக்களின் அறிக்கைகள் நிச்சயம் உதவும். அந்த அறிக்கைகள் முன்மொழியும் முற்போக்கான பரிந்துரைகளை எட்டமுடியாமல் போனமைக்கான காரணங்களை - தடைகளை - சவால்களைக் கண்டறியவும் வாய்ப்பு ஏற்படும்.

அந்த வகையில், உப குழுக்களின் அறிக்கைகள் நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டமை மிகச் சரியான ஒரு முன்னேற்றமே! ஆனால் அது மட்டுமே போதுமான நடவடிக்கை அல்ல. கொழும்பு அரசு செய்வதற்கு இன்னும் நிறையவே உள்ளன. சிறந்த ஓர் அரசமைப்பை - இனப்பிரச்சினைக்குத் தீர்வைத் தரக்கூடியதான ஒன்றை - முன்வைப்பது மட்டுமே கொழும்பின் கடமையல்ல. அதனை நிறைவேற்றும் அர்ப்பணிப்பையும் அது கொண்டிருக்கவேண்டும். புதிய அரசமைப்புக்கு மக்களின் ஆதரவைத் திரட்டுவதற்கான முயற்சிகளையும் அது முழு மூச்சில் எடுக்கவேண்டும்.

உப குழுக்களின் அறிக்கைகள் வெளியான உடனேயே அதை வைத்து அதிகாரப் பகிர்வுக்கு எதிரான அடிப்படைவாத சக்திகள், மக்களைத் தவறாக வழி நடத்தும் வகையில் அறிக்கைகளை வெளியிட ஆரம்பித்துவிட்டன. அரசு தமிழர்களுக்குத் தனி நாடு ஒன்றைப் பிரித்துக் கொடுத்துவிடப்போகிறது என்ற கூச்சலை முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவிடம் இருந்தே கேட்க முடிகிறது. இத்தகையை பொய்ப் பரப்புரையை முறியடித்து புதிய அரசமைப்பில் முன்வைக்கப்படக்கூடிய நல்ல அம்சங்களை நிறைவேற்றுவதற்கு வேண்டிய அனைத்து முயற்சிகளையும் - நடவடிக்கைகளையும் - அரசு செய்யவேண்டும்.

புதிய அரசமைப்பில் உண்மையில் என்ன இருக்கின்றது என்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த அரசு முழுமையாக முயற்சிக்கவேண்டும். இது பெரும் பொருட்செலவையும் ஆளணி வளத்தையும் வேண்டி நிற்கும் ஒரு முயற்சி. அதனைச் சரிவரச் செய்யவில்லை என்றால், புதிய அரசமைப்புக்கான முயற்சி வெற்றி பெறுவதற்கான சாத்தியம் குறைவே. இதுவரையில் அத்தகைய முயற்சிக்கான திட்டங்கள் குறித்த அறிகுறிகளைக் காணமுடியவில்லை. அரசு விரைந்து செயற்படவேண்டும்.



(யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் வரவு-செலவுத் திட்ட விவாத உரையின் நேற்றைய தொடர்ச்சி...)

ஜனநாயகம், அடிப்படை உரிமைகள், சமரசம், நிலையான சமாதானத்தை அபிவிருத்தி செய்தல், சுதந்திரம், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பலப்படுத்துவதில் நாம் உன்னதமான முறையில் தொடர்ந்து முன்னேறுவோம். நிலைத்து நிற்கும் சமாதானம், பரஸ்பர மரியாதை, சமாதானம் ஆகியவற்றில் கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இந்தச் செயல்முறையை பலப்படுத்த இலட்சிய சீர்திருத்தங்கள் கொண்ட நிகழ்ச்சி நிரலொன்றை உருவாக்கியுள்ளோம். இதில் சமூக, அரசியல், பொருளாதார உலக ரீதியான உறவுகள், பொருளாதாரம், பன்னாட்டு உறவுகள் ஆகியவை அடங்குகின்றன.

அரசின் நடுத்தரக் கால மூலோபாயம் ஒரு மில்லியன் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வருமான மட்டத்தை அதிகரிப்புச் செய்தல், கிராமப்புற பொருளாதார அபிவிருத்தி, கிராமப்புற தோட்டப் பிராந்திய நிலங் களுக்கும் தோட்டத் தொழிலாளி வர்க்கத்தினருக்கும் உரிமை கொண்டாடுதல், மத்தியதர தொழிலாளிகள், அரச ஊழியர்கள் இடையே ஒருமுகப்படுத்தப்பட்டு பரந்த, துடிப்பான நடுத்தர வகுப்பினரை உருவாக்குவதேயாகும் என்று நிதி அமைச்சர் கூறியுள்ளார். 2017இன் ஆரம்பத்திலிருந்து சகல கொள்கைகளிலும், நிகழ்ச்சிகளிலும் வறுமையை ஒழிப்பதற்காக பலமான வலியுறுத்தல் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### வறுமையை ஒழிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை வரவேற்போம்

இப்படியான முயற்சிகளை நாம் மிகவும் வரவேற்கிறோம். எமது மக்கள் பற்றிப்பிடிக்க ஏதோவொன்றைத் தேடுகின்றார்கள். நீண்ட கால சிரமங்களிலிருந்து விடுபடும் நம்பிக்கையில் முயற்சிக்கின்றார்கள். எனவே, நாம் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் கவனமெடுக்க விரும்புகிறோம். பலவற்றைச் சொல்லிச் சொல்லி, நிறையக் கேட்டு அலுத்து விட்டோம். இப்பொழுது எமக்கு தேவை, செயற்பாடுகள் தான்.

2017இன் ஆரம்பத்திலிருந்து சகல கொள்கைகளிலும், நிகழ்ச்சிகளிலும் வறுமையை ஒழிப்பதற்காக பலமான வலியுறுத்தல் மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். இந்தக் கொள்கைகள் என்ன? யார் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான கொள்கைகளைத் தயாரிக்கின்றார்கள்?

கௌரவ அமைச்சர் ரவி கருணநாயக்க கூறியதை மீண்டும் சொல்கிறேன்.

கௌரவ அமைச்சரே, கடந்தகாலங்களில் வடக்கு, கிழக்கு சம்பந்தமான விடயங்களை வேறுபட்ட அடிப்படையில் குறிப்பிட்டுள்ளோம். வடக்கு-கிழக்கிற்கும், நாட்டின் ஏனைய பிராந்தியங்களுக்கும் இடையிலான சமூக-பொருளாதார இடைவெளியை 2020 இற்குள் ஒழித்துவிடும் கட்டாயத் தில் அரசு இருக்கின்றது என்ற உண்மையை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

கௌரவ சபாநாயகர் அவர்களே, போரின் பின்னரான வடக்கு கிழக்கு மாகாணங்களின் சமூக, பொருளாதார சூழல்களும், அதன் அபிவிருத்திகளும், பல தசாப்த காலங்கள், நிறையப் பாதிப்பைக் கண்டுள்ளன. எனவே வேறுபட்ட அடிப்டையில் இந்த மாகாணங்கள் அணுகப்பட வேண்டும் என்பதை நான் முழுக்க முழுக்க ஒத்துக் கொள்கிறேன்.

என்னுடைய கேள்வி என்னவென்றால், அடிப்படை என்பது என்ன? இந்த அடிப்படையை யார் தீர்மானிக்கிறார்கள்? இந்த அடிப்படை என்பது என்ன வென்பதை ஏன் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்து கேட்கக்கூடாது? பரஸ்பர மரியாதையிலும், பேச்சுவார்த்தையிலும் கட்டப்பட்டு, நிரந்தரமான சமாதானத்திற்காக உன்னத முறையில் அணுகுவதாக நீங்கள் சொல்லி வைத்த அதே மக்களிடம் ஏன் இது பற்றிப் பேசக்கூடாது? எப்பொழுது இப்படியொரு பேச்சுவார்த்தை இடம்பெறப்போகின்றது.?

அறிவார்ந்ததாகவும், உண்மையானதுமான தகவல்களின் அடிப்படையில்; தொழில்ரீதியாக அணுகக் கூடிய உள்நாட்டு சமூகவியலாளர்கள் எங்கள் மாகாணங்களை பிரதிநித்துவப்படுத்திக் கொடுக்கும் அறிக்கைகளை மத்திய திட்டமிடல் குழுவொன்று செவிமடுக்க வேண்டும். இப்படியொரு நிலைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு விரைவில் செயற்படுத்தப்படும்போது, சமூக உள்வாங்கலில் உன்னத நிலைக்கு நாம் வைக்கப்படும் நிலை யதார்த்தமானதாகி விடும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்குப் பின்னான அபிவிருத்தி மூலோபாயம் கொள்கைக் கட்டமைப்பைக் கொண்டிருக்க வேண்டும்

> கடந்த காலங்களில் வடக்கு, கிழக்கு சம்பந்தமான விடயங்களை வேறுபட்ட அடிப்படையில் குறிப்பிட்டுள்ளோம். வடக்கு கிழக்கிற்கும் நாட்டின் ஏனைய பிராந்தியங்களுக்கும் இடையிலான சமூக- பொருளாதார இடைவெளியை 2020 இற்குள் ஒழித்து விடும் கட்டாயத்தில் அரசு இருக்கின்றது என்ற உண்மையை நான் இங்கே வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**பிராந்தியங்களது பிரச்சினைகளைக் கொழும்பிலிருந்துகொண்டு தெரிந்து கொள்ள இயலாது**

இந்த மாவட்டங்களில் ஒரு புல்லின் அடிவேரென ஆழமாக ஓடியிருக்கும் பிரச்சினைகளை கொழும்பு அலுவலகங்களால் புரிந்து கொள்ளமுடியாது. போரால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் மக்களோடு மக்களாக உட்கார்ந்து, அங்கு வதியும் மக்களுடன் நேரில் உரையாடி இதுபற்றி அறியப்படல் வேண்டும். இப்படிச் செய்யத் தவறினால், மத்தியில் இருப்பவர்களால்தான் இந்த முறைப்பாடுகள் சொல்லப்படுவதோடு, இதற்கான தீர்வுகள் வாழ்வின் யதார்த்தங்களைக் களைந்துவிட்டு மத்தியில் வாழ்கின்றவர்கள் மனப்போக்கோடுதான் சொல்லப்படும்.

கௌரவ அமைச்சர் வடக்கு கிழக்கிற்கும் ஏனைய மாவட்டங்களுக்கும் இடையில் தற்பொழுதுள்ள சமூக பொருளாதார இடைவெளியை 2020க்குள் களைந்துவிடும் குறிக்கோளுடன் செயற்படுவதை வலியுறுத்திக் கூறியுள்ளார். முதற்கண், இந்த இடைவெளியைக் கண்டுணர்ந்து அங்கீகரிக்கும் அமைச்சருக்கு நான் நன்றிகூற விரும்புகிறேன். இந்த இடைவெளி விடயத்தில் மேலதிகமான தரவுகளையும் விவரங்களையும். நாம் பெற விரும்புகின்றோம். இதன்மூலம் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயங்களுக்கான நிகழ்ச்சிகளை நாம் அபிவிருத்தி செய்ய முடியும்.

எந்தவொரு போருக்கு பின்னரான அபிவிருத்தி மூலோபாயம் என்பது முழுமையான, ஏனையோரால் புரிந்து கொள்ளக்கூடிய நிலையான கொள்கைக் கட்டமைப்பு ஒன்றை மக்கள் பங்குபற்றி உரிமை கொண்டாடத் தூண்டும் விதத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒன்றாக இருக்க வேண்டும். மீண்டெழுவதற்கும், பொருளாதார அபிவிருத்திக்கும் உள்ளூர் மட்டத்தில் சொந்தம் கொண்டாடும் தன்மை இல்லையென்றால், நிலையான வாழ்வுமுறையை உருவாக்க எடுக்கும் முயற்சிகள் கேள்விக்குறியாவதுடன், இந்த நிலை பொருளாதாரத்தில் அதிகாரம் செலுத்த முடியாத தன்மைக்கும், சமூக அநீதிக்கும் இட்டுச் செல்லும். பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தப் பிரச்சினைகள் தனித்துவமானவையாக இருக்கின்றன. இந்த நாடு எட்டிய இலக்குகளுக்கும், இனி எட்டவுள்ள இலக்குகளுக்கும் அடிமட்டத்திலான ஒரு திட்டமிடல் என்பது மிக முக்கியமானதாகின்றது.

இப்படியான செயற்பாடுகளுக்கு எமது முழு ஆதரவையும் நாம் வழங்குவோம் என்பதை இத்தால் உறுதிப்படுத்துவதோடு, இந்தச் செயற்பாடுகளுக்கு தயாராகவுள்ள தொழில்பண்பட்டவர்களை இதில் ஈடுபடச் செய்து இதை யதார்த்த நிலைக்கு கொண்டுவருவோம். எமது மக்கள் நன்றாகவே பாதிக்கப்பட்டுள்ளார்கள். கடந்த வருடம் வாக்களிக்கப்பட்ட மாநாடு இடம்பெறாவிட்டாலும், சாதகமான, முன்னேற்றம் கொண்ட முறையில் எங்கள் கைகளை நீட்ட நாம் தயாராக இருக்கிறோம்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களை பொறுப்பான முறையில் பிரதிநிதித்துவப்படுத்தி, பொருளாதார விடயங்களையும், உள் நாட்டவரின் கண்ணோட்டங்களையும், அதிகாரமாக்குதலிலுள்ள சவால்களையும் வெளிப்படுத்தவல்ல, தொழில்பண்பட்ட சமூக அமைப்பு நிறுவனங்களை இதில் ஈடுபடுத்துவோம். இப்படியான சமூக அமைப்பினர் பங்கேற்கும் தீவிர செயற்பாடுகளின் திறனை அதிகரிக்கவும், அவர்களுக்குத் தேவைப்படும் அதிகாரத்தன்மையை வழங்கவும் தேசிய, பன்னாட்டு அறிவாளிகள் கைகொடுக்க வேண்டும் .சமாதானத்தை நோக்கிய பயணத்தின் போக்கின் சாதகமான, பலன் தரக்கூடிய சைகை நிலையை இது அடையாளப்படுத்தும்.

அதிகாரங்களைப் பொறுப்பேற்க ஒருமித்த சம்மதங்களைப் பெற்றுவிட்டாலும், மையப்படுத்தப்பட்ட கொழும்பின் நிர்வாகமும் கட்டுப்பாட்டாளர்களும் இந்தச் சமாதானமும், சமரசமும் தீவிரமாக நோக்கப்படுகின்றது என்ற சைகையைக் கொடுக்கவில்லை.

நாட்டின் சராசரி மாத வருமானமானத் தொகை 41,000 ரூபாவாக இருக்கின்ற நிலையில், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள 2.5 மில்லியன் மக்களில் பெரும்பான்மையானவர்களின் சம்பளம், சராசரி வருமானத்தை விட குறைவாக, மாதாந்தம் 25 ஆயிரம் ரூபாவாக இருக்கின்றது என்று கௌரவ அமைச்சர் கூறியிருந்தார். இடம்பெயர்ந்து அண்மையில் மீள்குடியேறிய கிளிநொச்சி (96.7வீதம் ) முல்லைத்தீவு(98.2வீதம் ) மக்களை நோக்குவோம். இவர்களின் பெரும்பான்மையானவர்களுக்கு கிடைக்கும் மாதாந்த வருமானம் 15,000 ரூபா என்று நான் துணிந்து சொல்வேன். நாட்டின் சராசரி தேசிய வருமானமான 41,000 ரூபாயை விட மிகவும் குறைந்த தொகை இது. *(தொடரும்)*

## பொழுது சாயுமுன்னர் பொலிவிழக்கும் சனசமூக நிலையங்கள்

1983 இன் முன்னர் தமிழ்க்கிராமங்களின் இதயங்களாக சனசமூக நிலையங்கள் திகழ்ந்தன. காலை 7 மணிக்கு முன்பே அன்றன்றைய பத்திரிகைகள் நிரம்பி வழிந்தன. ஈழநாடு, வீரகேசரி, மித்திரன், தினபதி, இப்படிப் பல பத்திரிகைகளையும் படிக்க சனசமூக நிலையங்களை நாடிவந்த மாணவத்தேனீக்களாக எம்மவர்கள் திகழ்ந்தனர். மித்திரன் தொடர்கதைகளை வாசிப்பதற்காக போட்டியிட்ட தாத்தாக்களைக் கண்டிருக்கின்றேன். இரவு பத்து மணிவரை சனசந்தடி மிக்க இடங்களாகத் திகழ்ந்தவை சனசமூக நிலையங்கள்.

2016இல் பொழுது சாயுமுன்னர் முடங்கிப்போய் இருளில் கிடக்கின்றன சனசமூக நிலையங்கள். சனசமூக நிலையத்துக்குவர மனமின்றி உறுப்பினர்களது வீடுகளில் கிடக்கும் பத்திரிகைகள். அப்படியே வந்தாலும், சன சமூக நிலையங்களில் கிழிக்கப்படும்; திருட்டுப்போகும். பதவிக்காக மட்டும் பவனி வருவர் நிர்வாகிகள்.

உழைத்துக் களைத்தவர்கள், மாலையிலோ இரவிலோ வந்து பத்திரிகைகளை வாசிக்க சனசமூக நிலையங்களில் வாய்ப்பில்லை. சனசமூக நிலையங்கள் இரவிலும் அறிவொளி பரப்பும் காலம் இனியென்று வரும்? உரிய தரப்பினர்களுக்கு இது சமர்ப்பணம்.

இரா.ஜெயக்குமார். குப்பிளான்

## பொறுப்பானவர்கள் கவனம் செலுத்துவார்களா?

மூளாய் தெற்கு நல்லதம்பி கடைக்கு அருகாக, வாணி சனசமூக நிலையத்தை ஊடறுத்துச் செல்லும் வீதி நீண்ட காலமாகத் திருத்தம் செய் யப்படாது பெரிய குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. 2016ஆம் ஆண்டில் குறித்த வீதி திருத்தம் செய்யப்படவுள்ளதாகப் பரவலாகப் பேசப் பட்டுவந்தது. ஆனால் இதுவரை வீதித்திருத்தம் குறித்து எதுவுமே இடம்பெற்றதாக இல்லை. 2016ஆம்ஆண்டு இன்னமும் ஒரு மாதத்தில் முடிவுக்கு வரவுள்ளது. வீதித்திருத்தத்துக்காகக் கற்கள் பறிக்கப்படவுள்ளன என்றும், வெகு வரைவில் திருத்தம் செய்யப்போகிறோம் என்றும் கூறினார்கள். பருவ மழை காலம் ஆரம்பித்து விட்டது. இந்த வீதியின் சீரின்மை காரணமாக இந்தக் கிராமத்தில் வசிக்கும் மக்கள் துன்பத்தைச் சந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம். பாடசாலை மாணவர்கள், அரச தனியார்துறை ஊழியர்கள் மற்றும் பொது மக்கள் மழை காலத்தில் உரிய நேரத்துக்கு தாம் செல்ல வேண்டிய இடங்களுக்குச் செல்ல முடியாமல் உள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டோர் இந்தப் பகுதிப் பொது மக்களது போக்குவரத்துச் சிரமங்களைக் கருத்தில் எடுத்து குறித்த வீதியை விரைவில் புனரமைக்க ஆவன செய்வார்கள் என எதிர்பார்க்கிறோம்.

து.குலசிங்கம், மூளாய்

## வெறும் சிலை என்று கொள்வது நியாயமா?

புதியதோர் உதயத்தை எதிர்பார்த்து, பூமியிலே பொன்னுடலைப் புதைத்தவன் பொன்.சிவ குமாரன். உரும்பிராய் மண்ணிலே உதித்தாலும், தமிழர்க்காய், தமிழுக்காய் இன்னுயிரை ஈந்து இனத்தின் சொத்தானவன். இன்று உரும்பிராய்ச் சந்திக்கு அண்மையில் சந்தைக் காணியில் சிலையாக நிற்கிறான். இந்தச் சிலை சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் கோலாகலமான விழா ஒன்றின் மூலம் திறந்து வைக்கப்பட்டது. அகற்றப்பட்ட முன்னைய சிலை அதற்கு அருகிலேயே முண்டமாய் முகம் குப்புறக் கிடக்கிறது.

புற்கள் புதர்கள் புதிய சிலையைச் சூழவளர்ந்துள்ளன. பராமரிப்பார் யாருமில்லை. இந்தப் பொறுப்பு யாருடையது. பொன் சிவகுமாரனது உறவுகளா? ஊரவர்களா? சிவகுமாரன் போன்றவர்களின் தியாகத்தால் பதவி பெற்றவர்களா? சிதைக்கப்பட்ட கல்லறைகளுக்காகக் கண்ணீர் வடிக்கிறார்கள். தப்பி நிற்கும் இந்தத் தமிழ் உணர்வாளனது சிலையடிவாரத்தை நந்தவனமாக்க வேண்டாமா? நாளைய சந்ததிக்கு வரலாறு கூற வேண்டாமா? யார் செய்வது?

ஊரவன்


வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேற்கு பிரான்ஸில் வானிலை மோசம்

பரிஸ், நவ. 22
பிரான்ஸில் மேற்கு, வட மேற்கு பகுதியில் வானிலை மோசமாக அமைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது. குறித்த பகுதியில் நேற்று முன்தினத்தில் இருந்து, மணிக்கு 160 மைல் வேகத்தில் காற்று வீசி வருகிறது. நோர் மண்டிப் பகுதியில் 33 ஆயிரம் வீடுகளும், பிரிட்னி பகுதியில் 18 ஆயிரத்து 700 வீடுகளும், லோர் அட்லாந்திக்ப் பகுதியில் 16 ஆயிரத்து 500 வீடுகளும் என கிட்டத்தட்ட 70 ஆயிரம் வீடுகளுக்கு மின்சாரம் தடைப்பட்டது.
அத்துடன், மோசமான கால நிலை காரணமாக ஒரு இரவில் மாத்திரம் 600 தொலை பேசி அழைப்புக்கள் மீட்புப் பணியகத்தை வந்தடைந்தன எனக் குறித்த பணியகம் வெளிப்படுத்தியது. (ம-எ)





# கான்பூர் ரயில் விபத்து; சாவு 133 ஆக உயர்வு

இந்தியாவின் கான்பூர் நகருக்கு அருகே கடுகதி ரெயிலொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 133 ஆனது.
மத்தியப் பிரதேசம் மாநிலத்தில் உள்ள இந்தூரில் இருந்து உத்தரப் பிரதேசம் மாநிலம் வழியாக பீகார் மாநில தலைநகர் பாட்னா நோக்கிச் சென்று கொண்டிருந்த கடுகதி ரயில், நேற்றுமுன்தினம் அதிகாலை 3.10 மணியளவில் கான்பூர் நகருக்கு அருகேயுள்ள புக்ரயான் என்ற இடத்தில் தடம் புரண்டு விபத்துக்குள்ளானது. ரயிலின் 14 பெட்டிகள் ஒன்றுடன் ஒன்று படு பயங்கரமாக மோதின. சம்பவ இடத்தில் 45 பேர் உடல் நசுங்கிச் சாவடைந்தனர். 175 பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர். மருத்துவமனையில் மேலும் 55 பேர் உயிரிழந்ததை அடுத்து நேற்றுமுன்தினம் மாலை வரை சாவு எண்ணிக்கை 100 ஆக அதிகரித்தது. மேலும், பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று அச்சம் வெளியிட்டது.
இதன்படி தற்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 133 ஆக உயர்ந்துள்ளது. (ம-எ)

## பிரான்ஸ் படையில் கழுகுகளுக்கு இடம்

பரிஸ், நவ.22
பிரான்ஸ் விமானப்படை, நாட்டினுள் ஊடுருவும் உளவு விமானங்களைக் கட்டுப்படுத்தவும் அழிக்கவும் கழுகுகளுக்கு பயிற்சி வழங்கி இணைத்துள்ளது.
நீண்ட பயிற்சியின் பின்னர் குறித்த கழுகுகள் படையில் இணைக்கப்பட்டன. கழுகுகள், கண்காணிப்புக் கருவிகளை இராணுவத்தினரிடம் கொண்டு சென்று சேர்க்கக் கூடிய முறையில் பயிற்றுவிக்கப்பட்டுள்ளன. கழுகுகளின் கண்காணிப்பு மிகவும் கூர்மையானது. துல்லியத்தன்மை வாய்ந்தது. இந்த முறையை நடைமுறைப்படுத்த அதிகஅளவு பணத்தேவைகளும் ஏற்படுவதில்லை. பிரான்ஸில் அடுத்த வருடம் ஜி-20 மாநாடு நடைபெறவுள்ளது. இதனையடுத்து தற்போதிருந்தே பாதுகாப்புப் பணிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என இராணுவத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)




## மீண்டும் களத்தில் ஏஞ்சலா மேர்க்கல்

பெர்லின், நவ. 22
ஜேர்மனின் தற்போதைய ஜனாதிபதியான ஏஞ்சலா மார்கெல், 4 ஆவது தடவையாகவும் ஜனாதிபதியாகப் போட்டியிடப்போவதாக அறிவித்தார். ஜேர்மனின் ஜனாதிபதித் தேர்தல் இன்னும் சில மாதங்களில் நடைபெறவுள்ளது. இந்த நிலையிலேயே ஏஞ்சலா இந்த அறிவிப்பை வெளியிட்டார். கிறிஸ்தவ ஜனநாயக கட்சி சார்பில் மீண்டும் நான் போட்டியிடப்போகிறேன். மீண்டும் ஜனாதிபதியாக வலம்வரும் திறமை எனக்குண்டு என ஏஞ்சலா தனது அறிவிப்பை வெளியிட்டார். 2005 ஆம் ஆண்டில் இருந்து பதவியைத் தக்கவைத்துக் கொண்டுள்ள ஏஞ்சலா, 10 லட்சத்துக்கும் அதிகமான அகதிகளுக்கு புகலிடம் வழங்கியதை அடுத்து, தனது செல்வாக்கை சிறிது இழந்துள்ளார். இதனால் அவர் மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கான வாய்ப்புக்கள் முதலிருந்த அளவில் இல்லை என ஜேர்மன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ஆனால் நடத்தப்பட்ட ஓர் கருத்துக்கணிப்பில் அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது சரியென்று 55 சதவீதம் ஆதரவு வழங்கியுள்ளனர். முன்னதாக 16 வருடங்கள் ஆட்சி செய்த ஹெல்முட் ஹோல் அதிக வருடங்கள் ஜேர்மனின் ஜனாதிபதியாக இருந்தவர் என்ற சாதனையை தன்வசம் வைத்துள்ளார். (ம-எ)

## ஆட்டம் கண்டன ஆர்ஜென்ரீனா, சிலி

சான்ரியாகோ, நவ. 22
ஆர்ஜென்ரீனாவின் மேற்கு பகுதியில் நேற்றும் கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நில அதிர்வு அயல் நாடான சிலியிலும் உணரப்பட்டது.
நிலநடுக்கத்தால் இதுவரை எந்தச் சேதங்களோ, காயங்களோ பதிவாகவில்லை. 1980 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆர்ஜென்ரீனாவில் உணரப்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் இது எனத் தெரிவிக்கப்பட்டது. (ம-எ)



## தற்கொ... அனுதி...

## பக்தாத் ...

பாக்தாத், நவ. 22
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் தலை...
பக்கர் அல் பக்தாதி, தற்கொலை ஆ...
தனது அன்றாட பொழுதுகளைச்...
வருகிறார் எனத் ஈராக்கின் பக்தாத் ந...
துறை தெரிவித்தது.
ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிக...
பற்றி அவற்றை ஓர் தனிநாடாக பிரகட...
அங்கு தனது அரக்கத்தனமான...
அரங்கேற்றி வந்தது ஐ.எஸ்.ஐ.எஸ்....
அந்த அமைப்பின் தலைமையக...
கின் மோசூல் நகர் விளங்கியது. க...
ஆம் ஆண்டியிலிருந்து ஒட்டுமொ...
லும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் அ...
குள்ளேயே இருந்து வருகிறது. இத...
மோசூலை மீட்கும் பணியில் தற்போ...
ரம் காட்டியுள்ளது. ஈராக்குக்கு ஆத...
ரிக்காவும் துருக்கியும் உள்ளன. மே...
முழுமையாகச் சுற்றிவளைக்கப்...
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடமிருந்து இ...
கிராமங்கள் மீட்கப்பட்டுள்ளன. வையா...
கிராமம், பழைமைகளை உள்ளடக்கி...
ரூட் கிராமம் ஆகியனவும் இவற்றி...
பக்தாதியைத் தேடும் பணிகள் தற்பே...
விடப்பட்டுள்ளன. இந்த நிலையிலே...
சுரங்கத்தினுள் ஒளிந்து வாழ்கிறார், ...
ஆடைகளை அனுதினமும் அணி...
அவரைக் கைத்துசெய்ய முற்படுவ...
கொலை செய்யத் தயாராக உள்ள...
தாத் உளவுத்துறை தெரிவித்தது.
பக்தாதிக்கு அதிஉச்சப் பாதுகாப்...
பட்டுள்ளது. அவருடன் உள்ள ஆயுத...



அமெரிக்க ஜனாதிபதி தேர்...
போன்று தலையைக் ...
அடைந்துள்ளது. ட்ரம்ப் த...
என பன்னாட்டு ஊடகங்க...

# தென்கொரிய ஜனாதிபதி விசாரி...

தென்கொரியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகிக்கும் பார்க் ஜியுன் ஹைஹ ஊழல் மோசடியில் ஈடுபட்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்து, அவர் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என தென்கொரியாவின் தலைமை அரச வழக்கறிஞர் தெரிவித்தார்.
பார்க் ஜியுன் ஹையின் [illegible] சோய்சூன்-சில் என்ப[illegible] நிறுவனங்களை நடத்தி வந்தார். இவர் பார்க்கின் செல்வாக்கின் மூலம் ஊழல் மோசடியில் ஈடுபட்டார்



எனக் குற்றஞ்...
விசாரணைக...
விடயம் அம்பல...
கடந்த ஒக்ரோபர்...
திகதி பார்க் ஜி...
களிடம் மன்னி...
இதனையடுத்து...
யிலிருந்து வில...
வலியுறுத்தி அ...
போராட்டங்களு...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ாலை ஆடைகளுடன் ...ினமும் அல் பக்தாதி

## ...உளவுத்துறை தெரிவிப்பு

...தலைவர் அபு ...ஆடைகளுடன் ...ாச் செலவிட்டு ...நகர உளவுத்

...திகளைக் கைப் ...டனம்செய்து- ...ன ஆட்சியை ...ஸ். அமைப்பு. ...பகமாக ஈராக் ... கடந்த 2014 ... மாத்த மோசூ ... ஆதிக்கத்துக் ...தனையடுத்து ...ாது ஈராக் தீவி ...தரவாகஅமெ ...மோசூல் நகர் ...ப்பட்டுள்ளது. ... இதுவரை 25 ...யாராப்பெருங் ...க்கியிருந்த நிம் ...றில் அடக்கம். ...போது முடக்கி ...லேயே அவர் ...், தற்கொலை ...ணிந்துள்ளார், ...டுகையில் தற் ...ள்ளார் என பக்

...ப்பு வழங்கப் ...யுததாரிகளின்



அலைபேசிகள் அடிக்கொருதடவை சோதனை செய்யப்படுகின்றன. பக்தாதியின் நகர்வு பற்றிய தகவல்களை வெளிப்படுத்துபவர்களாக சந்தேகிக்கப்பட்ட 50 ஆயுததாரிகள் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பாலேயே கொல்லப்பட்டுள்ளனர் எனவும், குறித்த உளவுத்துறைமேலும் தெரிவித்தது. ஈராக் மற்றும் சிரியாவில் 10 ஆயிரம் போராளிகள் தற்கொலை படைத் தாக்குதலுக்க தயாராக உள்ளனர். அவர்களை இயக்கும் பொறுப்பை பக்தாதி மேற்கொண்டு வருகிறார் என்று ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்கு எதிராக ஈராக் அரசுடன் இணைந்து செயலாற்றிவரும் குர்திஷ் அமைப்புத் தலைவர் மசுட் பர்சானி தெரிவித்தார். (ம-எ)



## பொலிஸ் உலங்குவானூர்தியை சுட்டு வீழ்த்தியது ஆயுதக் குழு

ரியோ டி ஜெனிரோ, நவ. 22
பிரேஸிலில் ரியோ டி ஜெனிரோ நகரில் பொலிஸாரின் உலங்கு வானூர்தி ஆயுதக் குழுவினரால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
ரியோ நகரிலுள்ள பவெல்லாப் பகுதியில் ஆயுதக் குழுக்களின் அடாவடித் தனம் மிகையாக உள்ளது. குறித்த பகுதியில் இந்த வருடத்தின் செப்ரெம்பர் மாதம் வரை மட்டும் 3 ஆயிரத்து 649 கொலைகள் இடம்பெற்றுள்ளன. பல்வேறுபட்ட கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. இதனையடுத்து ஆயுதக் குழுவைக் கண்காணிக்கும் விதத்தில் சுற்றுக் காவலில் ஈடுபட்ட உலங்கு வானூர்தி ஆயுதக் குழுவால் சுட்டு வீழ்த்தப்பட்டது. நான்கு பொலிஸார் சாவடைந்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. நடப்பு வருடம் ஒலிம்பிக் தொடர் குறித்த நகரில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

## "உன்னை எண்ணிப் பெருமை கொள்கிறேன்"
### சிறுவனிடம் சொன்னார் ஒபாமா

வொஷிங்ரன், நவ. 22
சிரியச் சிறுவனை தனது குடும்பத்தில் ஒருவராக இணைத்துக் கொண்ட அமெரிக்கச் சிறுவனைத் தனது வெள்ளை மாளிகைக்கு அழைத்து பாராட்டினார் ஒபாமா.
சிரியாவில் நடத்தப்பட்ட தாக்குதலொன்றில் படுகாயமடைந்த ஓம்ரன் டக்னிஷ் என்ற சிறுவனின் படம் வெளியாகி உலக்கை உலுக்கியது. இந்தப் படம் வெளியான பின்னர் சிரியாவில் ரஷ்யா நடத்தும்



கண்மூடித்தனமான தாக்குதல்கள் நிறுத்தப்படவேண்டுமென்று எதிர்ப்புக்கள் வலுத்தன. அமெரிக்காவைச் சேர்ந்த 6 வயதுச் சிறுவனான அலெக்ஸ், ஒம்ரனை தனது சகோதரனாக தன் குடும்பத்தில் இணைக்க உதவுமாறு ஒபாமாவுக்கு கடிதம் எழுதினான். அலெக்சின் கடிதம், ஐ.நாவின் அகதிகளுக்கான மாநாட்டில் ஒபாமாவினால் வாசிக்கப்பட்டது. இதன் பின்னர், தற்போது அலெச்சையும் அவரது குடும்பத்தையும் வெள்ளை மாளிகைக்கு அழைத்து ஒபாமா பாராட்டைத் தெரிவித்தார். உனது செயல் மற்றவர்களுக்கு முன் உதாரணமாக அமைந்துள்ளது. உன்னை நினைத்து பெருமைப்படுகிறேன் என ஒபாமா தெரிவித்தார். (ம-எ)



...தேர்தலில் ட்ரம்ப் வெற்றிபெற்றதை அடுத்து, அவரது சிகை அலங்காரத்தைப் ... கொண்ட சீனாவின் பறவையொன்று அங்கு வெகுவாகப் பிரபல்யம் ... தனது சிகை அலங்காரத்துக்கு மட்டும் 45 நிமிடங்கள் செலவு செய்கிறார் ...ங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன. (ம-எ)

## ட்ரம்புக்கு வாய்ப்பை வழங்குங்கள்; ஆசிய பசுபிக் மாநாட்டில் ஒபாமா

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவான டொனால்ட் ட்ரம்புக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள் என நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆசிய பசுபிக் பொருளாதார மாநாட்டில் ஒபாமா தெரிவித்தார்.
அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டார். ட்ரம்ப் தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து, அமெரிக்காவில் அவருக்கு எதிரான பலர் தொடர்ந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். உலக அளவிலும் ட்ரம்ப்புக்கு எதிர்ப்பு உள்ளது என்பதாகவே கருதப்படுகிறது. இந்த நிலையிலேயே ஒபாமா இவ்வாறு தெரிவித்தார். எதையும் தரக்குறைவாக மதிப்பிட வேண்டாம். தவறான மதிப்பீடுகளுடன் அணுகாமல், ட்ரம்புக்கு சந்தர்ப்பம் வழங்கிப் பாருங்கள். அவரின் திட்டம் என்ன என்பதை அறிய முற்படுங்கள். பரப்புரைகள் வேறு- அரசின் திட்டங்கள் வேறு என ஒபாமா மேலும் தெரிவித்தார். இந்தச் சுற்றுப் பயணமே ஒபாமா, அமெரிக்க ஜனாதிபதியாக மேற்கொண்ட கடைசி சுற்றுப் பயணமாகும். (ம-எ)

# ...க்கப்படவுள்ளார்

...ஞ் சாட்டப்பட்டது. ...களிலும் குறித்த ...லமானதை அடுத்து ...பர் மாதம் 25 ஆம் ...ஜியூன் ஹை, மக் ...ணிப்புக் கேட்டார். ...து அவரைப் பதவி ...லகவேண்டும் என ... அவ்வப்போது சில ...ளும் கையெழுத்து

வேட்டைகளும் நடத்தப்பட்டன. கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட போராட்டத்தில் 5 லட்சம் மக்களும், கடந்த 13 ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்பட்ட போராட்டத்தில் 3 லட்சம் மக்களும் கலந்துகொண்டனர்.
இதனால் பார்க் ஜியுன் கை மீது பெரும் அழுத்தம் கொடுக்கப்பட்டது. மக்கள் போராட்டத்தின் எதிரொலியாக ஜனாதிபதியை விசாரிக்க நாடாளுமன்றம் சம்மதம் தெரிவித்தது. இதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டது. (ம-எ)



அமெரிக்காவின் வருடாந்த இசை நிகழ்ச்சி நேற்றுமுன்தின... இடம்பெற்றது. நிகழ்வில் உலக நாடுகளில் இருந்தும் இசை... பிரபலங்கள் கலந்து கொண்டனர். இசைத்துறை சார்... விருதுகளும் வழங்கப்பட்டன. (ம-...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# நட்சத்திரப் பலன்கள்

**மிருகசீருடம் நட்சத்திரப் பலன்கள்**

நவக்கிரகங்களில் சந்திர பகவான் உதயமான நட்சத்திரம். இதன் அதிபதி செவ்வாய் ஆவார். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நல்ல வலுவான திரேகமும், நீண்ட கண்களும், அழகிய வாயும் உள்ளவர்கள். அழகிய கூந்தல் உடைய இவர்கள் நல்ல அறிவும் ஆற்றலும் உடையவர்கள். நல்ல ரசனைமிக்க இவர்கள் நயவஞ்சகமானவர்கள். மற்றவர்களை தூக்கி எறிந்து பேசும் இயல்புடையவர்கள். கலைகளில் ஆர்வம் உடையவர்கள். தெய்வ பக்தி நிறைந்தவர்கள். அரசால் ஆதரிக்கப்படுபவர்.

**மிருகசீருடம் நட்சத்திரம் : 1ஆம் பாதம்**

பருத்த சரீரம் உள்ள இவர்கள் பண விடயங்களில் சற்று கண்டிப்புடன் நடந்து கொள்வார்கள். எதிரிகளை கூண்டோடு ஒழிக்கும் எண்ணம் உடையவர்கள். அடிக்கடி கோபப்படும் இவர்கள் ஒழுக்கத்துக்கு அதிக முக்கியத்துவம் தர மாட்டார்கள். அடிக்கடி வெளியே சுற்றும் ஆர்வம் உடையவர்கள். நண்பர்களை பகைப்பார்கள்.

**மிருகசீருடம் நட்சத்திரம் 2ஆம் பாதம்**

மற்றவர்கள் செய்த உதவிகளை மறவாதவர்கள், நன்றி மறவாத இவர்கள் உண்மையை பேசுபவர்கள் யாரிடத்திலும் வீண் வம்புக்கு போகமாட்டார்கள் நவீன விஞ்ஞானத்தில் ஆர்வம் உடையவர்கள், ஏன் எதற்கு எப்படி என ஆராய்ச்சி மனப்பான்மை உடையவர்கள். காம குணம் அதிகம் உடையவர்கள்.

**மிருகசீருடம் நட்சத்திரம் : 3ஆம் பாதம்**

கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் உடைய இவர்கள் நன்றி மறவாதவர்கள். இறையருள் பெற்ற இவர்கள் வார்த்தைகளை அளந்து பேசுவர். எப்பொழுதும் சிரித்த முகத்துடன் எதையும் எதிர் கொள்ளும் தன்மை உடையவர்கள். தன்னம்பிக்கை மிக்கவர்கள். பெண்கள் விடயத்தில் பலவீனமானவர்கள்.

**மிருகசீருடம் நட்சத்திரம் : 4 ஆம் பாதம்**

வியாபரத்தின் மூலம் சொத்துக்கள் சேர்ப்பதில் ஆர்வம் உடைய இவர்கள், உடலில் ஆறாத புண்களை உடையவர். மற்றவரின் துன்பங்களை கண்டு மகிழ்ச்சி அடையும் குணம் உடையவர்கள். எப்பொழுதும் கோபத்துடன்காணப் படும் இவர்கள் காம குணம் மிகுந்து காணப்படுவர்.

**நாளை**

**கார்த்திகை-08**

புதன்கிழமை -23.11.2016

திதி: நவமி கா.08.10

நட்சத்திரம்: பூரம் மு.ப.11.36

ராகுகாலம்:12.11-01.41வரை

சுபநேரம்:04.41-06.11 வரை

# பெண்களின் எதிர்காலம் அவர்களது கைகளில்

உலகலேயே முதல் பெண் பிரதமரைத் தெரிவு செய்த நாடு இலங்கை ஆகும். ஐரோப்பிய, அமெரிக்க , ஆஸ்திரேலிய பகுதிகளில் பெண் சுதந்திரம் வலுவாகப் போற்றப்பட்டபோதும் ஜனாதிபதி என்ற பதவி பெண்ணுக்கு வழங்கப்படவில்லை. ஆனால் பின்தங்கிய நாடுகள் என விமர்சிக்கப்படும் தெற்காசிய நாட்டில் இருந்து ஒரு பெண் பிரதமர் உலகில் முதல்தடவையாக உருவானார்.

அமெரிக்க வரலாற்றில் இம்முறை தேர்தலில் தான் ஹிலாரி கிளிங்ரன் பெண் என்ற வகையில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டார். ஆனால் அதிர்ச்சித் தோல்வியைத் தழுவினார். பலரும் பெண் என்பதால் அவர் தோற்றார் எனவும் கருத்தியம்பினர். ஆனால் அவ்வாறு இல்லை. பொது மக்களின் வாக்குகள் அவருக்கு அதிகமாகக் கிடைத்தன. ட்ரம்ப் அமெரிக்க தேர்தல் முறைமையை நன்கு அறிந்து செயற்பட்டு அரசியல் நகர்வுகளை மேற்கொண்டார் என்பதுதான் உண்மை.

எமது சமூகம், சூழலில் பெண்கள் நலிந்தவர்களாகவே கணிக்கப்படுகின்றனர். பாலியல் பொருளாகவும், திறனற்றவள் என்பதும்தான் அனைவரது வியாக்கியானங்களுமாகும். காதலில் வெற்றியடையாத நிலை ஏற்படும் பட்சத்தில், பெண் மட்டுமே அதிக விமர்சனங்களுக்குள்ளாகிறாள். ஆனால் அவளை காதலித்த ஆணைப் பற்றி எந்தப் புரளிகளும் வருவதில்லை. பெண்கள்தான் கெடுக்கப்படக்கூடியவர்களென்றால், ஆண்களை ஏன் கெட்வர்கள் என்று சொல்லாமல், பெண்ணை மாத்திரம் கெட்டுப்போனவள் என விமர்சிக்க வேண்டும். பெண்ணுக்கு கற்பு அழிக்கப்படுகிறது என்றால், துர்நடத்தைக்குட்படுத்திய ஆணுக்கு கற்பு இரட்டை மடங்காகிறதோ? இந்தியாவில் பிரபல வல்லுறவு குற்றச்சாட்டுச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் கொலை செய்யப்பட்டுவிட்டாள் என்று பலரும் கொந்தளித்தனர். ஒருவேளை அந்தப் பெண் உயிருடன் இருந்திருந்தால் அவளுக்கான சமூக அங்கீகாரம் என்ன? எவர் அவளைத் திருமணம் செய்வார்? திருமணம் செய்ய ஒப்புக் கொள்ளும் ஆணை இந்தச் சமூகம் எவ்வாறு கண்கொண்டு பார்க்கும்?




இத்தனை அவலங்களும், கேள்விகளும், பிற்போக்கான உணர்வுகளும் நிறைந்த மக்கள், எவ்வாறு ஒரு பெண் ஜனாதிபதியைத் தெரிவு செய்தனர்? பெண் ஆட்சியை ஆதரித்தோ, பெண்களின் முன்னேற்றத்தை ஆதரிக்கும் சமூகமாக நாம் இன்னமும் மாறாத காலச் சூழலில் பெண் ஜனாதிபதி என்ற மகுடம் வெறும் அனுதாபப் போர்வையில்தான் சாத்தியமானது என்பது பலரது கருத்து. இது உண்மையாகவும் இருக்கலாம்..!

ஆனால் இந்தச் சூழலை ஹிலாரியுடன் ஒப்பிட முடியாது. அவரது ஆட்சியை ஆட்சியாக எதிர்பார்த்த சமூகம் அது. எதிர்பாராத தேல்விக்கு பல கண்டனங்களை உலக பெண் அமைப்புகள் எழுப்பின. ஆனால் உண்மையில் பாலினத் தோல்வி அல்ல, மாறாக ட்ரம்ப் எலக்ரோ கொலேஜ் வாக்குகளை சேகரிக்க மேற்கொண்ட உக்தி சிறந்த திட்டம் ஆகும்.

எமது சமூகத்தில் பெண் இன்னமும் கெட்டுப் பொகும் பொருளாகப் பார்க்கப்படும் நிலைக்கு ஒரு மாற்றம் அவசியம். அடுத்த சவால், இதுவரை பெண்களுக்கு வழங்கப்பட்ட சுதந்திரத்தை பயன்படுத்தினார்களா என்பதுதான். பெண்களின் எதிர்காலம் பெண்களின் கையில்தான் உள்ளது. சமூகத்தை உணர்ந்து தனித்துவத்துடன் செயற்பட்டால் வெற்றி நிச்சயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்ரனி பீற்றர்

# மகிழ்ச்சியான வாழ்வுக்கு பணமா? பந்தமா?

இன்றைய போட்டி நிறைந்த உலகினில் பணத்தைச் சம்பாதிக்கப் பல்வேறு வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன. விளம்பரங்களே பணம் திரட்டும் வழி முறைகள் தான் என்பதைப் பலரும் உணர்ந்து கொள்வதில்லை. கவர்ச்சி நிலைகள் எம்மை ஈர்ப்பதால் பெற்றோர் உறவுகளையே நோகடித்து, நாம் நினைத்த மகிழ்வை அடைகின்றோம். குடும்பம் வறுமையில் வாட இளையவர்கள் குதூகலமாக வருமான மற்ற செலவாளர்களாக வாழ்கின்றார்கள். பணத்தை மூலதனமாக்கும் பல்தேசியக் கம்பனிகள் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டுமென்ற நோக்குடையவர்கள்போல எம் உறவுகளின் உழைப்புக்கள் ஏப்பமிடப்படுகின்றன.

உலக வாழ்க்கையிலே ஒவ்வொரு உயிரினமும் தத்தமது குழுமங்களுடன் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, பெருகி, மடிந்து அடுத்த பரம்பரை தொடர உலகம் ஓடிக்கொண்டிருக்கின்றது. மற்றைய உயிரினங்களின் இனத்துவ வாழ்க்கைவட்டத்தை ஆராய்ந்து அறிந்து கொள்ளும் மனிதன் தனது இனத்துவ வாழ்க்கையில் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையை எப்படி அமைத்துக் கொள்ளலாம்என்பதைஅறியாதவனாக இருக்க முடியாது. ஆனாலும், மகிழ்ச்சி நிறை வாழ்வானது பந்த பாசங்களினாலே கட்டப்பட்டதாக முற்காலங்களிலே மேலோங்கி இருந்ததை அறிந்திருக்கின்றோம். காலப்போக்கில் உழைப்பு வருவாய் பணம்வாழ்க்கையின் அளவு கோலாகக் கருதப்பட்டமையால் பந்தபாசங்களுக்கு மேலாக பணமே எல்லாவற்றையும்தீர்மானிக்கின்ற முதன்மைக் காரணியாக மாற்றம் பெறலாயிற்று.

இன்று உலகு சார்ந்த பொருளாதார வர்த்தக முறைமைகளுக்கு பணம் முதன்மைத் தன்மையை உருவாக்கினாலும் அன்று மனிதனுடைய குடும்ப வாழ்வைத் தீர்மானிக்கின்ற அதாவது ஓர் ஆணும் ஒரு பெண்ணும் அன்பினால் இணைந்து ஒரு குடும்பமாக உருவாகுவதற்கு பணமே முதன்மைக் காரணியாகக் கொள்ளப்படவில்லை. ஆனால் பணமின்மையால் இன்று பருவ வயதை அடைந்தும், குடும்ப வாழ்வில் நுழைய முடியாமல் பெண்களும் அவர்கள் சார்ந்த குடும்பத்தினரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகி-மனமுடைந்த நிலையிலே காணப்படுகின்றனர்.


இந்தியா-இலங்கை போன்ற நாடுகளிலே சீதனம் என்ற ஆண்மைத்துவ மேலாதிக்கத்தைக் காட்டும் பேரம் பேசுதல் மூலம் திருமணம் என்ற இருமனங்கள் ஒன்றிணையும் வாழ்வு நிச்சயிக்கப்பட்டு, குடும்பங்கள் சமூகத்திலே அங்கத்துவம் பெறுகின்றன. பணவலிமையுள்ள குடும்பங்களின் பெண்கள் விரைவாகத் திருமண வாழ்வில் நுழைய நடுத்தரக்குடும்பப் பெண்களே பருவவயதையும் கடந்து-வாழ்க்கைத் துணையைத் தேடுவதிலே காலங்கடந்து வாழ்கின்றார்கள் என்பது வேதனையும்-வெட்கமும் தரும் செயலாகும், இதுவே இன்று நடைமுறையில் உள்ளது. முஸ்லிம்-சிங்கள மக்களிடம் இந்தச் செயலானது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது.

ஏனைய மனிதர்களைவிட, இயற்கையாகவே உயிரினக் குழுமங்களிடையே இனவிருத்தியை உண்டு பண்ணும் இனச் சேர்க்கையானது பேரம் பேசியோ பணம் பெற்றோ தரகு நிலைப்பட்டோ நடைபெறுவதில்லை. அவை பகுத்தறிவற்றவைகளாக இருந்தாலும், பண்பில் உயர்ந்தவை என்றுதான் சொல்ல வேண்டும். கற்றறிந்த மனிதன்தான் பேரம் பேசி விலைக்கு வாங்கி கொண்டவளின் சொத்தால் குபேர வாழ்வு வாழ்கின்றேன் என்று நினைக்கின்றான்.

இங்கே ஒரு புரிந்துணர்வு (எல்லோரிடமும்) உண்மையான அன்புற இருக்கும் என்று எதிர்பார்க்கலாமா? பணம் வாழ்க்கைக்குத் தேவை. அதனை உழைத்துப் பெற வேண்டும். எவரோ கஷ்டப்பட்டு-நஷ்டப்பட்டு தருவார்கள். அதனை நாம் பெற்று மகிழ்ச்சியாக வாழலாம் என்ற கோட்பாடு தவறானது. தவறுகள் திருத்தப்பட வேண்டும். தான் உழைத்த உழைப்பில் சம்பலும் சோறும் சாப்பிடுவதில் வரும் இன்பம் கடன்பட்ட பணத்தில் பிரியாணி வாங்கிச் சாப்பிடுவதில் வராது. வருந்திய பணம் திருப்தி தராது. அடிமை கொடுக்கும் இன்பம் அன்பாகாது. பணமும்-பண்டமும் துணையாக முடியாது. திருமணமும் இதற்கு விதிவலக்கல்ல. குடும்பவாழ்வு கொண்டாட்டத்துடன் முடிவதல்ல. மணவாழ்வு என்பது சாவு வரை தொடர்வது. அரைமணங்கள் கால் மணங்களெல்லாம் அன்பற்ற பணத்தினாலே முறிவடைகின்றன. இன்றைய சினிமாவும் தொலைக்காட்சித் தொடர்களும் திருமண பந்தத்தைக் கொச்சைப்படுத்துகின்றன. வரதட்சணையும், வன்முறையும், அடிதடியும், ஆள்கடத்தல்களும் அன்பைப் பெற முயற்சிக்கின்றன. பணத்தின் வலிமையால் பண்பாடு, கலாசாரம் ஆகியன மழுங்கடிக்கப்படுகின்றன. கணவன்-மனைவி உறவுகள் கண்ணிய மற்றதாகக் காண்பிக்கப்படுகின்றன.

மகிழ்ச்சி நிறை வாழ்வைப் பெறவேண்டும் என்ற அவாவலில் பந்தபாசங்கள் எல்லாம் அறுத் தெறியப்பட கோடிகளைப் பெற்று கோடீஸ்வரர்களாக சமூகத்தைக் கெடுக்கும் போதைப் பொருள்களையே கடத்துகின்றனர். ஒரு குடும்பத்தில் உள்ள தந்தையோ-மகனோ ஏனைய இளைய சமுதாயமோ போதைப் பாவனைக்கு அடிமையாவதால் குறிப்பிட்ட நபர் சார்ந்த குடும்பம் வேதனை அடைகின்றது. சண்டை சச்சரவுகளும் பொறுப்பற்ற தன்மைகளும் நிகழுவதால் மகிழ்ச்சியை மறந்து துன்பத்தையே அந்தக் குடும்பங்கள் சுமக்கின்றன. இப்படியான நிலைகள் இன்று எம்மத்தியில் படர்ந்து செல்கின்றன.

இன்றைய போட்டி நிறைந்த உலகினில் பணத்தை சம்பாதிக்க பல்வேறு வழிகள், மேற்கொள்ளப்படுகின்றன. விளம்பரங்களே பணம் திரட்டும் வழி முறைகள் தான் என்பதைப் பலரும் உணர்ந்து கொள்வதில்லை. கவர்ச்சி நிலைகள் இளையவர்களை ஈர்ப்பதினால் பெற்றோர் உறவுகளையே நோகடித்து, நாம் நினைத்த மகிழ்வை அடைகின்றோம். குடும்பம் வறுமையில் வாட இளையவர்கள் குதூகலமாக வருமானமற்ற செலவாளர்களாக வாழ்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பணத்தை மூலதனமாக்கும் பல்தேசியக் கம்பனிகள் எல்லோரும் எல்லாமும் பெறவேண்டுமென்ற நோக்குடையவர்கள்போல எம் உறவுகளின் உழைப்புக்கள் ஏப்பமிடப்படுகின்றன.

இந்தக்காலத்தில் உண்மையான உழைப்புஉதாசீனம்செய்யப்படுகின்றது. திடீர் பணம், திடீர் முன்னேற்றம், திடீர் ஆடம்பரங்கள், ஒன்றுபட்டு உழைத்த தமக்கே உரித்தான தொழில்துறைகளை இழந்து நிற்கும் நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கியுள்ளது. அரசதுறைகளை விட தனியார் துறை ஊதியம் பன்மடங்கு இருப்பதனால், சொந்தபந்தங்கள் பந்தபாசங்கள் மதிக்கப்படாநிலையையும் காணப்படுகின்றது. கை நிறையக் காசு, கார் என்பவைகள் கணிப்புப் பெற கண்ணியமுள்ள செய்யும் தொழில்கள் கவலைக்கிடமான நிலையில் விடுபடும் ஆபத்தான நிலைகள் பின் தொடர்ந்து கொண்டு இருக்கின்றன. குடும்பவாழ்வு உறவு முறைகளும் பந்தங்களை விட பணமே தீர்மானிக்கிறது என்பதால், எமது முன்னைய அன்புறவு-பந்தபாசம் மீளவும் எம் குடும்பங்களிலே வாழப்பட வேண்டும். சங்கிலித் தொடரான குடும்ப உறவுகள் மதிக்கப்பட்டு பேணப்பட ஊர் கூடித் தேரிழுத்தல் போல் கிராமத்தைத் திரும்பிப் பார்த்து புதுப்பிக்கப் படவேண்டும். அப்போதே முன்னைய மகிழ்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கட்டுரையாளர்:
(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்.)


# நம்பிக்கையின் மகத்துவம்

ஓர் அழகான சிறிய கிராமத்தில் கண்ணன் என்ற நெசவாளி இருந்தான். கண்ணன் ஏழையானாலும் ஸ்ரீராமபிரானிடம் பக்தி உள்ளவனாக விளங்கினான். இந்த உலகம் இயங் குவதே பகவானின் கருணையால் தான் என்ற உறுதியான நம்பிக்கையுடன் வாழ்ந்தான். அவனது நாளாந்த வாழ்க்கையில் தினமும் விடியற்காலையில் எழுந்து படுக்கையிலேயே இருந்து கொண்டு சிறிது நேரம் ராமநாம ஜபம் செய்வான். பின்பு ராமா ராமா எனஉச்சரித்துக் கொண்டே ஆற்றில் குளிப்பான். அதன்பின் கடவுளுக்குப் படைத்த உணவு எதுவானாலும் உண்பான். அதன்பின் தனது அன்றாட அலுவல்களை உற்சாகத்துடன் செய்வான். தறியில் இருந்துவரும் டக்... டக்... என்ற சப்தம் கூட அவனுக்கு ராம்... ராம் என்றே கேட்பதாக இருக்கும். தான் நெய்த துணியை வாடிக்கையாளர் களிடம் விற்கும் போது கூட அவர்களுடன் வேடிக்கையாகவும் அன்போடும் பேசுவான் . துணி என்னவிலை என்று கேட்டால் ராமனின் இச்சைப்படி நூல் விலை ஒரு ரூபாய். ராமனின் இச்சைப்படி நெசவு கூ லி ஐம்பது சதம். இராமனின் இச்சைப்படி இலாபம் இருபது சதம். இராமனின் இச்சைப்படி இதன்விலை ஒருரூபாய் எழுபது சதம் என்பான்.

அவனுடைய நேர்மை கடவுள் மேலுள்ள அபாரபக்தி, அன்பு நிறைந்த உள்ளம் என்பன எல்லோரையும் கவர்ந்ததனால் கண்ணன் நேர்மையானவன் என்பதில் நம்பிக்கை உடையவர்களாக இருந்தனர். அதனால் அவன் சொன்ன விலைக்கு மறு பேச்சு இல்லாமல் துணியை வாங்குவர்.

ஒருநாள் இரவு ஒரே புழுக்கம், ஓர் இலைகூட அசைய வில்லை. எங்கோ தூரத்தில் இரவு 12 மணி அடிக்கும் சத்தம் கேட்டது. நீண்ட நேரமாகியும் தூக்கம் வராததால் விறாந்தையில் அமர்ந்து ஜபம் செய்து கொண்டு இருந்தான் கண்ணன் . ஒரு நாய் குரைத்துக்கொண்டே ஓடியது. ஒருவீட்டைக் கொள்ளை அடித்துவிட்டுக் கொள்ளைக்காரர்கள் அந்த வழியாகக் கூட்டமாக வந்து கொண்டிருந்தனர்.

கூட்டத்தின் தலைவன் தனியாக விறாந்தையில் இருந்த கண்ணனைக் கண்டான். தூக்கி வந்த மூட்டையைத் தூக்க அவனுக்கு ஆள் தேவைப் பட்டது. கண்ணனைப் பார்த்து எங்களுடன் இந்த மூட்டையைச் சுமந்து வா என்று அவனை வெளியில் இழுத்து வந்து மூட்டையை அவன் தலையில் வைத்தான். இதைச் சுமந்து கொண்டு எங்களுடன் வா என்றான். கண்ணனோ ஏதும் பேசாது ராமன் விட்ட வழி என்று அவர்களுடன் மூட்டையைச் சுமந்து சென்றான். திடீர் என ஒரு பொலிஸ் வான் பொலிஸாருடன் வருவது கண்ட கொள்ளையர்கள் அடித்தோம் பிடித்தோம் என்று பாய்ந்து ஓடி விட்டனர். பாவம் கண்ணன் பொலிஸாரிடம் வகையாக மாட்டிக் கொண்டான். பொலிஸார் மூட்டையுடன் அவனைக் கைது செய்து காவல் நிலையத்துக்குச் சென்று இரவு முழுவதும் அடைத்து வைத்தனர். மறுநாள் காலை அவனை நீதிபதியின் விசாரணைக்காக நிறுத்தினர்.



இதற்குள் ஊரே பதற்றப்பட்டு நீதிமன்று முன் கூடினர். கண்ணனுக்கா இந்தக்கதி? அவன் ஒரு நாளும் இப்படிச் செய்திருக்கமாட்டானே என்ற அங்கலாய்ப்புடன் நீதிமன்று முன் நின்றதைக் கண்ட நீதிபதியும் ஆச்சரியம் அடைந்தார். கண்ணனைப் பார்த்து என்ன நடந்தது என்று வினவினார்.


கண்ணனும் ராமனின் இச்சைப்படி நடந்ததைக் கூறினான். ஊர் மக்கள் ஆகா! ஐயோ! என்று பதறினார்கள். சிலர் கண்ணீர் விட்டனர். ஐயா ராமனின் இச்சைப்படி இப்போது நான் தங்கள் முன்னிலையில் நிறுத்தப்பட்டிருக்கிறேன் என்று கூறி குழந்தைபோல கள்ளம் கூட இன்றி நின்றான்.

நீதிபதி தனது கண்களைத் தன் கைத்துண்டால் துடைத்து உலர்ந்து போயிருந்த உதடுகளை நாவால் நனைத்துக் கொண்டு உடனே கண்ணனை விடுதலை செய் என உத்தரவிட்டு விட்டு தன் அறைக்குள் விரைந்து விட்டார். கண்ணன் வெளியில் வந்ததும் மக்கள் அவனைச் சூழ்ந்து கொண்டு மலர் மாலை அணிவித்து நம்பிக்கையின் உறுதிக்கு வாழ்த்து தெரிவித்தனர். கண்ணன் அவர்களிடம் அந்த ராமனின் இச்சைப்படியே என்னை விடுதலை செய்து விட்டார்கள் என்று கூறி ஸ்ரீ ராமபிரானுக்கு ஜெய்! என்று உரத்துக் கூறினான். மக்களும் பதிலுக்கு ஜெய் என்று கோசமிட்டு கடவுளுக்கு தங்கள் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்ததுடன் நம்பிக்கையின் மகத்துவத்தையும் உணர்ந்து கொண்டனர்.

தெல்லியூர்த்தேவி

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

*கடலைக் கடக்கும் இரும்பு போன்ற மன உறுதியும்; மலைகளையே துளைத்துச் செல்லும்; வலிமையான தோள்களுமே; நமக்குத் தேவை. வலிமைதான் வாழ்வு. பலவீனமே சாவு. மிகப் பெரிய இந்த உண்மையை உணந்து கொள்ளுங்கள்.*



# வர்ணம் தீட்டுவோம் வாங்க

# வரலாற்றில் இன்றைய தினம்

1574 - சிலிக்கு அப்பால் யுவான் பெர்னாண்டஸ் தீவு கண்டுபிடிக்கப்பட்டது.

1935 - கலிபோர்னியா அலமெபாவையும் மணிலாவையும் இணைக்கும் வர்த்தக பசுபிக் விமானசேவை தனசனா கலிபர் தொடங்கப்பட்டது.

1943 - லெபனான் பிரான்சிடமிருந் சுதந்திரம் பெற்றது.

1954 - பிராணிகளை விதையிலிருந்து காக்கும் அமெரிக்காவின் ஹியூமேன் சொசைட்டி தொடங்கப்பட்டது.

1973 - இத்தாலிய பாஸிஸ்ட் அமைப்பான ஓர்டைன் நெளவோ கலைக்கப்பட்டது.

1974 - ஐ.நா பொதுச்சபையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டது.

1977 - லண்டன் நியூயோர்க்குக்கு சுப்பசொனிக் கொன்கோர்ட் விமான சேவையை பிரிட்டிஷ் ஏயர் வேய்ஸ் தொடங்கியது.

2002 - உலக அழகி போட்டியாளர்களை இலக்கு வைத்து நைஜீரியாவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்றில் 100 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

1992 - உளவுப் படையினர் பற்றாக்குறை புலிகளின் செயற்பாடுகளை கொழும்பில் தடுப்பது கஷ்டம் என இராணுவம் கைவிரிப்பு.

- ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் ந.சபாரத்தினம் காலமானார்.

1996 - அரசுக்குத் தொல்லை கொடுத்தால் நாடாளுமன்றம் கலைக்கப்படுமென பொ.ஐ.முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை.

- அரச நியமனங்களில் விகிதாசாரப் புறக்கணிப்பு. கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் நாடாளுமன்றில் தெரிவிப்பு.


1999 - மடு தேவாலயப் பகுதி இறந்தோரில் 34 பேரின் சடலங்களை உறவினர் அடையாளம் காட்டினர். இரட்டைப் பிள்ளைகள் உட்பட ஒரே குடும்பத்தில் 4 பேர் சாவு.

- மடு சம்பவம் அருகருகே தோண்டப்பட்ட குழிகளில் 26 சடலங்கள் அடக்கம்.

2006 - நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றால் மட்டுமே அரசு ஏ-9 பாதையை நிரந்தரமாகத் திறக்குமாம். அரசின் நிலைப்பாட்டை விளக்குகிறார் ரம்புக்வெல.

- அடுத்த வரவு-செலவுத் திட்ட உரை தமிழீழத் தலைநகர் திருமலையிலென நாடாளுமன்றில். நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன் தெரிவிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விக்ரமுடன் ஜோடி சேரும் சாய்பல்லவி

பிரேமம் சாய்பல்லவி பற்றி சமீபத்தில் சில கிசுகிசுக்கள் வந்தன. இது குறித்து பேசிய அவர், "எப்படி இப்படி பேசுகிறார்கள் எனத் தெரியவில்லை. தமிழ் சினிமாவில் இயக்குநர்கள் யாரும் என்னை அழைக்கவில்லை. வாய்ப்பு வந்தால் நடிப்பேன்" என கூறினார்.

தற்போது அவருக்கு அதிர்ஷ்டம் கதவை தட்டியுள்ளது. கரிகாலன் படத்துக்காக ஏற்கனவே கொடுத்திருந்த ஒப்பந்தத்துக்குப் பதிலாக விக்ரம், இப்போது வாலு படத்தை எடுத்த விஜய்சந்தர் இயக்கத்தில் நடிப்பது உறுதியாகிவிட்டது. இதன் நாயகியாக கீர்த்தி சுரேஷ் பல படங்களில் ஒப்பந்தமாகி இருப்பதால், அவருக்குப் பதிலாக சாய்பல்லவியை ஜோடியாக நடிக்க ஒப்பந்தம் செய்துள்ளார்கள். வடசென்னையை மையப்படுத்திய கதையைக் கருவாகக் கொண்டு இந்தப் படம் எடுக்கப்படுகிறதாம். இதில் சூரி, யோகி பாபு, சமுத்திரக்கனி என முக்கியமானவர்களும் நடிக்கிறார்களாம்.





## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** தன்மானத்திற்கு சோதனை வரலாம். தொழில் சார்ந்த இடையூறுகளை, தாமதமின்றி சரி செய்வது நல்லது. லாபம் மிதமாக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் அவசியம். உடல் நலனில் அக்கறை தேவை.

**இடபம்:** உங்கள் செயலில், கவனச் சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப் போட்டி அதிகரிக்கும். வருமானம் கிடைப்பதில் கால தாமதம் ஏற்படும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**மிதுனம்:** பணிகளை நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும். வருமானம் அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கடகம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம்செய்யலாம். தொழில், வியாபாரத்தில்லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள், கண்ணும் கருத்துமாக படித்து முன்னேறுவர்.

**சிங்கம்:** தைரியம் மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் திருப்திகரமாக இருக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**கன்னி:** கொடுத்த வாக்குறுதி நிறைவேற்ற தாமதமாகும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். உறவினர் வகையில், பணம் செலவு செய்ய நேரிடலாம். உடல் நலனில் அக்கறை செலுத்துவது நல்லது.

**துலாம்:** வாழ்வில் இனிய அனுபவம் காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். லாப விகிதம் அதிகரிக்கும். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

**தனுசு:** சமயோசிதமாக செயற்பட்டு நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற, கடின உழைப்பு தேவைப்படும். உறவினர் வருகையால், வீட்டுச் செலவு அதிகரிக்கும். வாகன போக்குவரத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**மகரம்:** உங்களின் எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் சீர்திருத்தத்தில் ஈடுபட வாய்ப்புண்டு. மிதமான பணவரவு கிடைக்கும். ஒவ்வாத உணவுகளைத் தவிர்ப்பது அவசியம்.

**கும்பம்:** மனதில்மகிழ்ச்சிநிலைத்திருக்கும்.செயல்களில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**மீனம்:** முக்கிய செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பணக்கடன் செலுத்துவீர்கள். குடும்பத்தில், சுப நிகழ்ச்சி நடத்த திட்டமிடுவீர்கள்.

டாக்டர் நீங்க சொன்னபடி
ஒவ்வொருநாளும் ஒரு லீற்றர் தண்ணி
குடிச்சா சுகர் குறஞ்சிடுமா எப்படி?



டாக்டர்: சின்ன விசயம்
தண்ணில சுகர் கரஞ்சிடுமே...

வகுப்பு அறையில் இரு மாணவிகள்
கடைசி பெஞ்சில் வாக்குவாதம்
செய்து கொண்டு இருந்தார்கள்:
மாணவி 1: நீ ஒரு லூசுடி
மாணவி 2: நீ தாண்டி லூசு



டீச்சர்: அங்க என்னாங்கடி சத்தம்...
இங்க நான் ஒருத்தி இருக்கிறது உங்க
கண்ணுக்கு தெரியலையா...?

பூக்காரி பொண்ண கட்டினது
தப்பா போச்சுப்பா... ஏன்னே?



பின்ன... தினமும் காலைல
தண்ணி தெளிச்சு எழுப்புறாப்பா...



**வள்ளி😊ம(கன்)ணிகண்டன்**
ஒரு தவறை ஆயிரம் வழிகளில் செய்யலாம். ஆனால், ஒரு நல்லதை ஒரே நல்வழியில் மட்டுமே செய்ய முடியும்.

10 6

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 2 | 9 | | | | | |
| | | 3 | | | 2 | | 1 | |
| 1 | | | 5 | | | | 6 | 2 |
| 5 | 3 | | | | | | | |
| 4 | | | | | | | 3 | 8 |
| | | | 2 | 4 | | | | |
| | | | 4 | | | | | |
| | | 1 | | 8 | | 2 | 7 | |
| | 9 | | | | | 1 | | |


### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 8 | 1 | 9 | 6 | 5 | 4 | 7 | 2 |
| 4 | 2 | 7 | 1 | 8 | 3 | 9 | 5 | 6 |
| 9 | 5 | 6 | 4 | 7 | 2 | 8 | 3 | 1 |
| 1 | 7 | 9 | 6 | 2 | 4 | 5 | 8 | 3 |
| 8 | 3 | 4 | 7 | 5 | 1 | 2 | 6 | 9 |
| 2 | 6 | 5 | 8 | 3 | 9 | 1 | 4 | 7 |
| 5 | 4 | 2 | 3 | 1 | 7 | 6 | 9 | 8 |
| 7 | 9 | 8 | 2 | 4 | 6 | 3 | 1 | 5 |
| 6 | 1 | 3 | 5 | 9 | 8 | 7 | 2 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிர லிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பளபளப்பற்ற மாபிள்கள் அறிமுகமாகியுள்ளன. வழுக்கு வதைத் தவிர்க்க இவை உதவும். நீடிய பாவனையுடன், பொது இடங்கள், வயோதிபர் பாவனையுள்ள இடங்களில் பதிக்கலாம். இவை அவற்றின் அளவுகளின் அடிப் படையில் 700 ரூபாவில் இருந்து, ஆயிரத்து 600 ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றன.

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 80 | 60 | 60 | 40 | 40 | – | 50 |
| கத்தரி | 70 | 60 | 60–80 | 60 | 60 | 60 | – | 35 |
| கரட் | 70 | 80 | 60–120 | 100 | 80–120 | 140 | – | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 40 | 60 | 50 | 60 | – | 60 |
| பயிற்றை | 100 | 100 | 160 | 100 | 100–120 | 160 | – | 60 |
| பாகல் | 120 | 100 | 160 | 120 | 120 | 180 | – | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 100 | 60 | 120 | – | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 100 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 100 | 100 | 100 | 120 | 100 | 140 | – | 70 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 35 | 70 | – | 30 |
| தக்காளி | 60 | 60 | 60 | 60 | 40–60 | 80 | – | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 40 | 50 | 40–50 | 80 | – | 40 |
| கீரை | 30 | 30 | 30 | 10 | 20 | 40 | – | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 30 | 20 | 40 | – | 10 |
| பச்சை மிளகாய் | 70 | 50 | 60 | 60 | 60 | 80 | – | 70 |
| புடோல் | 50 | 50 | 60 | 60 | 50 | 60 | – | 50 |
| கோவா | 60 | 80 | 80 | 60 | 60 | 80 | – | 50 |
| வெண்டி | 100 | 80 | 80 | 60 | 60 | 40 | – | 30 |
| போஞ்சி | 220 | 180 | 180 | 180 | 180 | 220 | – | 120 |
| லீக்ஸ் | 120 | 120 | 120 | 100 | 100 | 160 | – | 100 |
| தேங்காய் | 50 | 35 | 45 | 35–40 | 30 | 40 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 | 100–120 | 120 | – | 120 |
| தேசிக்காய் | 400 | 500 | 500 | 500 | 550 | 600 | – | 200 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 10 | 20 | – | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 100 | 120 | 140 | – | 70 |
| இராசவள்ளி | – | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 60 | 40 | 80 | 80 | – | 100 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | வவுனியா | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | – | 650 | 800 | – |
| நண்டு | 250 | 400 | 200 | – | 450 | 400 | 500 |
| கணவாய் | 600 | 600 | 400 | – | 550 | 600 | – |
| பாரை | 550 | 500 | 400 | – | 650 | 400 | 350 |
| சுறா | 500 | 500 | 500 | – | 700 | – | 350 |
| சீலா | 300 | 400 | 300 | – | 450 | 400 | 300 |
| விளை | 650 | 500 | 300 | – | 500 | 500 | 350 |
| முரல் | 300 | 300 | 300 | – | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 300 | 400 | – | 400 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 800 | 300 | – | 500 | 200 | – |
| ஓரா | 400 | 350 | 300 | – | 300 | 300 | – |
| திரளி | 300 | 200 | 100 | – | 250 | 150 | – |
| நகரை | 250 | 200 | 100 | – | 300 | 200 | 300 |
| சூடை | 150 | 100 | 100 | – | 200 | 150 | – |
| ஒட்டி | 300 | 200 | 200 | – | 300 | 200 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | – | 400 | – | – |
| மதனம் | 150 | 200 | – | – | 300 | 250 | 200 |
| கொய் | 100 | 100 | 50 | – | 120 | 50 | – |
| பாலை | 400 | 130 | 300 | – | 400 | 250 | – |
| வாழை | 100 | 150 | – | – | 300 | 200 | – |




## தலை அலங்காரம்

1 படத்தில் காட்டியவாறு தலை முடியை மூன்றாக பிரித்துக் கட்டுக.

2 அவ்வாறு பிரிக்கப்பட்டவற்றின் அடியில் ஹூல் பாண்ட் இட்டுக் கொள்க.

3 ஒவ்வொரு பிரிவுகளையும் கொண்டை போன்று சுற்றி கிளிப் செய்க.

4 மூன்று பிரிவுகளையும் அவ்வாறு செய்க. அலங்காரம் தயார்.

## பப்பாளி அப்பம்



### தேவையான பொருள்கள்

பப்பாளிப் பழம் – ஒன்று
கோதுமை மா – 100 கிராம்
பொட்டுக்கடலை மா – 50 கிராம்
அரிசி மா – 2 தேக்கரண்டி
வெல்லம் – 100 கிராம்
ஏலப்பொடி – அரை தேக்கரண்டி
நெய் – 50 கிராம்

### செய்முறை

பப்பாளிப் பழத்தை தோல் சீவி, விதைகளை நீக்கி மிக்ஸியில் மென்மையாக அரைத்துக் கொள்ளவும். வெல்லத்தை நீரில் கரைத்து வடிகட்டவும். அதில் கோதுமை மா, பொட்டுக் கடலை மா, அரிசி மா, ஏலப்பொடி, பப்பாளிப் பழ விழுது இவற்றை சேர்த்து கெட்டியாக கரைத்துக் கொள்ளவும். சட்டியில் நெய் விட்டு மாவை அப்பமாக ஊற்றவும். 2 [illegible] கழித்து அப்பம் வெந்ததும் இறக்கி விடவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டமைப்பினர் மீது தாக்குதல்

# தப்பிய ஈபிடிபியினருக்கு பன்னாட்டுப் பிடியாணை

பணிப்பாளருக்குக் கட்டளையிட்டார் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன்.

இந்த வழக்கு விசாரணைக்காக நேற்றைய தினம் மன்றில் எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது 3ஆம்மற்றும் 4ஆம் எதிரிகளே முன்னிலையாகி இருந்தனர். சாட்சியங்களுக்காக அழைக்கப்பட்டிருந்த வழக்குத் தொடுநர் சாட்சிகள் எவரும் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

- ஒருவர் உயிரிழந்தார் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ்) மற்றுமொருவர் வெளிநாட்டில் வசிக்கின்றார். ஏனையவர்களின் வதிவிட முகவரியில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால் அழைப்புக் கட்டளை அவர்களிடம் சேர்ப்பிக்கப்படவில்லை. அவர்களுக்கு மீண்டும் அழைப்புக் கட்டளை வழங்க மன்று கட்டளையிட வேண்டும் – என்று சட்டமா அதிபர் திணைக்களம் சார்பாக முன்னிலையான அரச சட்டத்தரணி நா. நிசாந் கோரினார்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கட்டளையில் தெரிவித்ததாவது:

இன்று (நேற்று) மன்றில் முன்னிலையாகாத சந்தேக நபர்கள் மதன் மற்றும் செபஸ்ரியன் (நெப்போலியன்) ஆகியோருக்கு மீண்டும் அனைத்துலகப் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்படுகின்றது. அவர்கள் சார்பாகச் சட்டத்தரணி மன்றில் முன்னிலையாகியுள்ளார். அவரினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு மன்று அனுமதி வழங்குகின்றது. அனைத்துலகப் பகிரங்கப் பிடியாணை இலங்கைப் பொலிஸ்மா அதிபரின் ஊடாக வழங்கப்படுகின்றது. இதில் நடராசா மதனராசா அல்லது மதன் என்பவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்துள்ளார். அவர் ஓய்வூதியம் பெறுவதற்கான காலத்தை முழுமையாக முழுமை செய்துள்ளாரா? அவர் தற்போதும் ஓய்வூதியம் பெறுபவராயின் அதனை உடனடியாக மறு அறிவுறுத்தல் வரை நிறுத்தி வைக்குமாறும், அது தொடர்பில் யாழ். மேல்நீதிமன்றப் பதிவாளருக்கு அறிக்கை முன்வைக்குமாறும் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளருக்கு மன்று உத்தரவிடுகின்றது.

சந்தேக நபர்கள் மீது கொலைக் குற்றச்சாட்டு மற்றும் கொலை முயற்சி குற்றச்சாட்டு என்பன பதிவாகியுள்ள நிலையில் ஐரோப்பிய நாடுகளில் தலைமறைவாக வசித்து வருவதாகவும், இலங்கை அரசும் ஐரோப்பிய ஒன்றியமும் கைச்சாத்திட்டுள்ள குற்றவாளிகளை நாடு கடத்தும் ஒப்பந்தத்தின் படி இந்தச் சந்தேகநபர்கள் நாட்டுக்குள் வரும் போது, கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்துக் கைதுசெய்யுமாறு குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்கு மன்று உத்தரவிடுகின்றது. சந்தேக நபர்களை நாடு கடத்தும் விடயத்தில் நீதி மற்றும் அயலுறவு அமைச்சுகளின் செயலாளர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இரண்டு சந்தேகநபர்களும் கட்டுநாயக்கவில் இருந்து எவ்வாறு வெளியேறினார்கள். இவர்கள் இறுதியாகப் பாவித்த கடவுச்சீட்டின் பிரதி, பயணம் செய்த விமானம் தொடர்பான தகவல்கள், எவ்வாறு வெளியேறினார்கள், அமைப்புக்களுடன் சேர்ந்து வெளியேறினார்களா? கூட்டம் தொடர்பாக வெளியேறினார்களா? மேல் நீதிமன்ற பிணையில் உள்ள நபர்கள் எவ்வாறு சட்ட ரீதியாக நாட்டைவிட்டு வெளியேறினார்கள் என்பது தொடர்பான அறிக்கையையும் இரண்டு சந்தேக நபர்களும் அரச கட்டளையின் படி வெளியேறினார்களா அல்லது அரசின் பரிந்துரையில் வெளியேறினார்களா? எந்தத் துறையினர் நுழைவிசைவு அனுமதி வழங்கியது தொடர்பான அறிக்கைகளையும் மன்றில் முன்வைக்குமாறு குடிவரவு-குடியகல்வுத் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு மன்று உத்தரவிடுகிறது என்று அறிவித்தார்.

பின்னணி

2001ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி தீவகத்தில் தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது நாரந்தனை பகுதியில் தாக்குதல் மேற் கொண்டதில், இரண்டு பேர் கொல்லப்பட்டதுடன் 15க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தொடரப்பட்டு, பின்பு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றுக்கு பாரப்படுத்தப்பட்டது. 2010ஆம் ஆண்டு சில காரணங்களுக்காக திருகோணமலை மேல் நீதிமன்றத்துக்கு வழக்கு விசாரணை மாற்றப்பட்டது. மீண்டும் யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்துக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது.

இதன் தொடர் சாட்சிப் பதிவுகள் நேற்றிலிருந்து எதிர்வரும் 2ஆம் திகதி வரை இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

(த-வ-6)

## போராளிகளுக்கு மகிந்த கொடுத்த கடனால் சிக்கல்

றுக் கொண்ட முன்னாள் போராளிகள் தாமாகவே அவற்றைச் செலுத்த வேண்டும் என்று புனர்வாழ்வு அதிகார சபை கோரிக்கை விடுத்துள்ளது.

புனர்வாழ்வு அதிகார சபையின் வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல், யாழ். மாவட்டச் செயலகத்தில், மேலதிக மாவட்டச் செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான கடன்கள் வழங்கப்பட்டமை தொடர்பில் பேசப்பட்டது. கடன் வழங்கப்படும் போது உரிய தரவுகள் இன்றி வழங்கப்பட்டமையினால் அவற்றை மீளப் பெறுவதில் வங்கிகள் சிரமத்தை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் கடன்களைப் பெற்றுக் கொண்ட முன்னாள் போராளிகள் தாமாகவே முன்வந்து அவற்றைச் செலுத்துமாறு கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

அடுத்த ஆண்டு முன்னாள் போராளிகளுக்குக் வாழ்வாதாரக் கடன் வழங்குவது தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. தொழில் முயற்சியில் ஈடுபடும் முன்னாள் போராளிகளுக்கு வங்கிகள் ஊடாக 6 வீத வட்டியில் கடன் வழங்கப்படும் என்று இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் என்.பத்மநாதன் கலந்து கொண்டார்.

(த-5-8)

# அமைச்சின் செயலர் திடீரென இடமாற்றம்

## பொருத்து வீட்டுத் திட்டத்துக்கு இணங்க மறுத்தமை காரணமா ?

ளார். இடமாற்றத்துக்கான காரணம் என்னவென்று அறிவிக்கப்படவில்லை.

பொருத்து வீட்டுத் திட்டத்துக்குச் செயலர் வே.சிவஞானசோதி இணங்க மறுத்தமையே காரணம் என்று தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் உண்மையில்லை என்று அமைச்சர் சுவாமிநாதன் மறுத்துள்ளார்.

கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் மீள்குடியேற்ற அமைச்சின் செயலராக வே.சிவஞானசோதி நியமிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் கடந்த வாரம் அவர் திடீரென இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். புதிதாக அமைச்சுச் செயலாளர் நியமனம் வழங்கப்படாமல் ஜனாதிபதி செயலகத்துக்கு அவர் மாற்றப்பட்டுள்ளார்.

பொருத்து வீட்டுத் திட்டத்துக்குச் செயலர் வே.சிவஞானசோதி இணக்கம் தெரிவிக்க மறுத்தமையே இந்த இடமாற்றத்துக்குக் காரணம் என்று குற்றம் சுமத்தப்படுகின்றது. இது தொடர்பில் அமைச்சர் சுவாமிநாதனிடம் கேட்டபோது, அவரது இடமாற்றம் எனது நடவடிக்கை அல்ல. அந்த நடவடிக்கையை ஜனாதிபதி செயலக்மே முன்னெடுத்தது. பொருத்து வீட்டுக்கும் அவருக்கும் எவ்வித தொடர்பும் இல்லை–என்றார்.

வெளிநாட்டுக்குச் சென்றிருந்த மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி நேற்று முன்தினமே நாடு திரும்பியிருந்த நிலையில், நேற்றைய தினம் மீள்குடியேற்ற அமைச்சுக்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

(த-5-8-101)

## சித்திரவதைக்குள்ளான கனடா வாழ் தமிழருக்கு இழப்பீடு வழங்கப் பரிந்துரை

ஐ.நா. குழுவிடம் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் றோய் என்ற கனடா வாழ் இலங்கைத் தமிழர் இலங்கையில் தாம் சித்திரவதை செய்யப்பட்டது தொடர்பாக முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்திய சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நா குழு, நபர் தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டதற்குப் பொறுப்பானவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும், நியாயமான இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும் கொழும்பு அரசை கேட்டுள்ளது.

இலங்கையில் இருந்து கனடாவில் புகலிடம் தேடிய றோய் (வயது 46) 2007ஆம் ஆண்டு திருமணம் செய்து கொள்வதற்காக இலங்கை வந்திருந்தார்.

அப்போது இவரது வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார் 600 கைபேசிகளைக் கைப்பற்றியிருந்தனர். நண்பர் ஒருவரின் வர்த்தகத்துக்கு உதவும் நோக்கில் அவை சிங்கப்பூரில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டிருந்தன.

இதனை வைத்திருந்ததற்காக, பொலிஸார் இலஞ்சம் கோரியபோது அதற்கு றோய் உடன்பட மறுத்தார். இதனால் பயங்கரவாத தடுப்புப் பிரிவிடம் கையளிக்கப்பட்ட இவர், கனடியப் புலி என்று முத்திரை குத்தப்பட்டு தடுத்து வைத்து சித்திரவதை செய்யப்பட்டார். தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக செயற்பட்டார் என்று கூறி பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்ட இவர், ஆரம்பத்தில் புலிகளுக்காக உயர்வலு தொலைத் தொடர்பு சாதனங்களையும் ரேடர்களையும் இறக்குமதி செய்தார் என்று குற்றம்சாட்டப்பட்டார்.

பின்னர், முக்கிய பிரமுகர் ஒருவரைப் படுகொலை செய்ய முயன்றார் என்று குற்றம் சாட்டப்பட்டார். ஆனால் இவையனைத்தும் பொய்யாகும். தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, இவர் நிலத்தில் படுக்கவைத்து துப்பாக்கியால் தாக்கப்பட்டார். குழாய்களால் தாக்கப்பட்டார். உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. குற்றத்தை ஒப்புக்கொள்ளாவிடின், மனைவியைக் கைதுசெய்து, வன்புணர்வுக்கு உட்படுத்துவோம் என்று மிரட்டப்பட்டார்.

இறுதியில் இலத்திரனியல் கருவியை சட்ட விரோதமாக இறக்குமதி செய்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு, நீதிமன்றத்தில் தண்டத்தைச் செலுத்தி விட்டு விடுதலையானார்.

இதன்பின்னர் கனடா திரும்பிய றோய், கனடிய நாடாளுமன்றத்தினுள் பன்னாட்டு மனித உரிமைகளுக்கான உபகுழுவின் முன்பாக சாட்சியமளித்திருந்தார்.

(வ-5)

# சம்பந்தனின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

## அரசிடம் தெரிவித்தது கூட்டமைப்பு

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித் தலைவருக்கு இன்னும் பாதுகாப்பான வதிவிடம் வழங்கப்படவில்லை. பல்வேறு சிரமத்துக்கு மத்தியிலேயே அவர் வாழ்ந்து வருகின்றார். வழங்கப்பட்டுள்ள வாகனமும் எந்த இடத்தில் நிற்குமென்று தெரியவில்லை.

இன்று கூலிக்குக் கொலை செய்யும் நிலை மீண்டும் உருவாகி வருகிறது. நேற்று முன்தினம் கூடக் கண்டியில் காரில் சென்றவர்கள் சூடு நடத்தியுள்ளனர். எனவே, எதிர்க்கட்சித் தலைவருக்கு பாதுகாப்பான இல்லம் அவசியமாகின்றது. அவரது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் –என்றார்.

(த-5)

## சாரதிகளுக்கு ரூ.25, 000 தண்டம் விதிக்கலாம்

பேருந்து உரி மையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

போதையில் வாகனம் செலுத்துதல், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்துதல், பாதுகாப்பற்ற வகையில் ரயில் கடவைகளை கடத்தல், காப்புறுதி ஆவணங்கள் இல்லாமை, அதிக வேகத்துடன் வாகனம் செலுத்துதல் மற்றும் இடதுபக்கத்தால் வாகனத்தை முந்துதல் போன்ற ஆறு வகையான குற்றச்சாட்டுக் கள் தொடர்பிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று நிதி அமைச்சருடனான நேற்றைய சந்திப்பில் இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

(வ-5)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தில் சகல இனங்களுக்கும் பாதுகாப்பாம்

ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் இடம்பெற்ற குழுநிலை விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் சாகல மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்காக எமது அரசினால் சிறப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. தற்போது நாம் முகம்கொடுத்துவரும் பல சவால்களை வெற்றிகொள்வதற்காக பொலிஸ் நிலையங்கள் ஊடாகவும் இதற்கான சில செயற்பாடுகளை நாம் செயற்படுத்தவுள்ளோம். பொலிஸ் சேவையை நவீன மயப்படுத்தவும் நாம் தீர்மானித்துள்ளோம்.

அதேபோல பன்னாட்டுத் தரத்துக்கு அமைவா பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நாம் ந னப்படுத்தவுள்ளோம். அந்தவகையில், பய கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு வெகுவிரை லேயே நாடாளுமன்றில் முன்வைக்கப்ப இது சகல இன, மத மக்களும் ஏற்றுக்கொள்ள வகையில் காணப்படும் என்பதும் சிறப்பு அ மாகும்.

அத்தோடு, பொலிஸ் சேவையில் தமிழர்கை அதிகமாக இணைத்துக்கொள்ளவும் ந நடவடிக்கை எடுப்போம் – என்றார்.

(வ-

கடமையிலிருந்த பொலிஸார் மீது

## மிளகாய் தூள் தூவிவிட்டு துப்பாக்கி பறிக்க முயற்சி

தடையொன்றில் பருத்தித்துறைப் பொலிஸ் நி யத்தைச் சேர்ந்த பொலிஸ் குழுவினர் பாது புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். அவர்க நெருங்கி வந்தவர்கள் மிளகாய்த் தூ தூவிவிட்டுத் துப்பாக்கியைப் பறிக்க மு டுள்ளனர்.

இதன்போது துப்பாக்கியுடன் நின்ற மற் பொலிஸ் உத்தியோகத்தர் தனது துப்பாக்கி சுடுவதற்குத் தயார்ப்படுத்தியபோது, அவர் தப்பிச் சென்றதாக அறியமுடிந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் தமக்கு அறி கப்படவில்லை என்று வடமராட்சிக்குப் பொ பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தெரி தார்.

(த-வ-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PEOPLE'S BANK
THE PULSE OF THE PEOPLE

## வாடிக்கையாளர் சேவை உதவியாளர் பதவி விண்ணப்பங்களை கோரியது மக்கள் வங்கி

வாடிக்கையாளர் சேவை உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்களை மக்கள் வங்கி கோரியுள்ளது. தகுதி வாய்ந்த விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்பதாக சமர்ப்பிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம்,ஆங்கிலம், தாய்மொழி ஆகிய பாடங்களில் திறமைச்சித்தியை கொண்டுள்ளதுடன் ஒரே அமர்வில் ஐந்து திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்துள்ள மற்றும் க.பொ.த. உயர்தர பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்துள்ள 18 வயதுக்குக் குறையாத 28 வயதுக்கு மேற்படாத விண்ணப்பதாரிகள் தங்களுடைய விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவைதவிர கணினி தொடர்பான தேர்ச்சி மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.விண்ணப்பப்படிவ மாதிரி உட்பட மேலதிக தகவல்களை மக்கள் வங்கி இணையத்தளத்தில் அறிந்து கொள்ளலாம் என சுட்டிக்கப்பட்டுள்ளது.

வணிகம்

# ஒலீமா இண்டஸ்றீஸ் சிறந்த தொழில் முயற்சியாளராகத் தெரிவு

## தோற்பொருள் உற்பத்தியில் சிறப்பு விருது பெற்றது

பாதுகாப்பான பாதணிகளின் உற்பத்தித் துறையில் ஈடுபட்டு வருகின்ற ஒலீமா இன்டஸ்றீஸ் தனியார் நிறுவனம் 2016 ப்ளேம் தொழில் முயற்சியாளர் விருது வழங்கல் விழாவில் பாதணிகள் மற்றும் தோற்பொருட்கள் உற்பத்திப் பிரிவில் அதிசிறப்பு விருதை வென்றுள்ளது.

மேல் மாகாண சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வானது கொழும்பில் அண்மையில் இடம்பெற்றிருந்தது. நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன. ஒலீமாஇன்டஸ்றீஸ்நிறுவனத்தின் தலைவர் எஸ். கே அஜித் பிரியதர்சனவால் பாதணிகள் மற்றும் தோற்பொருள்கள் உற்பத்திப் பிரிவின் கீழான அதிசிறப்பு விருது பெற்றுக் கொள்ளப்பட்டது.

தொம்பே, தெக்கட்டன, பெலகலவில் பிரதேசங்களில் அமைந்துள்ள ஒலீமா தொழிற்சாலையானது தற்போது அதிநவீன தொழில்நுட்பத்தின் உறுதுணையோடு இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையிலே உள்நாட்டு இறப்பரை மூலப்பொருளாகக் கொண்டு இறப்பர் கம்பூட்ஸ், பாதுகாப்பான பாதணிகள், அலங்கார பாதணிகள், கன்வஸ் பாதணிகள், வேலைத்தள பாதுகாப்பு அணிகலன்கள் உள்ளிட்ட உயர் தரத்திலான அழகிய வடிவங்களிலான ஒலீமா உற்பத்திகளை சந்தைக்கு ஒலீமா வழங்கி வருகின்றது.




உள்நாட்டு இறப்பரை மூலப்பொருளாகக் கொண்ட உற்பத்தித் துறையில் ஒலீமா இன்டஸ்றீஸ் முன்னணியில் திகழ்கிறது.

உலகம்




## விவோ 5 சிமாட் கைபேசி அறிமுகம்

செல்பி எடுப்பவர்களின் விருப்பத் தெரிவைக் கருத்திற்கொண்டு 20 மெகாபிக்ஸல் அளவுடைய முன்பக்கக் கமராவைக் கொண்ட மைந்த விவோ 5 என்ற புதிய சிமாட்கைபேசி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவை தங்கம் மற்றும் சாம்பல் நிற வர்ணங்களில் கிடைக்கிறது.பிரதானமாக இவ்வகை கைபேசிகளில் எல்.இ.டி பிளஷ் கொண்ட முன்பக்க கமரா 20 மெகாபிக்சல் அளவுடையதாக காணப்படுகின்ற அதேவேளை பின்புறக் கமராவானது 13 மெகாபிக்சல் அளவு வசதியுடன் நேர்த்தியான வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகக் காணப்படுகின்றது.

மேலும் இரண்டு சிம் காட் பயன்படுத்தக் கூடியதான வசதியுடன் கைக்கு அடக்கமான வகையிலே மெல்லியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.அத்துடன் அன்ரோயிட் 6.0.1மார்ஷ் மெல்லோ இயங்குதளத்தில் இயங்கும் வகையில் விவோ 5 வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது முழுமையான எச்.டி தரத்துடன் 5.5 அளவுடையதிரையுடன் வெளிவந்துள்ள விவோ 5 சிமாட் கைபேசியானது சேமிப்பானின் உதவியுடன் 32 ஜிபி வரை விரிவாக்கமடையக்கூடிய சேமிப்பு வசதியையும், 4 ஜிபி ரேம் வசதியையும் கொண்டமைந்துள்ளது.இவைதவிர பின்புறமாக கைரேகை சென்சர் வசதியையும் 3,000 மி அம்பியர் திறன் உடைய மின்கலத்தையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கந்துரட்ட, கோட்ரேச் நிறுவனங்கள் ஒன்றிணைவு

## வாடிக்கையாளர் நலன்களுக்கே முன்னுரிமை

கோட்ரேச் சிறீலங்கா நிறுவனம் தங்களுடைய மித்து பேபி வர்த்தக நாமத்தைச் சேர்ந்த தயாரிப்புக்களை உள்நாட்டிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்கும் முகமாக கந்துரட்ட நிறுவனத்துடன் இணைந்து கொண்டுள்ளது.

கோட்ரேச் கொன்சியுமர் புரொடக்ஸ் இன் பிரபல்யமான வர்த்தக நாமமான மித்து பேபி இந்தோனேசியாவைச் சேர்ந்த மிதமான மற்றும் நம்பகமான குழந்தைப் பராமரிப்புத் தயாரிப்பாக விளங்குகிறது. உலகெங்கும் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இவ்வகை வர்த்தக நாமத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக வுள்ளது.

மேலும் குழந்தைகளின் மென்மையான சருமத்தைப் பாதுகாக்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ள மிருதுவான பன்னாட்டுத் தரம் வாய்ந்த குழந்தைப் பராமரிப்புத் தீர்வு வழங்கிகளாக இவை வாடிக்கையாளர்களின் தெரிவு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




**மித்து பேபி வர்த்தக நாமம் நம்பகமான குழந்தைப் பராமரிப்புத் தயாரிப்பாக விளங்குகிறது**

இதன் பிரகாரம் இலங்கையிலே மித்து பேபியின் மில்க் பாத், தேன் மற்றும் பால் சேர்ந்த பேபி மற்றும் கெயர் பாத், இயற்கையான ஷம்பு,சோப் கெயர் லோன்,பேபி லோன், பேபி கிறீம், பேபி ஒயில் மற்றும் பேபி கொலோன் போன்ற தரம் வாய்ந்த உற்பத்திகளை வழங்குவதுடன் தயாரிப்புக்கள் அத்தனையும் குளியல், குளியலுக்கு முன், குளியலுக்குப் பின் என்பதான பிரயோக ஒழுங்கு வரிசையைக் கொண்டமைந்துள்ளன.

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குச் சந்தை தகவல்கள்

| 21/11/2016 | | | |
|---|---|---|---|
| www.cse.lk | | | |
| ASPI | -50.85 | 6,275.26 | 6,326.11 |
| S&P SL20 | -28.68 | 3,486.30 | 3,514.98 |
| வியாபாரப்புரள்வு | | 395,425,568 | 272,733,280 |
| உள்நாட்டு- கொள்வனவு | | 276,482,272 | 210,072,928 |
| விற்பனை | | 228,502,944 | 178,124,752 |
| வெளிநாட்டு- கொள்வனவு | | 118,943,272 | 62,660,368 |
| விற்பனை | | 166,922,624 | 94,608,544 |



| அதிகூடிய பங்குப்பரிமாற்றம் | | | | |
|---|---|---|---|---|
| கொமர்சியல் வங்கி | COMB.N | 142 | 1,422,434 | 200,547,016 |
| ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் | JKH.N | 144 | 508,716 | 73,660,697 |
| அலுமக்ஸ் | ALUM.N | 19.8 | 2,031,952 | 40,633,327 |
| [illegible] | TJL.N | 43.5 | 406,330 | 17,818,549 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X | 190 | 66,[illegible]4 | 12,588,260 |
| அக்ஸஸ் இஞ்சினியரிங் | AEL.N | 24.1 | 421,187 | 10,217,139 |
| ஷெவ்ரோன் லுப்ரிகன்ட் | LLUB.N | 156.5 | 62,407 | 9,850,147 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N | 227.0 | 42,575 | 9,664,165 |
| சிலோன் கிரேன் எலெவேட்டர்ஸ் | GRAN.N | 85.5 | 109,221 | 9,290,220 |
| பீப்பிள்ஸ் இன்சூரன்ஸ் | PINS.N | 18.5 | 261,626 | 4,839,616 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்
சிலோன் கோல்டு ஸ்டோர்ஸ் (CCS) - பங்கு ஒன்றிற்கு Rs. 8.00
லங்கா ஹொஸ்ப்பிட்டல்ஸ் (LHCL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.00
கொமர்சியல் வங்கி (COMB) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.50

| சந்தைக் குறிகாட்டிகள் | |
|---|---|
| கம்பனிகள் | 294 |
| பரிமாற்றத்தில் | 207 |
| விலை உழைப்பு | 13 |
| புத்தகப்பெறுமதி | 1.4 |
| பங்குலாப விளைவு | 3.1 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆட்சியாளர்களை...

அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் உண்மைகள் வெளிவராத கலா சாரமே தொடர்ந்தும் இருந்து கொண் டிருக்கின்றது. இந்த நாட்டின் தீர்க்கப்படாத ஒன்றாக இருந்து கொண்டிருக்கும் இனப் பிரச்சினைதான் இந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள் அனைத்துமே நடைபெறுவதற்குப் பிரதான காரணமாக உள்ளது.

போர்க் குற்றம், அரசியல் படுகொலைகள், சட்டவிரோதக் கொலைகள், மனிதக் கடத்தல்கள், காணாமலாக்குவது அனைத்துமே நேரடியாகவோ மறைமுகமாகவோ நடந்தேறியிருப்பதற்கு இனப் பிரச்சினை தீர்க்கப்படாமலிருப்பதுதான் அடிப்படைக் காரணம். இதனை ஆட்சியாளர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினையோடு சம்பந்தமில்லாமல் நடக்கும் குற்றச் செயல்கள் ஒரு ஐந்து வீதமாகத்தான் இருக்கும். நாட்டின் ஆட்சியாளர்கள் கண்ணிருந்தும் குருடர்களாக, காதிருந்தும் செவிடர்களாக, அறிவிருந்தும் முட்டாள்களாக இருப்பதுதான் இனப்பிரச்சினைத் தீர்வு இழுத்தடிப்பதற்கான காரணங்களாகும்.

போரின்போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பொறுப்புக்கூறலைக்கோரியிருக்கும் அதேவேளை, இனப்பிரச்சினைத் தீர்வையும் வலியுறுத்த வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது.

பொறுப்புக் கூறலை மாத்திரம் நாம் வலியுறுத்திக் கொண்டு ஒரு பக்கமாகச் செல்வோமானால் இனப் பிரச்சினைக் கான அரசியல் தீர்வென்பது எட்டாக்கனியாகி விடும். அப்படி நடந்தால் புதிய பிரச்சினைகள் தோற்றம்பெற ஆரம்பித்துவிடும்.

ஆகவே பொறுப்புக்கூறல் கோரிக்கை மற்றும் இனப்பிரச் சினைத் தீர்வுக்கான வலியுறுத்தல் இரண்டையும் சமாந்தரமாகக் கொண்டு செல்ல வேண்டிய கவனமான பொறுப்பு நமக்குண்டு.

இந்த விடயத்திலே நான் மிகக் கவனமாகக் காய் நகர்த்துகின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் வழியைப் போன்றல்ல, எனது வழிமுறை. அவரது வழிமுறை என்னுடையதைப் போன்றதுமல்ல. சர்வதேச சமூகத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு சாணக்கியமாக அரசுடன் பேச்சு நடத்தி உரிமைகளைப் பெறுவதுதான் சம்பந்தனின் வழி என்றால், எனது வழி சகவாழ்வு வழி. நான் சிங்கள-தமிழ்-முஸ்லிம் மக்களுக்கு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை வெளிக் கொண்டுவந்து அதற்குத் தீர்வு கண்டு சகவாழ்வுக்கும் பரஸ்பர ஒத்துழைப் புடனான சமாதானத்தையும்நீடித்த அமைதியையும் ஏற்படுத் துவதுதான் எனது வழிமுறை.

பிரபாகரனின்வழிமுறை ஆயுதம் ஏந்திப் போராடும் வழிமுறையாக இருந்தது. அப்பொழுதுஅனைத்து தமிழ் மக்களும் மறைமுகமாகவோ இல்லாவிட்டால் நேரடியாகவோ அவருக்குப் பின்னால் இருந்து ஆதரவு வழங்கிக் கொண்டுதானிருந்தார்கள். அதை நாமெல்லோரும் நன்கு அறிவோம்.

பிரபாகரன் கையாண்டஆயுதமேந்திய வழி மூலம்தீர்வுகிடைக்கும் என்று நம்பினார்கள். ஆனால், தீர்வு கிடைக்கவில்லை. அந்த வழி தோல்வியடைந்த ஒன்றாக மாறிவிட்டது. அது தோல்வியடைந்து விட்டது என்று கூறுவது கூடச் சங்கடமாக இருக்கின்றது. ஆயினும், அந்தத் தோல்வியை நாம் பக்குவமாக ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆயுதப் போராட்ட வழிமுறை நம் மத்தியிலே மன வடுக்களை ஏற்படுத்தியிருப்பது உண்மை. ஆகையினால் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு நாம் நம்மை சுயவிமர்சனம் செய்வதற்குத் ஒரு போதும் தயங்கக் கூடாது. இனப்பிரச்சினைத் தீர்விலே தென்னிலங்கைச் சிங்கள மக்களையும் இணைத்து பரஸ்பரம் அவர்களுடன் நேசமாக ஒரு கூட்டை ஏற்படுத்திக் கொண்டுதான் இதிலே வெற்றியடையலாம் என்ற அசையாத நம்பிக்கை எனக்குண்டு.

மட்டக்களப்பிலே பைத்தியக்காரப் பிக்கு நடந்துகொண்ட அடாவடித் தனத்துக்குப் பதிலடியாக வடக்கு-கிழக்கிலும் நாட்டின் தலைநகர் கொழும்பிலும் ஸ்தம்பிக்கும் கடையடைப்பையும் ஆர்ப்பாட்டத்தையும் செய்வது பெரிய கஷ்டமான காரியம் ஒன்றல்ல. ஆனால், அவ்வாறு உணர்ச்சி வசப்படுவதால் பின்விளைவுகள் பல உருவாகிவிடும். அதனைக் கவனமாகக் கையாள வேண்டும். உரிய நோயைக் கண்டு பிடித்து அதற்கு மருந்து செய்ய வேண்டும்.

கடந்த 60 வருடங்களாக உள்ள இனப் பிரச்சினை மிகச் சுலபமாக ஓரிரவில் தீர்க்கப்பட்டுவிடும் என்று அபரிமிதமான நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ள வேண்டாம். கிராமங்கள் தொடங்கி ஐ.நா. சபைவரை அள்ளி வீசப்படும் வாக்குறுதிகள், பிரகடனங்கள், உத்தரவாதங்கள் என்பனவற்றை அளவுக்கதிமாக நம்பி ஏமாந்து போய் விடவேண்டாம் என்று நான் சிறுபான்மைச் சமூகங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். ஏனென்றால் நாட்டு நடப்புக்கள் நல்லதாக இல்லை-என்றார். (த-4)

கடை வாடகைக்கு

NO-100, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தில் ஆரியகுளச் சந்திக்கும் ரயில் கடவைக்கும் இடையில் சந்நிதி முருகன் கடைக்கும் அருகில் அமைந்துள்ள இரு கடைகள் வாடகைக்குண்டு.

077 203 0309

VACANCIES

முன்னணி கல்வி நிறுவனத்தின் கிளைகளுக்கு யாழ்ப்பாணம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி பிரதேசங்களில் பின்வரும் பதவி நிலைகளுக்கு இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

- சிறார்களுக்கான ஆங்கில பாட ஆசிரியர்
  G.C.E O/L ஆங்கில திறமைச்சித்தி உடன் நேரடியாக விண்ணப்பிக்கலாம் (ஏனையோர் [illegible] பயிற்சியின் பின் இணைத்துக் கொள்ளப்படுவர்)
- சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
  அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (பயிலவிருப்பவோரும் விண்ணப்பிக்கலாம்)

மேற்குறித்த பதவிகளில் பணியாற்ற விரும்புபவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

DMI COMPUTER EDUCATION - No.113, Kannathiddy Road, Jaffna

உடனடியாகத் தேவை

எமது தனியார் காரியாலயத்துக்கு கணினி அறிவுடைய பெண் Clerks தேவை.
21 வயதிலிருந்து 40 வயது வரை. யாழ் நகரிலிருந்து 5K.M சுற்றாடலில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. நேர்முகத்தேர்வு வியாழக்கிழமை (24.11.2016) மு.ப 10 மணிக்கு 201/7, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் நடைபெறும்.



Diploma in Nursing
(Approved by the Private Health Services Regulatory Council, Ministry of Health, Srilanka)

புதிய சுகாதார கற்கைநெறிகள் ஆரம்பம் 2017 / 2019
தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குமுறை சபையினால் அங்கீகரிக்கப்பட்டது.

- தகைமை : க.பொ.த (உயர்தரம்) – எந்த துறையாயினும் 3 பாடங்களிலும் சித்தி. அத்துடன் எம்மால் ஒதுக்கப்படும் சிகிச்சை நிலையங்களில் பணிபுரியும் ஆர்வம்.
- பயிற்சிக்காலம் : மூன்று வருடம்.
- பயிற்சிக்கட்டணம் வருடத்திற்கு 50,000/-
- புலமைப்பரிசில்கள் : தகுதி அடிப்படையில் பெற்றுக்கொள்ளலாம்.

மாணவர்கட்குரிய உணவு மற்றும் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்க முடியும். விண்ணப்ப படிவங்களை கீழ்வரும் முகவரி மற்றும் எமது இணையதளத்திலும் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 10.12.2016 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும்.

INSTITUTE OF MEDICAL SCIENCES
Green Memorial Hospital, Manipay.
Email: theimsjaffna@gmail.com Web site: www.theims.net
Tel: 0213203970/ 0212256335
Office time – 8.00am to 4.00pm

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
FACULTY OF ENGINEERING
WALK-IN-INTERVIEW

Walk in interview for appointments to the following posts will be held on 28.11.2016 at 1.00 p.m at the Board Room of this University.

Temporary Instructor in Civil Engineering/ Electrical and Electronic Engineering/ Mechanical Engineering/ Engineering Mathematics

Note:
1. The candidates for Temporary Instructor are expected to conduct the engineering laboratories covering all specializations of Civil and Environmental Engineering, Electrical & Electronic Engineering, Mechanical and Process Engineering.

2. Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Instructor.

Interested candidates those who wish to present for the Walk in Interview can appear with relevant certificates, NIC and self prepared applications.

Registrar
University of Jaffna
21.11.2016
(C 26582) (16.17.19)

ST.JOHN'S COLLEGE, JAFFNA
VACANCIES

Graduates are hereby invited from the qualified persons for the following vacancies.

01. Chemistry A/L - English or Tamil Medium
Qualification : B.Sc ( Chemistry as one of the major com ponents)
02. Science for 6 - O/L - English or Tamil Medium
Qualifications : B.Sc
03. Mathematics 6 - 11 English Medium
Qualifications : B.Sc (Physical Science)

ACCOUNTANT

Duties & Responsibilities
– In Charge of accounts department supervising 3 staff
– Audits, accounting package, monthly accounts, budgets, Cash flow and management reporting.

Qualifications & Experience
* Fully qualified AAT SriLanka, HND or Part qualification of Chartered, ACCA, CIMA or equivalent.
* Working knowledge of any major accounting package and MS– Excel.
* Five years working experience in audit firm or commercial enterprise including supervising staff.

Applications should be addressed to the Principal, St. John's College, Jaffna and emailed to stjohns@sltnet.lk before 25th November 2016
Office Tel - 021 222 2432
(c/26584)(17.19.20)

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினம் அப்பையா



உரும்பிராய் மேற்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் அப்பையா 20.11.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(23.11.2016) புதன் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பன் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பழையசதா பேக்கரி லேன்,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
(J 6277) (14.18.21)
தகவல்:
குடும்பத்தினர்.

077 415 3646

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சுப்பர் கருணானந்தன்**

உதிப்பு
10.05.1937

உதிர்வு
22.11.2014

திதி: கார்த்திகை சதுர்த்தசி 23.11.2016

கடல் போல உறவுகள் இருந்த போதிலும்
கரை காணாத இடத்திற்கு சென்றுவிட்டீர்
கதிகலங்கிக் கண்ணீருடன் வாழ்ந்து
ஆண்டுகள் இரண்டு சென்றதுவே!
காலமெல்லாம் எம்முடன் இருந்து- நாங்கள்
சாத்திரமாக வாழ வழி செய்யுங்கள் அப்பா.

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(C 161)
(21,17,16)
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**அருந்தவம் பிரீடன்**

மண்ணில்
20 . 09 . 1987

விண்ணில்
15 . 11 . 2014

கண்ணிமைத்து விழிக்கவில்லை
இரண்டு ஆண்டுகள் சென்று விட்டதையா
ஒரு நொடிப் பொழுதும் அழியவில்லை
உன் அன்பான உள்ளம்
எம்மை விட்டு -----------

ஆவரங்கால் கிழக்கு,
மணற்பகுதி, புத்தூர்.
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார்.

## நெஞ்சை விட்டு அகலாத முதலாம் ஆண்டு நினைவுகள்

நிஜமாய்
04 . 02 . 1992



நினைவாய்
04 . 12 . 2015

திதி: அபரபக்க நவமி
(22.11.2016)

அமரர் **பிரியங்கா(லக்கி) நந்தகோபால்**

உயிரோடு உறவாடி பிரியாத உறவாகி
நிலையாத பொழுதில் நிலை தடுமாற வைத்து
அன்பு மகளே பாதியிலே ஏன் உதிர்ந்தாய்???
உன் அமுத மொழி கேளாமல்
ஆண்டொன்று கடந்ததம்மா - எம்
நிம்மதி உன்னோடு போனதம்மா
தேவதையாய் நீ வாழ்ந்தாய்
வேதனை தந்து எங்கே சென்றாய்???
'விழிகள் உன்னைத் தேடுதம்மா...
விண்ணைத்தாண்டி பார்க்குதம்மா...'
உன்னைப் பிரிந்து எம் உயிர் துடித்தவேளை
கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்போனாலும்
எம்முன்னே உன்முகம் என் நாளும் உயிர்வாழும்

தாழ்வுபாடு வீதி,
மன்னார்.
குடும்பத்தினர்
023 225 0238

## கண்ணீர் அஞ்சலி



சங்கத்தானை இந்து இளைஞர் மன்ற
அறநெறிப் பாடசாலையின் நிறுவரான
பத்மாதேவியின் கணவர்
**கதிர்காமு கந்தையா தியாகராஜா**
அவர்களின் மரணச் செய்தி கேட்டுப்
பேரதிர்ச்சியடைந்துள்ளோம். அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்
களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாடசாலை நிர்வாகம், சங்கத்தானை.

## 8 ஆம் ஆண்டு நினைவுடன் 34 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



அமரர்
**நடராசா மருஜன்**
(முன்னாள் மாணவன் - யா/ உடுப்பிட்டி அ.மி.கல்லூரி)

தோற்றம்
22.11.1982

மறைவு
21.08.2008

கனவு போல் நடந்தது உன்சாவு
கார்த்திகையில் பூத்த பூமலரே
உன் பிரிவை மறக்க முடியுமாடா
மகனே !

ஆதியாமலை,
உடுப்பிட்டி.
(N 180)
(14,17,18)
உன் நினைவால் வாடும்
குடும்பத்தினர்.

## நெஞ்சை விட்டு அழியாத ஓராண்டு நினைவலைகள்



அமரர்
**நந்தகோபால் பிரியங்கா (லக்கி)**

தாயின் மடியில்
04.02.1992


இறைவன் அழைப்பில்
04.12.2015

எமைவிட்டு பிரிந்து ஓராண்டு ஆனதம்மா
நம்பமுடியவில்லை...
மணக்கோலம் காண இருந்த
வேளைதனில் இரக்கமற்ற இயமன்
உன்னை அவசரமாய் அழைத்துவிட்டான்...
கலங்குகின்றேன் நானிங்கு நொருங்குண்ட இதயத்தால்
மாநிலம் தான் போற்ற மாசின்றி வாழ்ந்த என்மகளே
முத்துப்பல் தெரிய நீ சிந்தும் சிரிப்பொலியை சிரிப்பாயோ ஒரு தடவை?
கண்ணுக்குள் உன்வதனம் கடைசிவரை மறையாது..
சோருதம்மா உன்தம்பியின் சிந்தனை வழிகாட்ட அருகில் நீ இன்றி...
ஓராண்டு கடந்தாலும் மகளே அழியாத உன் நினைவால்
வேண்டுகின்றேன் இறைவனிடம் உன் ஆத்மா சாந்தி பெற..

உன் நினைவுடன் வாழும்
பேபி அன்ரி- கௌசி

077 7431 820

## 31 ஆம் நாள் நினைவு அழைப்பு



அமரர் **பொன்னுத்துரை கதிர்காமநாதன்**
(அப்புச்சி)

கடந்த 23.10.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் பொன்னுத்துரை கதிர்காமநாதன் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் கீரிமலையில் உள்ள புனித தீர்த்தக்கரையில் 20.11.2016 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (22.11.2016) செவ்வாய்க் கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும். அத்தருணம் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஊரெழு மேற்கு,
சுன்னாகம்.
குடும்பத்தினர்.
077 0366 300

## அமெ. போன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போல இங்கு நடக்காது. போர் செய்தனர் என்பதற்காக அரசியலுக்கு வர முடியாது என்பதற்கான தீர்ப்பைச் சரத் பொன்சேகா மூலம் மக்கள் வழங்கிவிட்டார்கள், என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவுக்கு கூறினார் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற 2017ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்தாவது:

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகியிருக்காவிட்டால் தீவிரவாதம் தோற்கடிக்கப் பட்டிருக்கமாட்டாது. அது உண்மை. அதற்காகக் கமல் குணரட்னவுடன் புத்தகத்தை வெளியிட்டு ஒவ்வொரு இடங்களுக்குச் சென்று தேசிய பாதுகாப்பு குறித்து பேசமுடியுமா? போரில் பங்களிப்புச் செய்தார் அதை ஏற்கிறோம். அதற்காக வடக்கு-கிழக்கு பாதுகாப்புப் பற்றிப் பல்வேறு இடங்களுக்குச் சென்று பேச அவருக்கு இருக்கும் உரிமை என்ன?

போரில் திறமையானவர்களுக்கு அதற்குரிய இடத்தை மக்கள் வழங்கியுள்ளனர். போரில் திறமையானவர்கள் என்பதற்காக அரசியலுக்கு வரமுடியாது. மக்கள் இதனைத் தீர்மானித்துத்தான் சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடித்தனர். நாடாளுமன்றத் தேர்தலிலும் தோற்றார்.

கமால் குணரட்ன, கோத்தபாய ராஜபக்ச போரில் திறமையானவர்கள் என்பது உண்மை. அதற்குரிய கௌரவத்தை மக்கள் வழங்குவார்கள். ஆனால், டொனால்ட் டிரம்ப் அரசியல்வாதியாக அல்லாமல் ஜனாதிபதியானதைப் போல, அந்தச் சம்பவம் இங்கு நடக்காது.

டொனால்ட் டிரம்பின் சால்வையைப் போட்டுக்கொண்டு 'டிரம்ப் அப்பச்சி' (டிரம்ப் அப்பா) என்று கூறுவதில் பலனில்லை என்றார். (த-5)

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு, கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கடிதம் அனுப்பி வைத்துள்ளது. இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சர் சுவாமி நாதனிடம் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் 90 ஆயிரம் மக்கள் பொருத்து வீட்டை ஏற்பதாக கடிதம் தந்துள்ளனர். அதனை விடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு அல்லது ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொருத்து வீட்டுத் திட்டத்தை ஏற்பதாகத் தெரிவித்துள்ளனர். பொருத்து வீடுகள் கேட்டுள்ள மக்களுக்கு நான் அதனை வழங்க வேண்டும்.

நான் எந்தக் கட்சிக்கும் எதிரானவன் அல்ல. சமூகத்துக்குத் தொண்டாற்ற வேண்டும் என்பதே எனது விருப்பம். இதனைத் தடுக்க வேண்டாம்.

முன்பு 21 லட்சம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படுவதாக இருந்தது. தற்பொழுது அதிலிருந்து ஐந்து லட்சம் ரூபா குறைக்கப்பட்டுள்ளது. முன்னர் 65 ஆயிரம் வீடுகள் கட்ட இருப்பதாகத் தெரிவித்தேன். 22 ஆயிரம் வீடுகளே தற்போது அமைக்கப்படவுள்ளன.

எஞ்சிய வீடுகளை வேண்டுமானால் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுமந்திரனும், மாவை.சேனாதிராசாவும் கட்டிக் கொடுக்கட்டும். அதில் எனக்கு எவ்வித பிரச்சினையும் இல்லை. மறுப்பும் இல்லை.

வீட்டுத் திட்டத்தில் நம்பிக்கையில்லை என்று மாவை.சேனாதிராசா நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். நான் அவருக்கு எதுவித நம்பிக்கைத் துரோகங்களும் செய்யவில்லை. தமிழ் மக்களுக்கும் துரோகங்கள் செய்யவில்லை என்பதையும் இந்தச் சந்தர்ப்பதில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் - என்றார். (த-5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். முழங்காவில் பகுதியில் பாடசாலைக்கு அண்மையில் உள்ள குறித்த வீட்டுக்கு நேற்று அதிகாலையில் சுமார் 12.30 மணியளவில் சென்ற கொள்ளையர்கள் வீட்டுக் கதவை உடைத்து உட்புக முனைந்துள்ளனர். இதனையடுத்து வீட்டின் உரிமையாளர்கள் விழித்தெழுந்து கொள்ளையைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இருப்பினும், வீட்டில் கணவனும் மனைவியும் மட்டுமே இருந்தமையால் கொள்ளையர்கள் வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்தனர். அவர்கள் கத்தி முனையில் வீட்டாரை அச்சுறுத்தி அங்கிருந்த தங்க நகைகள் அனைத்தையும் கொள்ளையிட்டனர். இவ்வாறு36 பவுண் தங்க நகைகளைக்கொள்ளையிட்ட அவர்கள், வீட்டில் இருந்து தப்பிச் செல்கையில் வீட்டு உரிமையாளரின் மோட்டார் சைக்கிளையும் பறித்தெடுத்துச் சென்றுள்ளனர். இது குறித்து வீட்டின் உரிமையாளரால் முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டனர். தேடுதல் மேற்கொண்ட பொலிஸார் வீட்டில் இருந்து பறித்துச் செல்லப்பட்ட மோட்டார் சைக்கிளை அக்கராயன் காட்டுப் பகுதியில் இருந்து மீட்டெடுத்தனர். குறித்த கொள்ளை தொடர்பில் முழங்காவில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (த-4-101)

## மரண அறிவித்தல்



### திருமதி ஞானாம்பிகை நல்லநாதன்

**(யாழ் பல்கலைக்கழக முன்னாள் எழுதுவினைஞர்)**

கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கில் வசித்தவரும் தற்போது France இல் வாழ்ந்து வந்தவருமான திருமதி ஞானாம்பிகை நல்லநாதன் 19.11.2016 சனிக்கிழமை France இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு வல்லிபுரம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தப்பு- நல்லநாதன் (France) அவர்களின் அன்பு மனைவியும் மோகனமுரளி (France) ஜனகன் (France)ஆகியோரின் அன்புத் தாயாரும் யோகா, பாலச்சந்திரன்(Canada) , காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் ஜெகதாம்பிகை, ஆனந்தசிவம் (Canada), காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் லலிதாம்பிகை (France), கங்காதரன், ஶ்ரீதரன், ராதாமனோகரன்(Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

No.11,Rue de L'etoil,
93000, Boigny, France

தகவல்:
**வ.ஶ்ரீதரன்**
**(சகோதரன்)**

**077 753 3596**

## மரண அறிவித்தல்

### செல்வி நாகமணி பரமேஸ்வரி



**தோற்றம்** 26.06.1953 **மறைவு** 21.11.2016

வீரமாணிக்கதேவன்துறை மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சாத்தாவத்தை வைரவர் கோயிலடி, மூத்ததம்பி வீதி,மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட செல்வி நாகமணி பரமேஸ்வரி நேற்று (21.11.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமணி - சுகிர்தவதியம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன்(ஓய்வு பெற்ற நிலஅளவையாளர்) காலஞ்சென்ற இராஜேஸ்வரி, வடிவேஸ்வரன்(உதவி பாதுகாப்பு உத்தியோகத்தர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சோமசுந்தரம், லலிதபவானி, செல்வகுமாரி ஆகியோரின் மைத்துனியும் கிருஷ்ணதாஸ் (ஆசிரியர்), ரூபதாஸ்(பொது சுகாதார பரிசோதகர்), விமலதாஸ்(மென்பொருள் வடிவமைப்பாளர்) ஆகியோரின் அன்புச் சிறியதாயும் வித்யா(நிர்வாக உத்தியோகத்தர்), கிரிஜா(அபிவிருத்தி உத்தியோகத்தர்), கிருஷ்ணானந்(களனி பல்கலைக்கழகம்), ஹரிகரன் (விளையாட்டு உத்தியோகத்தர்) பிரதிகரன் ஆகியோரின் பாசமிகு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.11.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**மானிப்பாய்.**

**தகவல்**
**கு.சோமசுந்தரம் - 077 967 2371**
**நா.ஜெகதீஸ்வரன் - 071 839 6075**
**நா.வடிவேஸ்வரன் - 078 911 4026**

(J 6275)
(14.17)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
### செல்லப்பா தியாகராசா



**தோற்றம்**
**08.11.1933**

**மறைவு**
**04.12.2015**

திதி: 22.11.2016

காலனும் தன்கைக்கை கணப்பொழுதில் முடித்துவிட
ஆண்டொன்று அவனியிலே கரைந்து விட்டதப்பா
கண்டது கனவென்று தினமும் கண்திறந்து பார்க்கின்றோம்
கண்முன்னே நின்னுருவம் கண்ணீரில் கரைகிறது
காரிருள் சூழ்ந்த பாரினுள் எம்மையெல்லாம்
தவிக்க விட்டு வானுலகம் சென்றீரோ அப்பா !
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

சிறுவிளான்,
இளவாலை.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## நீங்காத நினைவில் இரண்டாம் ஆண்டு



உயர்திரு **வேலாயுதர் சின்னத்தம்பி சொக்கலிங்கம்**
(J.P)
(சிரேஷ்ட ஓய்வுநிலை உத்தியோகத்தர்
இலங்கைத்துறைமுக அதிகாரசபை)

திதி: கார்த்திகை நவமி

தந்தையாய் இருந்தெமக்கு தகுதியாய்
தலைமை தாங்கி சுந்தர வாழ்விலெம்மை
சுடர் விடும் வழியும் காட்டி
பிறந்த மானிடர் இறப்பது நியதி என்று
நோயினால் நொடியினில் எமைப் பிரிந்தீர்
எம் ஆருயிர்த் தந்தையே தவிக்கின்றோம்
உம் வழிகாட்டல் எதுவுமின்றி........
ஆருயிர் அப்பாவே உங்களுடன் வாழ்ந்த
மகிழ்ச்சிமிக்க காலங்கள் என்றும்
எமதுயிர் உள்ள[illegible]

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் விகடகவி
### மு.திருநாவுக்கரசு
**JPUM**
**(ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி)**



**தோற்றம்**
**01.04.1939**

**மறைவு**
**09.11.2014**

நேசிப்பவர்கள் எல்லாம்
நம்மோடு நிலைத்துவிட்டால்
நினைவின் மொழியும்
பிரிவின் வலியும்
தெரியாமல்ப் போய்விடும்
என்றதால் தானோ நீங்கள்
எம்மை விட்டகன்றீர்கள்

(ஜே/6256)(20)

127/7A, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவில் வாழும்
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆஸ்திரேலியாவில் அதிரடி மாற்றங்கள்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான மூன்றாவது ஆட்டத்துக்கான ஆஸ்திரேலிய அணி ஏகப்பட்ட அதிரடி மாற்றங்களுடன் அறிவிக்கப்பட்டது.

மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் 177 ஓட்டங்களாலும், இரண்டாவது ஆட்டத்தில் இன்னிங்ஸ் மற்றும் 80 ஓட்டங்களாலும் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. ஆஸ்திரேலியாவில் வைத்து அந்த அணி சந்தித்த இந்த படுதோல்விகளை அடுத்து முன்னாள் வீரர்கள் பலரும் தெரிவுக்குழுவை கடுமையாக விமர்சித்தனர். இதனையடுத்து தலைமைத் தேர்வாளர் தனது பதவியிலிருந்து விலகினார். அந்த இடத்துக்கு ஹோர்ன்ஸ் தலைமைத் தேர்வாளராக நியமிக்கப்பட்டார்.

மூன்றாவது ஆட்டத்துக்காக ஆஸ்திரேலிய அணியில் பெரும் மாற்றங்கள் செய்யப்பட்டன. ஜோபர்னஸ், அடம் வோக்ஸ், பெர்குசன், நெவில், மென்னி ஆகியோர் அணியிலிருந்து நீக்கப்பட்டனர். மேட்ரென்சா, ஹேண்ட்ஸ் காம்ப், நிக் மேடின்சன் ஆகிய 3 துடுப்பாட்ட வீரர்களுக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த மூவருமே அறிமுக வீரர்கள் ஆவார்கள். வேகப்பந்து வீரர்கள் சாயெர்ஸ், ஜக்சன் பேர்ட், இலக்குக் காப்பாளர் வேட் ஆகியோருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. 1984 ஆம் ஆண்டுக்கு பிறகு ஆஸ்திரேலிய அணியில் 6 வீரர்கள் மாற்றம் செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

ஆஸ்திரேலிய அணி: சிமித் (தலைவர்), வோர்னர், மேட் ரென்சா, உஸ்மான் கவாயா, ஹேண்ட்ஸ், கோம்ப், நிக்மேடின்சன், வேட், ஸ்ராக், கசில்வூட், லையன், ஜக்சன் பேர்ட், சாயெர்ஸ்.

தென்னாபிரிக்க அணி: பிளாசிஸ் (தலைவர்), அம்லா, ஸ்ரீபன் குக், டுமினி, மகாராஜ், பிளன்டர், ரபாடா, சம்சி, அப்பொட், பவுமா, குயின்டன் டி ஹொக், எல்கர், மோர்கல், பீற்றரோறியஸ், ரொஸ்சொவ், விலாஸ். (ம)

## அணியில் தொடருவார் கிரான்ட்ஹோம்

நியூசிலாந்து அணிக்காக அறிமுகமாகியுள்ள கிரான்ட்ஹோம், இரண்டாவது டெஸ்ட்டிலும் இடம் பெறுவார் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தினார் அந்த அணியின் தலைமைப்பயிற்சியாளரான மைக்.

பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் அறிமுகமான கிரான்ட்ஹோம், முதல் இன்னிங்ஸில் 6 இலக்குகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் ஒரு இலக்கையும், முதல் இன்னிங்ஸில் 29 ஓட் டங்களையும் எடுத்து சிறந்த சகலதுறை பெறுபேற்றை வெளிப்படுத்தினார். அவரே ஆட்டநாயகனாகவும் தெரிவானார். இதனையடுத்தே மைக் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

தனது அறிமுக ஆட்டத்தில் கிரான்ட்ஹோம் சிறந்த



பெறுபேற்றை வெளிப்படுத்தினார். வெற்றிக்கு இவ்வாறு பெரும் பங்களிப்பு அவரிடமிருந்து கிடைக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. நிச்சயம் அவர் இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்துக்கான அணியில் இடம்பிடிப்பார் என்று நம்புகிறேன். நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர்கள் வெளிப்படுத்திய பெறுபேறு கடந்த ஐந்து ஆட்டங்களின் சிறந்த பெறுபேறு என அவர் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆஸ்திரேலியாவை வழித்துத்துடைப்போம்



மூன்றாவது டெஸ்டிலும் வெற்றிபெற்று ஆஸ்திரேலியாவை முழுமையாக வழித்துத் துடைப்போம் என்று எச்சரித்தார் தென்னாபிரிக்க அணியின் தலைவரான பிளாசிஸ்.

மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக தென்னாபிரிக்க அணி ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்துள்ளது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலிரு ஆட்டங்களிலும் தென்னாபிரிக்காவே வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றுவதை உறுதிசெய்துள்ளது. ஆனால் கௌரவத் தோல்வியடைவதற்காக ஆஸ்திரேலியாவில் ஏகப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மூன்றாவது ஆட்டம் அடிலெய்டில் நாளைமறுதினம் ஆரம்பமாகிறது. இந்த நிலையிலேயே பிளாசிஸ் தொடரை 3:0 என்று கைப்பற்றுவது தொடர்பான நம்பிக்கையை வெளிப்படுத்தினார்.

எமது மண்ணில் வைத்து ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரை 5:0 என்று கைப்பற்றினோம். இது சிறந்த வெற்றியே. ஆனால் ஒருசிலர் ஆடுகளம் எமக்குரியது என்பதால் ஆட்டம் எமக்குச் சாதகமானது எனத் தெரிவித்தனர். அவர்களின் நிலைப்பாட்டைத் தவறு என உணர்த்துவதற்காக ஆஸ்திரேலியாவில் நடைபெறும் டெஸ்ட் தொடரை 3:0 என்று கைப்பற்ற விரும்புகிறோம். சகலதுறைகளிலும் அணியில் சமநிலைத்தன்மை உள்ளது. எனவே ஆஸ்திரேலியாவை மீண்டும் வீழ்த்த வல்ல நம்பிக்கையும் வாய்ப்பும் எம்மிடத்தில் உள்ளது என பிளாசிஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆர்சனலுக்கு எதிரான சமநிலை தோல்வி என்கிறார் மொரின்கோ

இங்கிலாந்து பிரீமியர் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் யுனைற்றெட்டை சமன்செய்தது ஆர்சனல். இந்த ஆட்டத்தில் மன்செஸ்டர் யுனைற்றெட் வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனவே ஆட்டம் சமநிலையில் முடிந்தமையானது யுனைற்றெட்டுக்கு கிடைத்த தோல்வி போன்றது என்று அந்த அணியின் முகாமையாளரான மொரின்கோ தெரிவித்தார்.

உண்மையாகவே, இது தோல்வி போன்று உணர்வைத் தருகிறது. ஆர்சனலுக்கு, இது வெற்றி போன்றே தெரியும். ஆகவே நான், ஆர்சனலுக்கு எதிராகத் தோல்வியடைந்துள்ளேன். இறுதியாக, எனக்குத் தோல்வி கிடைத்துவிட்டது என்ற மொரின்கோ தெரிவித்தார். (ம)

# வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கேன் வில்லியம்சன் பாராட்டு



நியூசிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் உலகத் தரமானவர்கள் என புகழ்ந்து தள்ளியுள்ளார் அந்த அணியின் தலைவரான வில்லியம்சன்.


பாகிஸ்தானுக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவடைந்த டெஸ்ட் ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர்கள் பெரும் பங்காற்றினர். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே வில்லியம்சன் இவ்வாறு தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு எதிராகக் கிடைத்த வெற்றி சிறப்பானது. நீண்ட தோல்வியைத் தந்த இந்தியத் தொடருக்குப் பின்னர் இந்த வெற்றி கிடைத்துள்ளது. நீண்ட நேரத்துக்கு சரியான இடங்களில் எமது நான்கு வேகப்பந்து வீச்சாளர்களும் பந்து வீசியமை உலகத் தரமிக்கது என வில்லியம்சன் மேலும் தெரிவித்தார். (ம)

## ஆஸி. தெரிவுக் குழுவில் கிரேக் சப்பலுக்கு இடம்

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைமைத் தேர்வாளர் ரொட் மார்ஸ் தனது பதவியிலிருந்து விலகியதை அடுத்து அந்த இடத்துக்கு ட்ரெவர் ஹோர்ன்ஸ் தெரிவுசெய்யப்பட்டார். ட்ரெவர் ஹோர்ன்ஸின் இடத்துக்கு கிரேக் சப்பல் நியமிக்கப்பட்டார்.

ஆஸ்திரேலிய அணியின் தொடர் தோல்விகளை அடுத்து அந்த அணியின் தலைமைத் தேர்வாளரான ரொட் மார்ஸ் தனது பதவியிலிருந்து விலகினார். இதனையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் பல போட்டிகள் இருந்தபோதிலும் தேர்வாளர் குழுவின் முக்கிய உறுப்பினராகச் செயற்பட்ட ஹோர்ன்ஸ் இடைக்காலத் தலைமைத் தேர்வாளராக நியமிக்கப்பட்டார். உறுப்பினராக இருந்தவர் தலைமைத் தேர்வாளரானதால் ஓர் உறுப்பினர் பதவி வெற்றிடம் ஏற்பட்டது. இதனையடுத்து அந்த இடத்துக்கு கிரேக் சப்பல் நியமிக்கப்பட்டார். (ம)



## இதுவே எனது கனவு திரிபானோ உருக்கம்

முத்தரப்புத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டத்தில் சிம்பாப்வே, தனது தோல்வியைத் தவிர்த்து ஆட்டத்தை சமநிலையில் முடிக்க உதவிய திரிபானோ "இதுவே எனது கனவு" எனக் குறிப்பிட்டார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே 257 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் இறுதிப்பந்துப் பரிமாற்றத்தில் 4 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற நிலை இருந்தது. 50 ஆவது பந்துப் பரிமாற்றத்தை வீசவந்தார் திரிபானோ. 3 ஓட்டங்களை மாத்திரமே விட்டுக் கொடுத்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே திரிபானோ அவ்வாறு தெரிவித்தார். சிறிய வயது முதல் நான் காத்திருந்த சந்தர்ப்பம் இது தான். இன்று என்னால் எமது ரசிகர்கள் துள்ளிக் குதித்தனர் என திரிபானோ மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்னும் இரு வாரத்தில் தெரியும் ரசலின் முடிவு

ஊக்கமருந்துப் பாவனைக்கு எதிரான உலக முகவராண்மையின் சட்ட விதிகளை, மேற்கிந்தியத் தீவுகளின் சகலதுறை வீரர் அன்ட்ரே ரசல் மீறினாரா என்பது தொடர்பான இறுதி முடிவு, 2 அல்லது 3 வாரங்களில் அறிவிக்கப்படவுள்ளது.

ஊக்கமருந்துப் பாவனைக்கு எதிரான விதிகளின்படி, வீரரொருவர், தான் இருக்கும் இடங்களை அறிவிப்பது அவசியமானதும். ஆனால், கடந்தாண்டு ஜனவரி 1, ஜூலை 1, ஜூலை 25 ஆகிய நாள்களில் தனது இருப்பிடங்களை அறிவிக்காமல், ஊக்கமருந்துச் சோதனைகளை, ரசல் தவறவிட்டுள்ளார். 3 சோதனைகளைத் தவறவிடுதல், சோதனையில் தோற்பதற்கு ஈடானது என்பதாலேயே, இது தொடர்பான இறுதி முடிவு, ரசலின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதாக அமையவுள்ளது. (ம)



## "மீண்டெழுவோம்"

இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் கிடைத்த தோல்வியடை அடுத்து, அடுத்த ஆட்டத்தில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்துவோம் எனத் தெரிவித்தார் பரிஸ்ரௌவ்.

ஆம்பம் முதல் ஆதிக்கம் செலுத்திவந்த இந்தியா 246 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. இதயைடுத்து கருத்துத் தெரிவித்த பரிஸ்ரௌவ், ஆட்டத்தில் தோற்றமை வலிக்கிறது. இந்திய மண்ணில் சாதிக்கக்கூடிய நம்பிக்கை எம்மிடம் மிகையாகவே உள்ளது. தோல்வியிலிருந்து நிச்சயம் மீண்டெழுந்து அடுத்த ஆட்டத்தில் சாதிப்போம் –என்றார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஆட்டம் மொகாலியில் எதிர்வரும் 26 ஆம் திகதியும், நான்காவது ஆட்டம் மும்பையில் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதியும், ஐந்தாவது ஆட்டம் சென்னையில் டிசெம்பர் 16 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)





# இரண்டாவது டெஸ்ட்

# இந்தியா அபார வெற்றி

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 246 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் 1:0 என்று முன்னிலை பெற்றது இந்திய அணி.

விசாகப்பட்டினத்தில் ஆட்டம் நடைபெறுகிறது. நாணயச் சுழற்சியில் வென்ற கோக்லி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார். 455 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது இந்தியாவின் இன்னிங்ஸ். அதிகபட்சமாக கோக்லி 167 ஓட்டங்களையும், புஜரா 119 ஓட்டங்களையும், அஸ்வின் 58 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அன்டர்சன், மொயின் அலி இருவரும் தலா 3 இலக்குகளையும், ரசிட் 2 இலக்குகளையும், புரோட், ஸ்ரோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 255 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக ஸ்ரோக்ஸ் 70 ஓட்டங்களையும், பரிஸ்ரௌவ் 53 ஓட்டங்களையும், ரூட் 53 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அஸ்வின் 5 இலக்குகளையும், சமி, யாதேவ், ஜடேயா, ஜெயன்ட் யாதேவ் ஆகியோர் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

200 ஓட்டங்கள் முன்னிலையுடன் பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 204 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக கோக்லி 81 ஓட்டங்களையும், ஜெயந் யாதேவ் 27 ஓட்டங்களையும், ரகானே 26 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் புரோட், ரசிட் இருவரும் தலா 4 இலக்குகளையும், அண்டர்சன், மொயின் அலி இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 200 ஓட்டங்களால் முன்னிலை பெற்றமை கைகொடுக்க இங்கிலாந்து 405 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆடுகளம் சுழலுக்கு சாதகமாக மாறிய பின்னர் இது ஓர் பெரிய இலக்கே. இதனால் ஆரம்பம் முதலே தற்காப்பு ஆட்டத்தை கையிலெடுத்தது இங்கிலாந்து. குக் 54 ஓட்டங்களையும் (188 பந்துகளில்), கமீட், ரூட் 25 ஓட்டங்களையும் (144, 107 பந்துகளில்) பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர். நான்காம் நாள் முடிவில் அந்த அணி 87-2 என்றிருந்தது. ரூட் 5 ஓட்டங்களுடனும் ட்க்லெட் ஓட்டம் எதனையும் பெறாத நிலையிலும் களமிறங்கினர். வந்தவேகத்தில் பவிலியனுக்குத் திரும்பினார் டக்லெட். ரூட்டும் ஆட்டமிழக்க, இங்கிலாந்தின் நம்பிக்கையாக மாறினார் பரிஸ்ரௌவ். அவர் ஓர் முனையில் நிலைத்து நின்றாலும், மறுமுனையில் இலக்குகள் சரிய 158 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது இங்கிலாந்து. 246 ஓட்டங்களால் வென்றது இந்தியா.

பந்துவீச்சில் அஸ்வின், ஜெயந் யாதேவ் இருவரும் தலா 3 இலக்குகளையும், சமி, ஜடேயா இருவரும் தலா இரு இலக்குகளையும் கைப்பற்றினர். (ம)

## சிக்கலில் மிஸ்பா

நியூசிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் தலைவரான மிஸ்பா கலந்துகொள்வதில் சிக்கல் ஏற்பட்டது.

மிஸ்பாவின் மாமனார் உயிரிழந்ததை அடுத்து அவர் பாகிஸ்தானுக்கு திரும்பவுள்ளார் என்பதாலேயே இரண்டாவது ஆட்டத்தில் அவர் பங்குபற்றுவதில் சிக்கல் ஏற்பட்டது.

தொடரில் இரு ஆட்டங்கள். இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஆட்டத்தில் 8 இலக்குகளால் நியூசிலாந்து வெற்றிபெற்றது.

இரண்டாவது ஆட்டம் கமில்டன் மைதானத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்ததால் இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற்றாலேயே பாகிஸ்தானால் தொடரை குறைந்தபட்சம் சமநிலையில் முடிக்க இயலும். இந்த நிலையில் அணியின் தலைவரும் அனுபவ வீரருமான மிஸ்பா விலகினால் அது பாகிஸ்தானுக்கு பெரும் பின்னடைவைக் கொடுக்கும். (ம)



## பார்சிலோனா மலாகா ஆட்டம் சமநிலை

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பார்சிலோனா, மலாகா அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

இரண்டு அணியினரும் நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் கோல் எதனையும் பெறாத நிலையிலேயே ஆட்டம் சமநிலை கண்டது. மலாகாவை பார்சிலோனா இலகுவாகத் தோற்கடிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பெரும் போராட்டத்தை மலாகா வெளிப்படுத்தியது.

ஆட்டம் சமநிலை கண்டமைக்கு முக்கிய காரணமாக மெஸ்ஸி களமிறங்காமையைக் குறிப்பிடலாம். அவர் உடல்நலக் குறைபாட்டைக் காரணம்காட்டி கடைசி நேரத்தில் ஆட்டத்திலிருந்து விலகியிருந்தார். மற்றொரு முன்னணி வீரரான சுவாரஸும் விலகியமை பார்சிலோவுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொனால்டோவின் ஆட்டத்தில் ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை

அத்லெட்ரிகோ மட்ரிட்டுக்கு எதிராக மூன்று கோல்களைப் பதிவுசெய்த றொனால்டோவின் ஆட்டத்தில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை எனத் தெரிவித்தார் ராமோஸ்.
தெலெட்ரிகோ மட்ரிட்டுக்கு எதிரான வெற்றியில் றொனால்டோவின் பங்களிப்பு மிகமிக அதிகம். பெறப்பட்ட மூன்று கோலையும் அவரே பதிவுசெய்தார். அவரிடம் உள்ள திறமை, அவரின் விளையாட்டு உத்தி ஆகியவற்றை வைத்துப் பார்க்கின்றபோது றொனால்டோ ஹற்றிக் கோல்களைப் பதிவுசெய்ததில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. அவரது ஆட்டம் நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. ரியல் மட்ரிட்டில் முக்கியமான வீரர்களில் றொனால்டோவும் ஒருவர் என ராமோஸ் மேலும் தெரிவித்தார். (ம)





முத்தரப்புத் தொடரில் இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான நேற்றைய ஆட்டத்தில் மழையின் ஆதிக்கம் அதிகரித்திருந்தது. பவுண்டரிக்கு அண்மையிலுள்ள தாழ்வான பகுதிகளில் மழைநீர் அதிகம் சேர்ந்ததால் ஆட்டம் நடைபெறுவதில் சிக்கல்கள் ஏற்பட்டன. (ம)

## முதலிடத்தில் ரியல் மட்ரிட்

ஸ்பெய்ன் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் மிகவும் பழமையான கால்பந்துத் தொடரான லா லிகா தொடரின் புள்ளிப்பட்டியல் நேற்றுப் புதுப்பிக்கப்பட்டது. ரியல் மட்ரிட் முதலிடத்தில் உள்ளது.
12 ஆட்டங்களில் களமிறங்கிய ரியல்மட்ரிட் 24 கோல்களைப் பதிவுசெய்து 30 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. ரியல் மட்ரிட்டின் கடும்போட்டிக் கழகமான பார்சிலோனா 19 கோல்களுடன் 26 புள்ளிகளைப் பெற்று இரண்டாவது இடத்திலும் செவில்லா 15 கோல்களுடன் 24 புள்ளிகளைப் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளன.
அடுத்தடுத்த இடங்களில் வில்லாரியல், ரியல் சொசைடட், அத்லெட்ரிகோ மட்ரிட் ஆகிய அணிகள் உள்ளன. (ம)

# இங்கிலாந்துத் தொடர் அன்டி முர்ரே சம்பியன்



இங்கிலாந்து ரென்னிஸ் தொடரில் சம்பியனானார் பிரிட்டன் வீரர் அன்டி முர்ரே.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீரர்களுக்கு மட்டுமாக வருட இறுதியில் நடத்தப்படும் ரென்னிஸ் தொடர் இங்கிலாந்தில் நடைபெற்றது.
இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீரரான பிரிட்டனின் அன்டி முர்ரேயும், இரண்டாவது இடத்திலுள்ள சேர்பிய வீரர் ஜோகோவிக்கும் மோதினார்கள்.
மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை பெற்றார் முர்ரே. அவர் இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்தி அந்த செற்றையும் 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானார். இந்த வெற்றியின் மூலம் குறைந்தது அடுத்த நான்கு மாதங்கள் வரையான காலப்பகுதிவரை முதலிடத்தைத் தக்கவைப்பதற்கான வாய்ப்பை முர்ரே பெற்றார். (ம)

# செல்சிக்கு எதிராக வருவார் மெஸ்ஸி

ஐரோப்பிய கால்பந்துத் தொடரில் செல்சிக்கு எதிரான ஆட்டத்துக்காக நிச்சயம் மெஸ்ஸி களமிறங்குவார் என நெய்மர் நம்பிக்கை வெளியிட்டார்.
லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மலாகா– பார்சிலோனா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரரான மெஸ்ஸி களமிறங்கவில்லை. உடல்நிலை சுகவீனம் காரணமாகவே அவர் களமிறங்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் பார்சிலோனாவுக்கு எதிராக பெரும் போராட்டத்தை வெளிப்படுத்திய மலாகா ஆட்டத்தை சமநிலையில் முடித்தது.
பார்சிலோனாவின் அடுத்த ஆட்டம் நாளைமறுதினம் நடைபெறவுள்ளது. ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் தொடரில் செல்சி அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்த ஆட்டத்திலும்



மெஸ்ஸியின் பங்குபற்றல் சந்தேகத்தக்குள்ளாகியிருந்த நிலையில் மெஸ்ஸி நிச்சயம் களமிறங்குவார் என சக வீரரான நெய்மர் தெரிவித்தார்.
மெஸ்ஸிக்கு காயம் ஒன்றுமில்லை. மலாகாவுக்கு எதிரான ஆட்டத்தில் களமிறங்கும்போது அசௌகரியமாக இருப்பதாக உணர்ந்தார். ஏனைய ஆட்டங்களைக் கருத்தில்கொண்டு அவருக்கு ஓய்வு வழங்கப்பட்டது. செல்சிக்கு எதிரான ஆட்டத்தில் அவர் களமிறங்குவார் என நெய்மர் மேலும் தெரிவித்தார். (ம)

வடமாகாணப் பரீட்சைகளுக்கான வகுப்புக்கள்
புதன், வியாழன் பி.ப 5.00-6.30 மணிவரை
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

## வெற்றிகளால் திருப்தியடையவில்லை என்கிறார் கோக்லி

இந்திய அணிக்கு தொடர் வெற்றிகள் தேவைப்படுகிறது. இதனால் ஒவ்வொரு ஆட்டத்திலும் கிடைக்கும் வெற்றிகளால் நாம் திருப்தியடைவதில்லை எனத் தெரிவித்தார் கோக்லி.
இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
நான் பந்துகளை சிறப்பாகக் கணிப்பதாகவே உணர்கிறேன். எனது ஆட்டத்தை தொடர்ந்தும் தக்கவைக்க இயலுமான முயற்சிகளை மேற்கொள்வேன். பந்துவீச்சாளர்களின் செயற்பாடுகள் சிறந்த முறையில் அமைந்தன. குறிப்பாக ஜெயந்த் யாதவ் சிறப்பாகச் செயற்பட்டார். இது அவரது அறிமுக ஆட்டமாகும். ஆனால் அவரைப்பற்றி அவரது ஆட்டம் நிறையப் பேசுகிறது. ஓர் இளம் வீரர் என்னிடம் வந்து தனக்கு என்ன மாதிரியான கள வியூகம் அமைக்க வேண்டுமென்று தெரிவிப்பது பாராட்டுக்குரியது. அடுத்த ஆட்டத்திலும் ஆதிக்கம் தொடரும் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.